REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK
2023 ஜுலை 21 வெள்ளிக்கிழமை
# தினகரன்
THINAKARAN
වදනතරන්
வரு. 91 இல. 171 | Friday 21, July, 2023 | 20பக்கங்கள் | 50/-

## மத்திய வங்கி சட்டமூலத்துக்கு மேலதிகமாக 42 வாக்குகள்

திருத்தங்களுடன் நிறைவேறியது

ஆதரவாக 66, எதிராக 24 வாக்குகள்

லோரன்ஸ் செல்வநாயகம்



இலங்கை மத்திய வங்கி சட்டமூலம் நேற்று 42 மேலதிக வாக்குகளால் சபையில் நிறைவேற்றப்பட்டது. சட்டமூலத்திற்கு ஆதரவாக 66 வாக்குகளும் எதிராக 24 வாக்குகளும் 06

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் அனர்த்தம்

## சிங்கப்பூரில் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தை வெற்றி

காப்புறுதி வழங்க உரிமையாளர்களிடமிருந்து சாதகமான பதில்



இலங்கைப் பிரதிநிதிகளுக்கும், எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலின் காப்புறுதி உரிமையாளர்களுக்கும் இடையிலான பேச்சுவார்த்தை வெற்றியடைந்துள்ளது.

சட்ட மாஅதிபர் தலைமையிலான இலங்கைப் பிரதிநிதிகளுக்கும் எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலின் 06

## நடத்துநர் இல்லா பஸ் சேவை மூலம் வருமானம் அதிகரிப்பு

e ticketing முறையை தயாரிக்க 12 நிறுவனங்கள் தயார்

சபையில் அமைச்சர் பந்துல குணவர்தன

லோரன்ஸ் செல்வநாயகம்



பொது போக்குவரத்து பஸ் சேவைக்காக ஈ டிக்கெட்டிங் முறைமையை தயாரிப்பதற்கு பன்னிரண்டு நிறுவனங்கள் முன்வந்துள்ளதாக ஊடகத்துறை மற்றும் போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்தன பாராளுமன்றத்தில் தெரிவித்தார். ஈ டிக்கெட்டிங் முறைமைக்குள் கிவ்.ஆர் மற்றும் காட் சிஷ்டத்தையும் உட்படுத்தி டிக்கெட் விநியோகிக்க முடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற வாய்மூல விடைக்கான 06

## ஜனாதிபதிக்கு புதுடில்லியில் மகத்தான வரவேற்பு



இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு நேற்று புதுடில்லி சென்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு புதுடில்லி விமான நிலையத்தில் மகத்தான வரவேற்பளிக்கப்பட்டது. இந்திய வெளியுறவுத்துறை இணை அமைச்சர் வீ. முரளிதரன் விமான நிலையத்தில் ஜனாதிபதியை வரவேற்றபோது பிடிக்கப்பட்ட படம்.

GCE A/L பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கு விசேட சலுகை

# பாடசாலை வரவு நாட்கள் 40 சதவீதமாக குறைப்பு

80 வீதமான வருகையை இவ்வருடத்தில் மட்டும் குறைப்பதாக கல்வி அமைச்சர் சுசில் தெரிவிப்பு

2020, 2021 ஆண்டுகளில் நிலவிய கொவிட் 19, மற்றும் அதன் பின்னர் ஏற்பட்ட நெருக்கடி நிலைகளை கருத்திற்கொண்டு இத்தீர்மானம் எடுக்கப்பட்டதாகவும் அமைச்சர் தெரிவிப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்



கல்வி பொதுத் தராதர உயர்தர பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களுக்கு விதிக்கப்பட்டுள்ள 80 வீதமான பாடசாலை வருகை, இவ்வருடத்துக்கு மாத்திரம் 40 வீதமாக குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

இது தொடர்பில் வலயக்கல்விப் பணிப்பாளர்கள் மற்றும் பாடசாலை அதிபர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் கல்வி அமைச்சர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று விசேட கூற்றொன்றை முன்வைத்து உரையாற்றுகையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், இம்முறை கல்விப் பொதுத் தராதர உயர்தர பரீட்சைக்குத் தோற்றவுள்ள பாடசாலை மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

ஜூலை17ஆம் திகதிய கடிதத்துக்கமைய 06

## QR எரிபொருள் ஒதுக்கீடு ஆகஸ்ட் முதல் அதிகரிப்பு

மீளாய்வு கூட்டத்தில் தீர்மானம்



கியூ.ஆர் முறைமையிலான எரிபொருள் ஒதுக்கீடு அடுத்த மாதம் மேலும் அதிகரிக்கப்படுமென மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேக்கர தெரிவித்துள்ளார். நேற்று வியாழக்கிழமை (20) நடைபெற்ற கூட்டத்தில், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தால் அடுத்த ஆறு மாதங்களுக்கான எரிபொருள் திட்டங்கள் மற்றும் விநியோகம் தொடர்பில் மீளாய்வு செய்யப்பட்டதாக அமைச்சர் தனது டுவிட்டர் பதிவில் தெரிவித்தார். இதன்படி, எரிபொருள் இறக்குமதித் திட்டங்கள், 06

## யாழ். பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் மனதை உருக்கிய நிகழ்வு

இறந்த மகனின் பட்டம் தாயிடம் கையளிப்பு

தேகாந்த நிலையில் பட்டமளிப்பு நிகழ்வு




யாழ். விசேட நிருபர்

யாழ். பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் பட்டம் பெறவிருந்த மாணவன் உயிருடன் இல்லாத காரணத்தால், மாணவனின் தாயாரிடம் அவரின் பட்டம் கையளிக்கப்பட்டது.

யாழ். பல்கலைக்கழக வவுனியா வளாகத்தை (தற்போதைய வவுனியா பல்கலைக்கழகத்தை) சேர்ந்த திசாநாயக முதியன்சலாகே ஹஷான் சகார திசாநாயக்க என்ற மாணவர், பிரயோக கணிதம் மற்றும் கணிப்பிடலில் விஞ்ஞானமாணிப் 06

## தரம் 05 பரீட்சை ஒக்.15 இல் உயர் தர பரீட்சை நவ. 27 இல்

2023 ஆம் ஆண்டுக்கான தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சை மற்றும் க.பொ.த உயர்தரப் பரீட்சைக்கான திகதிகளை பரீட்சைகள் திணைக்களம் நேற்று வியாழக்கிழமை (20) அறிவித்துள்ளது. இதன் பிரகாரம், தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சை ஒக்டோபர் (15) ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை எதிர்வரும் நவம்பர் மாதம் (27) திங்கட்கிழமை ஆரம்பமாகி டிசம்பர் மாதம் (21) வியாழக்கிழமை வரை நடைபெறுமெ ன்றும் பரீட்சைகள் திணைக்களம் நேற்று அறிவித்துள்ளது.

## நம்பிக்கையில்லா பிரேரணையை எதிர்கொள்ள தயாராக உள்ளேன்

சுகாதார அமைச்சர் கெஹெலிய எதிரணிக்கு சவால்

லோரன்ஸ் செல்வநாயகம்



"எனக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவருவதாயின் விரைவாகக் கொண்டு வாருங்கள். அதனை எதிர்கொள்ள தயாராகவே உள்ளேன்". இவ்வாறு சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

திருட்டுப் பொருட்களைக் கொண்டு வந்து உயர் நீதிமன்றத்தால் வெளியேற்றப்பட்ட நபர் நானல்ல எனவும் சபையில் அவர் குறிப்பிட்டார். 06

2023 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில்

## இலங்கை முதலீட்டுச் சபையில் 211 மில்லியன் டொலர் முதலீடு

வெளிநாட்டு நேரடி முதலீடுகள் அதிகரிப்பு



2023 முதல் காலாண்டில் இலங்கை முதலீட்டு சபை 211 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான முதலீடுகளைப் பெற்றுள்ளதாகவும், ஜனவரி முதல் ஜூலை வரையான காலப்பகுதியில் பெறப்பட்ட முதலீட்டுத் திட்டங்களில் 682 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான முதலீடுகள், இலங்கை முதலீட்டு சபை அங்கீகாரம் வழங்கக் கூடிய நிலையில் இருப்பதாகவும் முதலீட்டு ஊக்குவிப்பு பதில் அமைச்சர் 06

## GSP+வரிச்சலுகை மேலும் 04 வருடங்களுக்கு நீடிப்பு

இலங்கையிலுள்ள பிரதிநிதி அலுவலகம் தகவல்




ஐரோப்பிய ஒன்றியத்தின் ஊடாக இலங்கைக்கு வழங்கப்படும் ஜிஎஸ்பி பிளஸ் வரிச்சலுகையை மேலும் நான்கு ஆண்டுகளுக்கு நீடிக்கவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இவ்வாண்டு டிசம்பர் 31 ஆம் திகதியுடன் வரிச்சலுகை நிறைவடையவுள்ளதால், 2027 டிசம்பர் 31 வரை மேலும் நான்கு ஆண்டுகளுக்கு நீடிக்க ஐரோப்பிய ஆணைக்குழு நேற்று முன்தினம் (19) தீர்மானித்துள்ளது. 06



'டில்மா' தேயிலை நிறுவுனர் மறைவு 03

93 ஆவது வயதில் காலமானார்



இலங்கை தமிழர் உரிமைகளை பாதுகாக்கும் வகையில் பேசவும் 03

ஜனாதிபதி ரணிலிடம் வலியுறுத்துமாறு பிரதமர் மோடிக்கு ஸ்டாலின் கடிதம்




கடன் அட்டைகளுக்கான வட்டி வீதம் குறைகிறது 03

34 வீதத்திலிருந்து 30 ஆக குறைகிறது

இலஞ்ச, ஊழல் குற்றச்சாட்டு

## ஜோன்ஸ்டனுக்கு எதிரான வழக்கு நவம்பர் 24 இல்



முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ உள்ளிட்ட மூவருக்கு எதிராக இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை விசாரிக்கும் திகதியை கொழும்பு மேல் நீதிமன்றம் நிர்ணயித்துள்ளது.

இந்த வழக்கு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி நவரத்ன மாரசிங்க முன்னிலையில் நேற்று (20) 06

## மதுரையிலிருந்து-யாழுக்கு விரைவில் விமான சேவை

இந்திய ஊடகங்களில் செய்திகள்



இந்தியாவின் மதுரையிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு விரைவில் விமான சேவை ஆரம்பிக்கப்படவுள்ளதாக இந்திய செய்திகள் தெரிவிக்கின்றன.

இதற்காக இந்தியாவிலுள்ள தனியார் விமான சேவை நிறுவனங்களுடன் இலங்கையின் விமான சேவைகள் அமைச்சு பேச்சுவார்த்தை நடத்தி வருவதாக 'த ஹிந்து' செய்தி வெளியிட்டுள்ளது. விமான சேவையை வாரத்துக்கு 07 நாட்களும் 06

மினுவாங்கொடையில் துப்பாக்கிச் சூடு

## பாதாள உலகக் குழுவின் முக்கிய உறுப்பினர் பலி



மினுவாங்கொடை – மஹகம பகுதியில் விசேட அதிரடிப்படையினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில், பாதாள உலகக் குழுவொன்றின் முக்கிய உறுப்பினர் ஒருவர் உயிரிழந்துள்ளார். இச்சம்பவம் நேற்று வியாழக்கிழமை (20) அதிகாலை இடம்பெற்றுள்ளது.

விசேட அதிரடிப்படையினர் மினுவாங்கொடை – மஹகம பகுதியில் மேற்கொண்ட சோதனை 06

## கெஹெலியவுக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை

எம்பிக்கள் நேற்று கைச்சாத்து



சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்லவுக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தி நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டுவரவுள்ளது. இதற்கான நடவடிக்கையாக நேற்று (20) பிரேரணையில் எம்பிக்கள் கைச்சாத்திட்டுள்ளனர். அண்மைய காலங்களில், தரமற்ற மருந்துகளை இறக்குமதி செய்து அவற்றைப் பயன்படுத்தியதால், அதிக எண்ணிக்கையிலான இறப்புகள் நிகழ்ந்தன.

இது குறித்து ஐக்கிய மக்கள் சக்தியினர் தொடர்ச்சியாக அரசாங்கத்துக்கு அறிவுறுத்தினர். 06

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழக 37 ஆவது பொதுப்பட்டமளிப்பு





யாழ். விசேட நிருபர்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 37 ஆவது பொதுப்பட்டமளிப்பு விழாவின் இரண்டாம் நாள் அமர்வுகள் நேற்றைய தினம் நடைபெற்றன.

நேற்றைய தினம் நடைபெற்ற நான்காம் அமர்வில் இரண்டு உயர் பட்டங்களும், 240 பட்டங்களும், ஐந்தாம் அமர்வில் இரண்டு உயர் பட்டங்கள் உட்பட 222 பட்டங்களும், ஆறாவது அமர்வில் 58 உயர் பட்டங்கள் உட்பட 300 பட்டங்களும் வழங்கப்பட்டன. நேற்றைய அமர்வுகளில், உயர் பட்டப் படிப்புகள் பீடம், விஞ்ஞான பீடம், கலைப்பீடம் மற்றும் வவுனியா வளாகத்தைச் சேர்ந்த வியாபாரக் கற்கைகள் பீடம், பிரயோக விஞ்ஞான பீடம் மற்றும் தொழில் நுட்பக் கற்கைகள் பீடங்களைச் சேர்ந்த பட்டதாரிகளுக்கும், யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவ அலகைச் சேர்ந்த சித்த வைத்திய சத்திர சிகிச்சைமானி பட்டதாரிகளுக்கும் பட்டங்கள் வழங்கப் பட்டுள்ளன.

## வடக்கின் உதயம்

# நகுலேஸ்வர குருக்களின் மறைவுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இரங்கல்

பஞ்ச ஈச்சரங்களில் ஒன்றான புகழ் பெற்ற நகுலேஸ்வர பெருமான் ஆதீன கர்த்தா இராஜ ஸ்ரீ. கு.நகுலேஸ்வர குருக்களின் மறைவு, இலங்கையின் இந்து பக்தர்களையும் பெரும் துயரில் ஆழ்த்தியுள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் ஜனாதிபதி வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில், 'சிவாகம கலாநிதி' கீரிமலை நகுலேஸ்வர பெருமான் ஆதீன கர்த்தா இராஜஸ்ரீ கு.நகுலேஸ்வர குருக்கள் தனது 98 ஆவது வயதில் சிவப்பிராப்தி நிலை எய்திய செய்தி மிகவும் கவலையளிக்கிறது.

பஞ்ச ஈச்சரங்களில் ஒன்றான புகழ் பெற்ற நகுலேஸ்வர பெருமான் ஆதீன கர்த்தா இராஜஸ்ரீ. கு.நகுலேஸ்வர குருக்களின் மறைவு இலங்கையின் இந்து பக்தர்களையும் பெரும் துயரில் ஆழ்த்தியுள்ளது.

இலங்கை நாட்டின் மூத்த சிவாச்சாரிய பெருந்தகையாக மிளிர்ந்தவரும், நகுலேஸ்வர பெருமான் மீது தீராத பக்தி, பற்று, அன்பு, நம்பிக்கை, உறுதி கொண்டவரும் ஆவார். நகுலேஸ்வர பெருமான் ஆலயத்தின் ஒவ்வொரு திருப்பணியிலும் குருக்களின் வகிபாகம் மறக்க முடியாததாகும். பொது மக்களின் அன்புக்கு பாத்திரமான அவர் பாரத தேசத்தின் மரியாதைக்கும் உரியவராக விளங்கினார். தர்மபுரம் ஆதீனம் நட்சத்திர 27 ஆவது குருமணிகள் 13.12.2021 அன்று நம்பியாண்டார் நம்பி ஆலய கும்பாபிஷேக நாளன்று சிவாகம கலாநிதி எனும் சிறப்புப்பட்டத்தினை வழங்கி கௌரவம் செய்த பொழுது, அந்த கௌரவத்தினை யாழ்ப்பாணத்திற்கான இந்திய துணைத் தூதுவர் நட்ராஜ் அவர்களே குருக்களின் இருப்பிடம் சென்று வழங்கி கௌரவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

நகுலேஸ்வர பெருமான் ஆதீன கர்த்தாவாகவும், இந்துக் குருமார் அமைப்பின் கௌரவ போசகராகவும் விளங்கிய குருக்களின் ஆத்ம ஈடேற்றத்திற்கு பிரார்த்திப்பதோடு, இந்துக் குருமார் அமைப்பினருக்கும், குருக்களின்குடும்பத்தாருக்கும் இரங்கலை தெரிவிக்கிறேன்.

# வீட்டில் யாரும் இல்லாத நேரத்தில் தங்கநகைகள் திருட்டு; சகோதரன் கைது

யாழ். விசேட நிருபர்

யாழ்ப்பாண பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் சகோதரியின் நகைகளை திருடிய குற்றச்சாட்டில் அவரது சகோதரனை யாழ்ப்பாண பொலிஸார் கைது செய்துள்ளனர்.

வீட்டில் யாரும் இல்லாத சமயம் பார்த்து, வீட்டிலிருந்த தனது நகைகள் திருடப்பட்டுள்ளதாக யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை முறைப்பாடு செய்திருந்தார்.

முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார், பெண்ணின் சகோதரனை சந்தேகத்தில் கைதுசெய்து விசாரணைகளை முன்னெடுத்தனர்.

இதன்போது, சகோதரியின் நகைகளை தான் திருடியதாக சகோதரன் ஒப்புக்கொண்டுள்ளார், அதனைதொடர்ந்து அடகு வைத்து 50 ஆயிரம் ரூபாய் பணம் பெற்றுக்கொண்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அதன்பின் பொலிஸார், அடகு வைக்கப்பட்ட நகைகளையும் மீட்டுள்ளனர்.

மேலதிக விசாரணைகளின் பின்னர் சந்தேகநபரை நீதிமன்றில் ஆஜர்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

# நாவாந்துறையில் மோதல்; இரு சந்தேகநபர்கள் கைது

யாழ். விசேட நிருபர்

யாழ்ப்பாணம், நாவாந்துறை பிரதேசத்தில் இடம்பெற்ற மோதல் சம்பவத்துடன் தொடர்புடைய இருவர் கடந்த செவ்வாய்க்கிழமை (18) கைது செய்யப்பட்டுள்ளதாக, பொலிஸார் தெரிவித்தனர். நாவாந்துறையில் கடந்த ஞாயிறு (16) மாலை இடம்பெற்ற கால்பந்தாட்ட போட்டியின் போது, இரு குழுவினர்களுக்கு இடையில் முறுகல் நிலை ஏற்பட்டது. இதன்போது, வீதிகளில் கண்ணாடி போத்தல்களை உடைத்தும் அட்டகாசத்தில் இக் குழுவினர்கள் ஈடுபட்டனர்.

இச்சம்பவம் தொடர்பாக பொலிஸாருக்கு தகவல் கிடைத்த நிலையில், பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் மற்றும் பொலிஸார் மோதல் இடம்பெற்ற இடத்தில் குவிக்கப்பட்டு , நிலைமை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது. இந்த மோதலில் காயமடைந்த 4 பேர், யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். இந்த மோதல் சம்பவம் தொடர்பாக விசாரணையை முன்னெடுத்த யாழ். பொலிஸார், இருவரை கைது செய்து பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணையை முன்னெடுத்துள்ளனர்.

# பசுப்பால் விலையை நிர்ணயம் செய்யுமாறு தென்மராட்சி உற்பத்தியாளர்கள் கோரிக்கை

சாவகச்சேரி விசேட நிருபர்

தென்மராட்சியில் பசுப்பாலின் விலையை நிர்ணயம் செய்து பால் உற்பத்தியாளர்களின் நலனை பேண தென்மராட்சிப் பிரதேச செயலகம் மற்றும் உரிய திணைக்களங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென பால் உற்பத்தியாளர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

தென்மராட்சி பிரதேச செயலக மண்டபத்தில் நேற்று நடைபெற்ற பிரதேச மட்ட விவசாய குழுக் கூட்டத்தின் போதே இவ்வாறு கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக பால் உற்பத்தியாளர்கள் கருத்து தெரிவிக்கையில்,

தென்மராட்சியில் தற்போது கால்நடை வளர்ப்பதென்பது சவால் நிறைந்த விடயம். கால்நடை திருட்டு வெகுவாக அதிகரித்து வருகின்றது. அத்துடன் கால்நடை தீவனங்களின் விலையும் அதிகரித்துக் காணப்படுகின்றது. இந்நிலையில் பால் உற்பத்தியாளர்களிடம் பால் கொள்வனவு செய்யும் நிறுவனங்கள் ஒவ்வொரு கிராமங்களில் ஒவ்வொரு விலையில் பாலை கொள்வனவு செய்கின்றனர்.

சில இடங்களில் லீற்றர் 195 ரூபாவுக்கும் வேறு சில இடங்களில் 155 ரூபாவுக்கும் பால் கொள்வனவு செய்யப்படுகின்றது.

இதுதொடர்பாக கேள்வி எழுப்பினால், பாலின் தரம் குறைவு என கொள்வனவு நிறுவனங்கள் குற்றம் சாட்டுகின்றன. எனவே பாலுக்கான விலையை நிர்ணயம் செய்து பால் உற்பத்தியாளர்களின் நலன் பேண நடவடிக்கை எடுக்க வேண்டுமென கோரிக்கை விடுத்திருந்தனர்.

பால் உற்பத்தியாளர்களின் கோரிக்கைக்கு கூட்டத்திற்கு தலைமை வகித்த பிரதேச செயலாளர் திருமதி உஷா சுபலிங்கம் பதிலளிக்கையில்,

மாவட்டத்தில் பாலுக்கு தட்டுப்பாடு நிலவுகின்றது. இதனை பால் உற்பத்தியாளர்கள் தமக்கு சாதகமாக பயன்படுத்தி பால் கொள்வனவு செய்யும் நிறுவனங்களுடன் பேசி பாலுக்கான பெறுமதியை அதிகரிக்க முடியும். அத்துடன் நாமும் பால் கொள்வனவு செய்யும் பிரதான நிறுவனங்களுடனும் பால் உற்பத்தியாளர்களுடனும் கலந்துரையாடலொன்றை மேற்கொண்டு பாலுக்கு நியாயமான விலை நிர்ணயம் மேற்கொள்ள நடவடிக்கை எடுப்பதாக அவர் தெரிவித்தார்.

# பருத்தித்துறை கடற்பகுதியில் மீட்கப்பட்ட சடலம் அடையாளம் காணப்பட்டுள்ளது

கரவெட்டி தினகரன் நிருபர்

பருத்தித்துறை துறைமுக கடற்பகுதியில் கரையொதுங்கிய நிலையில் மீட்கப்பட்டிருந்த ஆணின் சடலம் நேற்றுமுன்தினம் உறவினர்களால் அடையாளம் காணப்பட்டுள்ளது. உயிரிழந்தவர் மாத்தறையைச் சேர்ந்தவர் என தெரியவருகின்றது.

பருத்தித்துறை துறைமுக இறங்கு தளத்தையொட்டிய பகுதியில் ஆணொருவரின் சடலம் கரையொதுங்கிய நிலையில் கடந்த 17 ஆம் திகதி அதிகாலை மீட்கப்பட்டிருந்தது. இதுதொடர்பில் தகவல் கிடைத்ததையடுத்து பருத்தித்துறை பொலிஸார் சம்பவ இடத்துக்கு சென்று விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர். இதனையடுத்து சடலம் நீதிமன்ற உத்தரவுக்கமைய பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு பிரேத அறையில் வைக்கப்பட்டிருந்தது. சம்பவம் தொடர்பில் பருத்தித்துறை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வந்திருந்தனர். இந்நிலையில் நேற்று முன்தினம் (19) காலை உறவினர்கள் வருகைதந்து சடலத்தை அடையாளம் காட்டியுள்ளனர். சடலமாக மீட்கப்பட்டிருந்தவர் மாத்தறையைச் சேர்ந்த சுஜீவ அபயவர்த்தன விக்கிரமசிங்க என்ற 55 வயதுடைய நபரென தெரியவருகின்றது. மரணம் தொடர்பில் பருத்தித்துறை மரண விசாரணை அதிகாரி சதானந்தன் சிவராஜா விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றார்.

# டேவிட் கெமரூனைப் பயன்படுத்தி இங்கிலாந்தில் ஊடுருவ சீனா முயன்றது

பாராளுமன்ற பாதுகாப்பு குழு தெரிவிப்பு

சீனாவின் முயற்சியால் உருவாக்கப்பட்ட பிரிட்டிஷ் சீன முதலீட்டு நிதியம் மற்றும் ஆசிய முதலீட்டு கட்டமைப்பு வங்கி ஆகிய முதலீட்டு நிறுவனங்களும் அவற்றுக்கு முன்னாள் பிரிட்டிஷ் பிரதமர் டேவிட் கெமரூன் உதவித் தலைவராக நியமனம் செய்யப்பட்டமும் இங்கிலாந்தின் வர்த்தக மற்றும் அரசியல் பரப்புகளில் செல்வாக்கு செலுத்தும் மற்றும் இடையூறு செய்யும் ஒரு உளவு முயற்சியாகவே இங்கிலாந்து உளவு வலையமைப்பு கருதியதாக தற்போது தகவல் வெளியாகியுள்ளது. இங்கிலாந்து பாராளுமன்ற தகவல் பகுப்பாய்வு மற்றும் பாதுகாப்புக் குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

2011ஆம் ஆண்டு வர்த்தக நியமனங்களுக்கான ஆலோசனைக் குழுவின் பரிந்துரைக்கு அமைய முன்னாள் பிரதமர் கெமரூன் இதற்கு அனுமதி அளித்தார் என்றும் எனினும் சீனாவுடனான தொடர்பாடல்களின் போது நாட்டின் அந்தரங்கத்தன்மைக்கு பாதிப்பு வரலாம் என்று தோன்றும் சமயங்களில் அது தொடர்பான அறிவுரைகளை பெற்றுக் கொள்ள வேண்டும் என முன்னாள் பிரதமருக்கு ஆலோசனை வழங்கப்பட்டதாகவும் இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தன் செல்வாக்கை செலுத்துவதற்கு சீனா இங்கிலாந்தைத் தெரிவு செய்ததற்கு, சீனாவில் இருந்து வரக்கூடிய தேசிய பாதுகாப்பு அச்சுறுத்தல்களுக்கு எதிராக ஒரு செயல்திறன் கொண்ட பாதுகாப்பு வலையமைப்பை உருவாக்க இங்கிலாந்து தவறியிருந்தமையே காரணம் என்றும் இந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டிருக்கது. இங்கிலாந்தின் பல்வேறு துறைகளில் சீன கொண்டிருக்கக் கூடிய செல்வாக்கு மற்றும் முதலீடுகளை கண்டறிவது சிரமமானது என்றும் அதற்கான முன் அனுபவம் இருக்கவில்லை என்றும் இங்கிலாந்தில் சீன தலையீடுகளை எதிர்த்து முறியடிக்க வேண்டிய தேவை தமக்கு இருப்பதாக இங்கிலாந்து உளவு நிறுவனங்கள் கருதியிருக்கவில்லை என்றும் இந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இங்கிலாந்தின் உயர்கல்வித்துறை, கைத்தொழில், தொழில்நுட்பம் மற்றும் முதலீட்டுத் துறைகளில் சீன செல்வாக்கு தொடர்பாக இந்த அறிக்கை விமர்சனங்களை முன்வைத்துள்ளது.

# இந்தியா-ஆசியான் நாடுகளுக்கிடையிலான விரைவு பாதை; மியன்மாரில் தடங்கல்கள் காணப்படுவதாக இந்தியா கவலை

ஆசியான் நாடுகளுக்கூடாக இந்தியா அமைக்கவுள்ள நீண்ட நெடுஞ்சாலைத் திட்டம் சிரமமானது என்று வர்ணித்துள்ள இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர், அடுத்த நான்கு ஆண்டுகளில் அது சாத்தியமாகும் என்றும் மியன்மாரில் நிலவும் சூழல் காரணமாக அங்கே பாதை அமைப்புப் பணிகளைத் தொடர்வதில் தாமதங்கள் காணப்படுவதாகவும் தெரிவித்துள்ளார்.

மீகொங் நதி ஒத்துழைப்பு பொறிமுறை திட்டத்தின் கீழ் நடைபெற்ற 12ஆவது வெளியுறவு அமைச்சர் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக தாய்லாந்து சென்றிருந்த வெளியுறவு அமைச்சர், அங்குள்ள இந்திய சமூகத்தவர் மத்தியில் உரை நிகழ்த்துகையில் மேற்கண்டவாறு கூறினார்.

இந்தியா – மியன்மார் தாய்லாந்து நெடுஞ்சாலைத் திட்டம் ஆயிரத்து 360 கி.மீ தூரம் கொண்டது. இத்திட்டத்தின் பேரில் நூறுகோடி டொலர் கடன் திட்டத்தையும் இந்தியா வழங்கியுள்ளது.

மணிப்பூரில் இருந்து ஆரம்பமாகும் இப்பாதை,மியன்மார் வழியாக தாய்லாந்தைச் சென்றடையும். இச்சாலை அமைப்புத் திட்டம் 2019 இல் நிறைவு பெறுவதாக வடிவமைக்கப்பட்டிருந்த போதிலும் அது பல தடைகளை சந்திக்க வேண்டியிருந்தது.

இதே சமயம், கம்போடியா, லாவோஸ், வியட்நாம் மற்றும் வங்கதேசம் ஆகிய நாடுகளும் இத்திட்டத்தில் தாம் உள்வாங்கப்பட வேண்டும் என்று விருப்பம் தெரிவித்துள்ளன.

இப் பெருஞ்சாலைத்திட்டம் பூர்த்தியானதும் இந்தியாவுக்கும் ஆசியான் நாடுகளுக்குமான வர்த்தகம் மொத்த தேசிய உற்பத்தியில் 70 பில்லியன் வருடாந்த வருமான அதிகரிப்பைக் காட்டும் எனவும் 20 மில்லியன் வேலை வாய்ப்புகளை 2025 இல் வழங்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

ஏற்கனவே 70 சதவீதமான திட்டப் பணிகள் முடிவடைந்து விட்டதாகவும் எனினும் மியன்மாரின் சமூக, அரசியல் சூழல் காரணமாக பாதை அமைப்பை அங்கே ஆரம்பிப்பதில் பிரச்சினைகள் காணப்படுவதாகவும் இந்திய வெளியுறவு அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.



முதலாவது ஆடிச் செவ்வாயை முன்னிட்டு தலவாக்கலை அருள்மிகு ஸ்ரீ கதிரேசன் ஆலயத்தில் சிவஸ்ரீ மு.வாமதேவ பிரசாந்த் குருக்கள் தலைமையில் விசேட பூஜை வழிபாடுகள் அண்மையில் நடைபெற்றன. (படம் தலவாக்கலை குறூப் நிருபர்)

# இனிமையான குணங்களால் மக்களை கவர்ந்த கலாநிதிகளின் முன்னோடி



மர்ஹூம் எம்.ஏ.எம்.சலீம் (Phd)

ஐக்கிய நாடுகள் சபையின் கால் நடைகள் அபிவிருத்தி மற்றும் உணவு உற்பத்தித் திட்டங்களின் விவசாய விஞ்ஞானியாக (agronomist) பணிபுரிந்த கலாநிதி மர்ஹூம் எம்.ஏ.எம்.சலீம் அண்மையில் கொழும்பில் காலமானார். அக்கரைப்பற்று ஐந்தாம் பிரிவு மன்பஉல் கைறாத் அரபுக் கல்லூரி வீதியில் அமைந்துள்ள "காடியர்" என்று அறியப்பட்ட முஹம்மது அலியார் மற்றும் சாலி ஹத்தும்மா ஆகியோரின் மகனாக 1942 இல்.இவர் பிறந்தார். இறையடி சேர்ந்த முஹம்மதுமீரா முஹம்மது இஸ்மாயில், முஹம்மது சபீயா அப்துல் மஜீத், முஹம்மது சல்மா செய்யத் மீரா (அதிபர்), முஹம்மது சுஹீதா அசனார் லெவ்வை (அதிபர்) ஆகியோர் இவரது சகோதரிகளாவர்.விஞ்ஞானத்துறையில் இளமாணிப் பட்டம் பெற்ற மர்ஹூம் எம்.ஏ.எம்.சலீம்,பொது நலவாய நாடுகளின் புலமைப் பரிசில் பெற்று நைஜீரியாவின் முன்னணி கல்வி நிறுவனமான (IBADAN) பல்கலைக் கழகத்தில் முதுமாணி மற்றும் கலாநிதிப்பட்டங்களைப் பெற்றவர். நைஜீரியாவின் கடுனா நகரிலிருந்த ஆபிரிக்காவுக்கான சர்வதேச கால்நடை அபிவிருத்தி ஆராய்ச்சி நிலையத்தில் 1978 இல் விவசாய விஞ்ஞானியாக நியமிக்கப்பட்டார். உலக வங்கி மற்றும் நைஜீரியாவின் அனுசரணை, மேற்பார்வையில் இம்மையம் நிர்வகிக்கப் பட்டது. மர்ஹூம் கலாநிதி எம்,ஏ,எம், சலீம், கடுனாவில் கால்நடை விவசாய அபிவிருத்தித்துறையில் மேற் கொண்ட பணிகள் உலகவங்கி,நைஜீரியாவைகவர்ந்தன. இதனால்,எதியோப்பியத் தலைநகர் அடிசபாபாவிலுள்ள ஆபிரிக்காவுக்கான சர்வதேச கால்நடை அபிவிருத்தி மய்யத்தின் தலைமையகத்திற்கான பிரதம விஞ்ஞானியாக இவருக்கு பதவி உயர்வளிக்கப்பட்டது. கிழக்கு ஆபிரிக்கா மற்றும் மத்திய ஆசியாவிலுள்ள மலைவாழ் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதில் கவனம் செலுத்தும் குழுவுக்கும் மர்ஹூம் எம்.ஏ.எம்.சலீம் தலைமை தாங்கினார்.ஆபிரிக்காவில் கால்நடை மேய்ப்பாளர்களுக்கும், விவசாயிகளுக்குமிடையில் புரையோடிப்போயிருந்த பிரச்சினை இவரின் காலத்திலேயே முடிவுக்கு வந்தது. நிலம், உழைப்பு, முதலீனமின்றியிருந்த இந்த மேய்ப்பாளர்களுக்கு தீவனங்களைத் தேடிக் கொடுக்கும் இவரது முயற்சி வெற்றியடைந்திருந்தது.

இவரது அயராத ஆராய்ச்சி, வெப்ப மண்டல புதிய தீவனப் பயிரை (stylo santhas humate ) ஆபிரிக்காவுக்கு அறிமுகமாக்கியது. இந்தப் பயிர் வரண்ட கால நிலையிலும், மண்ணில் பெறப்படும் நைட்ரஜனை சரி செய்து மண்ணுக்குத் தேவையான ஊட்டச்சத்தை வழங்கக் கூடியதாகும்.ஆபிரிக்காவில் நீர், உணவின்றி உயிரிழக்கவிருந்த பல மில்லியன் கணக்கான விலங்குகளைக் காப்பாற்றியிருந்தது இவரது ஆராய்ச்சி. இதனால்,கால் நடை உணவு வங்கியின் பிதா ( father of fodder bank ) என, ஆபிரிக்காவில் சிறப்பாக அழைக்கப்படலானார்.

அக்கரைப்பற்றில் மட்டுமல்லது புகழ்ந்த இடமான சாய்ந்தமருதிலும் இமைநிறைகாயாக வாழ்ந்தவர் இவர். அக்கரைப்பற்று மன்பஉல் கைறாத் அரபுக்கல்லூரிக்கு மூன்று ஏக்கர் காணியை வழங்கிய இவர், கல்லூரியின் அப்போதைய ஆளுநர் சபைத் தலைவர் அல்ஹாஜ் மௌலவி எஸ்.எஸ்.எம்.ஹனீபா மதனி கோரியதற்கிணங்க, கல்லூரி விரிவுரையாளர்களுக்கு ஒரு வருட சம்பளத்தை சொந்த நிதியில் தந்துதவினார்.

இக்கல்லூரியில் 1990 இல், இடம்பெற்ற முப்பெரும் விழாக்களான வெள்ளிவிழா, பட்டமளிப்பு விழா, கட்டிடத் திறப்பு விழாக்களின் சிறப்பு மலரில் இது பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. கல்லூரியின் முன்னாள் ஆளுநர் சபை செயலாளரான ஏ.எம்.யூசுப், "எமது தாயகம் ஈன்றெடுத்த முதற் கலாநிதி அல்ஹாஜ். எம்.ஏ.எம். சலீம் எனக்குறிப்பிட்டுள்ளார்".சிறந்த நூலாசிரியரான மர்ஹூம் ஏ.ஆர். எம்.சலீமால் எழுதப்பட்ட "அக்கரைப்பற்றின் வரலாறு"| நூலிலும் மர்ஹூம் கலாநிதி எம்,ஏ,எம், சலீமின் பங்களிப்புக்கள் பற்றி எழுதப்பட்டுள்ளது. அக்கரைப்பற்றின் மாணவர் சமூகம், இளைய தலைமுறை மற்றும் சமூகப் பணியாளர்கள் இவர் பற்றித் தெரிந்து கொள்வது பயனளிக்கும்.இந்தய பயனை நோக்கிலே,மர்ஹூம் கலாநிதி எம்.ஏ.எம்.சலீமின் வரலாற்றை பதவிடுகிறேன்.

அஷ்ஷெய்க்.எஸ்.எம்.ஹனீபா மதனி – llb ( honost) uk
முன்னாள் ஆளுநர் சபைத் தலைவர்,
மன்பஉல் ஹைறாத் அரபுக்கல்லூரி, அக்கரைப்பற்று.

தினகரன் விளம்பரம்
0112429367

விற்பனை பிரிவு
0112429444,
0112429378

ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2023 ஜுலை 21 வெள்ளிக்கிழமை

தினகரன்
THINAKARAN
තිනකරන්

தொழுகை நேரம்
சுபஹ் - 04.41
லுஹர் - 12.18
அஸர் - 03.43
மஃரிப் - 06.32
இஷா - 07.47

இன்றைய சுபதினம்
சோபகிருது வருடம் ஆடி 05
ராகுகாலம் : பகல் : 1.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி



## ஜனாதிபதி ரணில் தலைமையிலான அரசு

# பொருளாதார மீட்சி பாதையில் மிகச் சிறப்பான முன்னேற்றம்

### சீனத் தூதுவர் பிரதமரிடம் தெரிவிப்பு



புதிய அரசாங்கம் பொருளாதார நெருக்கடியை வெற்றி கொள்வதற்கான முயற்சிகளில் சிறப்பான முன்னேற்றத்தை அடைந்துள்ளதாக இலங்கைக்கான சீனத் தூதுவர் கி சென் ஹொன்க் தெரிவித்தார்.

அலரி மாளிகையில் பிரதமர் தினேஷ் குணவர்த்தனவை சந்தித்து சமகால அரசியல், பொருளாதார விவகாரங்கள் குறித்து கலந்துரையாடிய போதே அவர் இவ்வாறு சுட்டிக்காட்டியுள்ளார்.

கடந்த 12 மாதங்களில் இலங்கையின் பொருளாதார மீட்சி செயன்முறை குறிப்பிடத்தக்களவு வளர்ச்சி கொண்டுள்ளதாக சீனத் தூதுவர் பிரதமருக்கு பாராட்டு தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பில் இலங்கைக்கு சீனா தொடர்ந்து அளித்து வரும் ஆதரவுக்கு பிரதமர் நன்றி தெரிவித்தார்.

நாடு முழுவதும் உள்ள பாடசாலைகளுக்கு புத்தகப் பைகள், காகிதாதிகள், பாடசாலை சீருடைகளுக்கான துணிகள் மற்றும் கல்வி உபகரணங்களை அண்மையில் சீனா வழங்கியமைக்கும் பிரதமர் தமது நன்றியை தெரிவித்தார்.

பொருளாதார பிரச்சினைகளுக்கு நீண்டகால தீர்வுகளை வழங்குவதற்காக நேரடி தனியார் முதலீடுகள் மற்றும் விவசாயம், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, நீர்ப்பாசனம் மற்றும் நீர் வழங்கல் துறைகளில் முதலீடுகளை இலங்கை வரவேற்கும் என்றும் பிரதமர் கூறினார். இந்த சந்திப்பில் பிரதமரின் செயலாளர் அனுர திஸாநாயக்கவும் கலந்துகொண்டார்.

## ஜனாதிபதியின் பதில் செயலாளராக சாந்தனி விஜேவர்த்தன நியமனம்



ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் இந்தியாவுக்கான உத்தியோக பூர்வ விஜயத்தில் இணைந்துள்ளதால் சாந்தனி விஜேவர்த்தன ஜனாதிபதியின் பதில் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

நேற்று (20) முதல் அமுலுக்கு வரும் வகையில் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது. ஜனாதிபதியின் செயலாளர் நாடு திரும்பும் வரை இந்நியமனம் அமுலில் இருக்கும்.

ஜனாதிபதி பதில் செயலாளராக பெண் ஒருவர் நியமிக்கப்பட்டமை வரலாற்றில் இதுவே முதல் தடவையாகும்.

சிரேஷ்ட அரச அதிகாரியான சாந்தனி விஜேவர்தன தற்போது ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிக செயலாளராக கடமையாற்றி வருகின்றார்.1994 ஆம் ஆண்டு இலங்கை திட்டமிடல் சேவையில் இணைந்து கொண்ட திருமதி விஜேவர்தன, திறைசேரியில் 22 வருடங்களாக பல்வேறு பதவிகளை வகித்து வந்தார். இறுதியாக திட்டமிடல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகமாகவும் இவர் பணியாற்றினார்.

2015 முதல் 2019 வரை அபிவிருத்தி மூலோபாயம் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சின் செயலாளராகவும் சாந்தனி விஜேவர்தன பணியாற்றியுள்ளார்.

காலி சவுத்லண்ட் பெண்கள் கல்லூரியின் பழைய மாணவியான இவர், ருஹுணு பல்கலைக்கழகத்தின் கலைப் பீடத்தில் முதுமாணிப் பட்டம் பெற்றுள்ளதோடு நெதர்லாந்தின் ஹேக் நகரில் பிராந்திய பொருளாதார அபிவிருத்தி தொடர்பான பட்டப்பின் படிப்பை பூர்த்தி செய்துள்ளார்.


## பொருட் கொள்வனவு அறிவித்தல்

### அரசாங்க அச்சுத் திணைக்களம்

N-24

அரசாங்க அச்சுத் திணைக்களத்தின் கொள்முதல் சபையில் தலைவர் கீழ்வரும் பொருட்களை வழங்குவதற்காக இலங்கை உள்ளூர் உற்பத்தியாளரிடமிருந்து/ வழங்குநர்கள் அல்லது அவர்களது அதிகாரம்பெற்ற முகவர்களிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன.

| No | Item | Qty | Bid Reference No | Bid Security |
|---|---|---|---|---|
| Item 01 | strapping Roll for fully Automatic heavy duty Strapping Machine (Thickness- 0.7mm, Width -9mm, Length- 2000m) | 700 Roll | SCP02/NCB08/ S.T.Roll/2023-14 | 81,000.00 |

2023.07.21ஆம் திகதி முதல் 2023.08.10ஆம் திகதி வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் மேற் கூறப்பட்டுள்ள ஒவ்வொரு உருப்படிகளுக்கும் வெவ்வேறான ரூபா 3000.00 வீதம் மீளளிக்கப்படாத மனுகட்டணம் செலுத்தி, கீழே தரப்பட்டுள்ள அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் உள்நாட்டு வழங்கல் பிரிவில் விலைமனு ஆவணங்களை பெற்றுக்கொள்ள முடியும்.

விலைமனு ஏற்றுக்கொள்ளும் இறுதி தினம் - 2023.08.11ஆந் திகதி
பி.ப. 2.00 மணி

மேலதிக விபரங்களுக்கு கடமை நாட்களில் மு.ப. 8.30 மணி தொடக்கம் பி.ப. 4.15 மணி வரை 011-2694898 என்ற தொலைபேசி இலக்கத்துடன் அல்லது www.documents.gov.lk இணையத்தளத்தினூடாக தொர்புகொள்ளலாம்.

**தலைவர்,**
**பொருட் கொள்வனவு குழு.**
**அரசாங்க அச்சுத் திணைக்களம்.**
**இல. 118, டாக்டர் டனிஸ்டர் டி சில்வா மாவத்தை, கொழும்பு -08**
**2023.07.21**
**தொலைபேசி: 011-2694898**
**இணையத்தளம் www.documents.gov.lk**


## 'டில்மா' தேயிலை நிறுவுனர் மறைவு

### 93 ஆவது வயதில் காலமானார்



'டில்மா' தேயிலை நிறுவனர் மெரில் ஜே. பெர்னாண்டோ தனது 93 ஆவது வயதில் நேற்று காலமானார். இது தொடர்பில் அவரது புதல்வர் மலிக் ஜே. பெர்னாண்டோ தனது டுவிட்டர் பதிவில் தெரிவித்துள்ளார். எனது தந்தை மெரில் ஜே.பெர்னாண்டோ, நம் வாழ்வில் ஒரு உயர்ந்த நபராக இருந்தார். அவர் எங்களை விட்டுப் பிரிவார் என்று நாங்கள் நினைக்கவே இல்லை. எனது சகோதரனும் நானும், எங்கள் குழந்தைகளும் அவருடைய பாரம்பரியத்தை வலுப்படுத்தவும் அவரது பணியை மேலும் மேம்படுத்தவும் உறுதியளிக்கிறோம். இவ்வாறு தனது பதிவில் அவர் குறிப்பிட்டுள்ளார். இறுதிச் சடங்கு விபரங்கள் விரைவில் அறிவிக்கப்படுமென்றும் அவர் கூறியுள்ளார்.

## இலங்கை தமிழர் உரிமைகளை பாதுகாக்கும் வகையில் பேசவும்

### ஜனாதிபதி ரணிலிடம் வலியுறுத்துமாறு பிரதமர் மோடிக்கு ஸ்டாலின் கடிதம்

இலங்கை ஜனாதிபதி இந்தியாவுக்கு விரைவில் சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ளதையடுத்து இந்திய மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமைகளைப் பாதுகாத்திடவும் இலங்கை தமிழர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றவும்அவர்களது உரிமைகள் மற்றும் சுதந்திரம் பாதுகாக்கப்படுவதை உறுதி செய்யவும் இலங்கை ஜனாதிபதியை வலியுறுத்த வேண்டுமென பிரதமர் நரேந்திர மோடிக்கு தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் பிரதமருக்கு எழுதியுள்ள கடிதத்தில் "இலங்கை ஜனாதிபதி 2022ஆம் ஆண்டு பதவியேற்றதற்குப் பிறகு முதன்முறையாக 02 நாள் பயணமாக புதுடில்லி வரவுள்ளார். தமிழ்நாட்டுக்கும் இலங்கைக்கும் இடையில் பூகோள ரீதியான நெருக்கம், வரலாற்று பொருளாதார மற்றும் கலாசாரத் தொடர்புகள் காரணமாக நீண்டகாலமாக பல பிரச்சினைகள் நிலுவையில் உள்ளன .

கச்சத்தீவை மீட்பது மற்றும் இந்திய மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமைகளைப் பாதுகாப்பது

என்பவை,தமிழ்நாட்டு மக்களின் கவலையளிக்கும் முக்கிய பிரச்சினைகளாக உள்ளன.இவை குறித்து பேசுவது முக்கியம்.மேலும்,

இலங்கை தமிழ் பேசும் மக்களின் நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்றி அவர்களின் உரிமைகள் மற்றும் சுதந்திரம் பாதுகாக்கப்படுவதை உறுதி செய்தல் வேண்டும். தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் அடிக்கடி தாக்கப்படுவதும் கைது செய்யப்படுவதும் முற்றிலும் தடுக்கப்பட வேண்டும். இலங்கை கடற்படையால் தமிழக மீனவர்களின் பறிமுதல் செய்யப்பட்ட படகுகளை மீட்க வேண்டும். மீனவர் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் வகையில் இரு நாட்டு அதிகாரிகளையும் உள்ளடக்கிய மறுசீரமைக்கப்பட்ட கூட்டுப் பணிக்குழு 2016 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டது. இதுவரை ஐந்து சுற்று கூட்டுச் செயற்குழு கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன. கடைசியாக மார்ச் 2022 இல் இதுதொடர்பான கூட்டம் நடைபெற்றது. இருப்பினும் இந்தப் பிரச்சினைக்கு இதுவரை சுமுகமான தீர்வு ஏற்படவில்லை. 1956 ஆம் ஆண்டு முதல் இலங்கை தமிழர்களின் உரிமைகளை நிலைநிறுத்துவதிலும் கோரிக்கைகளை நிறைவேற்றுவதிலும் தமிழ்நாடு அரசும் திமுகவும் உறுதியாக உள்ளது. இந்நோக்கிற்காக இலங்கையில் உள்ள தமிழர்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற ஆக்கபூர்வமான பேச்சுக்கள் இடம்பெற வேண்டும் என கடிதத்தில் முதல்வர் தெரிவித்துள்ளார்.

## ஜனாதிபதியின் இந்திய விஜயம்

## திலும், செஹான், பிரமித்த, உட்பட 05 பதில் அமைச்சர்கள் நியமனம்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இரண்டு நாள் உத்தியோகபூர்வ பயணமாக நேற்று (20) இந்தியா சென்றுள்ளதால், அவரின் கீழுள்ள அமைச்சுக்களின் பொறுப்புக்கள் இராஜாங்க அமைச்சர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

அதன்படி பாதுகாப்பு இராஜாங்க அமைச்சரான பிரமித்த பண்டார தென்னகோன் பதில் பாதுகாப்பு அமைச்சராகவும், நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க பதில் நிதி மற்றும் பொருளாதர ஸ்திரப்படுத்தல், தேசிய கொள்கைகள் அமைச்சராகவும், ஏற்றுமதி ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம, பதில் ஏற்றுமதி ஊக்குவிப்பு பதில் அமைச்சராகவும், தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத், பதில் இராஜாங்க அமைச்சராகவும், சமூக வலுவூட்டல் இராஜாங்க அமைச்சர் அனுப பெஸ்குவல் பதில் மகளிர், சிறுவர் விவகார மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

## கடனட்டைகளுக்கான வட்டி வீதம் குறைகிறது

### 34 வீதத்திலிருந்து 30 ஆக குறைகிறது




கடனட்டைகளுக்கான வட்டி வீதத்தை ஆகஸ்ட் முதலாம் திகதியிலிருந்து குறைக்க வர்த்தக வங்கிகள் தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. கடனட்டைகளுக்கான தற்போதைய 34% வட்டி விகிதம் 30% ஆக குறைக்கப்படுமென்று வணிக வங்கி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இலங்கை மத்திய வங்கி அண்மையில் வட்டி வீதத்தை குறைத்துள்ளது. வர்த்தக வங்கிகளும் அதற்கேற்ப வட்டி வீதத்தை குறைக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென மத்திய வங்கியின் ஆளுநர் தெரிவித்துள்ளார்.


சுற்றுலா மற்றும் காணி அமைச்சு

**காணி சீர்த்திருத்த ஆணைக்குழு**

## குத்தகை அடிப்படையில் கட்டிடமொன்றை பெற்றுக்கொள்வதற்காக விலைமனுக்கோரப்படுகின்றது

காணிசீர்த்திருத்த ஆணைக்குழுவின் குருநாகல் மாவட்ட அலுவலகத்தை நடைமுறைப்படுத்துவதற்காக 02 வருட கால குத்தகை அடிப்படையில் கட்டிடமொன்றை பெற்றுக்கொள்வதற்காக விலைமனுக்கோரப்படுகின்றது.

அடிப்படையாக 2200 - 2500 ச.அடி விஸ்தீரணம் கொண்ட, குருநாகல் நகரிலிருந்து 04 கி.மீ. எல்லையினுள் அமைந்துள்ள நீர், மின்சார, சுகாதார பாதுகாப்பு வசதிகளுடன் கூடிய கட்டிடமொன்றாக இருத்தல் வேண்டும்.

குறித்த கட்டிடத்தின் விபரங்களடங்கிய விலைமனுப் படிவங்களை, இல.16, வடக்கு ஏரி வீதி, குருநாகல் என்ற முகவரியிலமைந்துள்ள குருநாகல் மாவட்ட காணிசீர்த்திருத்த ஆணைக்குழுவின் பணிப்பாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

அதன் பிரகாரம், பூரணப்படுத்தப்பட்ட விலைமனுக்கள் 2023.08.03 அன்று பி.ப.2.00 இற்கு முன்னர், குருநாகல் மாவட்ட காணிசீர்திருத்த ஆணைக்குழுவின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள பெறுகைப்பெட்டியிற் சேர்த்தல் வேண்டுமென்பதுடன், விலைமனுக்களை அடக்கும் உறைகளின் இடதுபக்க மேல் மூலையில், "கட்டிடமொன்றைக் குத்தகை அடிப்படையில் வழங்கல்" என குறிப்பிடுதல் வேண்டும்.

விலைமனுக்கள் மூடப்பட்டதும் உடனடியாக அவை திறக்கப்படுவதுடன், அவ்வேளையில் நீங்கள் சமுகமளித்திருக்கலாம்.

விலைமனு தொடர்பான இறுதித்தீர்மானம், காணிசீர்திருத்த ஆணைக்குழுவிற்கு உரித்தாகும்.

**சட்டத்தரணி, நிலன்த விஜேசிங்ஹ,**
**தலைவர்,**
**காணிசீர்திருத்த ஆணைக்குழு**



## விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

### கல்வி அமைச்சு

### தரவு முகாமைத்துவ கிளைக்கு NAS Storage, Data Cartridge மற்றும் External Hard Drive என்பவற்றிற்கான பெறுகை (வழங்குதல், விநியோகித்தல், நிறுவுதல் மற்றும் பயிற்சியளித்தல்)

**விலைகோரல் இல. ED/07/101/15/CF/2023/G-12**

1. சிறந்த முன் அனுபவத்தைக் கொண்டுள்ள தகைமை மற்றும் தகுதி வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து தரவு முகாமைத்துவ கிளைக்கு NAS Storage, Data Cartridge மற்றும் External Hard Drive என்பவற்றிற்கான பெறுகைக்காக (வழங்குதல், விநியோகித்தல், நிறுவுதல் மற்றும் பயிற்சியளித்தல்) பெறுகையின் பொருட்டு முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை கல்வி அமைச்சின் செயலாளரின் சார்பில் அமைச்சுப் பெறுகைக் குழுவின் தலைவர் இப்போது அழைக்கிறார். முழுமையான விபரங்கள் விலைமனு ஆவணத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன. எதிர்பார்க்கப்படும் விநியோகக் காலம் ஏற்றுக்கொள்ளும் கடிதத் திகதியிலிருந்து 6 முதல் 8 வாரங்களாகும். விலைமனுதாரர்கள் பின்வரும் பொருட்களுக்கு விலைகோரல் வேண்டும் என்பதுடன் சகல விலைக்கோரல்களுடனும் பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ள வகையில் விலைமனுப் பிணையொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

| பொருட்களின் விபரம் | எண்ணிக்கை | விலைமனுப் பிணை முறித் தொகை ரூபா |
|---|---|---|
| Network Attached Storage (NAS) | 02 | 310,000.00 |
| Data Cartridge | 06 | |
| External Hard Drive | 04 | |

விலைமனுதாரர்கள் விலைக்கோரலுடன் தரப்பட்டுள்ள மாதிரிக்கு அமைவாக விலைமனு பிணையொன்றை வழங்குதல் வேண்டும்.

2. விலைக்கோரல்கள் தேசிய போட்டி விலைகோரல் (NCB) மூலம் நடைமுறைப்படுத்தப்படும்.
3. ஆர்வமுள்ள தகுதி வாய்ந்த விலைமனுதாரர்கள் மேலதிக விபரங்களை 'இசுறுபாய' கல்வி அமைச்சின் 5ம் மாடியிலுள்ள பெறுகைப் பிரிவிலிருந்து பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி: 011-2785573 அல்லது 011-2785141 – 50 நீடிப்பு 1530) மற்றும் 2023 ஆகஸ்ட் 14ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான காலத்தில் இலவசமாக விலைமனுக்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
4. மேற்குறிப்பிடப்பட்ட பெறுகைக்காக கல்வி அமைச்சின் 5ம் மாடி, பெறுகைப் பிரிவில் 2023 ஆகஸ்ட் 02ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு விலைகோரலுக்கு முன்னரான கூட்டம் இடம்பெறும்.
5. ஆவணத்தின் பொருட்டு மீளளிக்கப்படாத 6,000.00 ரூபா கட்டணத்தை செலுத்துவதன் பேரில் 2022 ஆகஸ்ட் 14ஆம் திகதி வரையில் பி.ப. 3.00 மணி அல்லது அதற்கு முன்னர் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் செய்வதன் மூலம் பெறுகைப் பிரிவிலிருந்து ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் ஆங்கில மொழியிலான முழுமையான விலைமனு ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். (கொடுப்பனவுகளை ரொக்கப் பணத்தில் மட்டுமே செலுத்துதல் வேண்டும்)
6. விலைமனுக்களை 2023 ஆகஸ்ட் 15ஆம் திகதி மு.ப. 11.00 மணி அல்லது அதற்கு முன் பெறுகைப் பிரிவு, 5ம் மாடி, கல்வி அமைச்சு, இசுறுபாய, பத்தரமுல்லை எனும் முகவரிக்குக் கிடைக்கச் செய்தல் வேண்டும். அதன் பின்னர் பின்வரும் முகவரிக்கு தாமாக வருகை தந்துள்ள விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் மூடப்பட்டு உடன் திறக்கப்படும். பிந்திய விலைமனுக்கள் திறக்கப்படாமலேயே திருப்பியனுப்பப்படும்.
7. முறையாகப் பூர்த்தி செய்யப்பட்டு முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''தரவு முகாமைத்துவ கிளைக்கு NAS Storage, Data Cartridge மற்றும் External Hard Drive என்பவற்றிற்கான பெறுகை (வழங்குதல், விநியோகித்தல், நிறுவுதல் மற்றும் பயிற்சியளித்தல்) - **ED/07/101/15/CF/2023/G-12"** எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

**செயலாளர்,**
**கல்வி அமைச்சு,**
**''இசுறுபாய",**
**பத்தரமுல்ல.**

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ்: 2429270, 2429329, விளம்பர முகாமையாளர்: 2429321

சோபகிருது வருடம் ஆடி மாதம் 05ஆம் நாள் வெள்ளிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1445 முஹர்ரம் பிறை 02

### குறள் தரும் சிந்தனை



வழங்குவ துள்வீழ்ந்தக் கண்ணும் பழங்குடி
பண்பில் தலைப்பிரிதல் இன்று

பழம் பெருமை வாய்ந்த குடியில் பிறந்தவர்கள் வறுமையால் தாக்குண்ட போதிலும், பிறருக்கு வழங்கும் பண்பை இழக்க மாட்டார்கள்.

## தேசத்தை மறுமலர்ச்சிப் பாதைக்கு இட்டுச் சென்ற ஜனாதிபதி ரணில்

இலங்கையின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட எட்டாவது ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க பதவியேற்று இன்றுடன் ஒரு வருடம் நிறைவடைகிறது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இப்பதவியை ஏற்கும் போது நாட்டில் காணப்பட்ட நிலைமைக்கும் தற்போதைய நிலைக்கும் இடையில் மலைக்கும் மடுவுக்கும் இடையிலான முன்னேற்றத்தைக் காணக்கூடியதாக உள்ளது.

கடந்த வருடத்தின் (2022) ஆரம்பத்தில் அந்நிய செலாவணி பற்றாக்குறையுடன் ஆரம்பமான பொருளாதார நெருக்கடி சமூக, பொருளாதார, அரசியல் கொதிநிலைகளை நாட்டில் தோற்றுவித்து இருந்தது. இப்பொருளாதார நெருக்கடி பணவீக்கத்திற்கு பாரிய பங்களிப்பை அளித்தது. அதனால் அத்தியாவசியப் பொருட்கள் உள்ளிட்ட பல பொருட்களுக்கும் ஒருபுறம் தட்டுப்பாட்டு நிலை ஏற்பட, மறுபுறம் எல்லாப் பொருட்களது விலைகளும் பெரிதும் அதிகரிப்புக்கும் உள்ளாகின.

அதன் காரணத்தினால் இப்பொருளாதார நெருக்கடியில் இருந்து நிவாரணமும் மீட்சியும் கோரி மக்களால் ஆர்ப்பாட்டங்களும் ஊர்வலங்களும் முன்னெடுக்கப்பட்டன. இந்நெருக்கடி மற்றும் கொதிநிலையின் பின்புலத்தில் அன்றைய அமைச்சரவையும் பதவி விலகியதுடன், அதனைத் தொடர்ந்து பிரதமரும் சொற்ப காலத்தில் அன்றைய ஜனாதிபதியும் கூட பதவி விலகும் நிலைமை உருவானது. அந்தளவுக்கு இப்பொருளாதார நெருக்கடி நாட்டில் தாக்கம் செலுத்தியது.

இவ்வாறான இக்கட்டான சூழலில் நாட்டின் தலைமையை ஏற்க எவரும் முன்வரவில்லை. நாட்டினதும் மக்களினதும் நலன்களை முன்னிலைப்படுத்தி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எட்டாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக கடந்த வருடம் ஜுலை மாதம் 21 ஆம் திகதி பதவியேற்றார்.

கடந்த காலங்களில் நாடு பொருளாதார வீழ்ச்சிக்கு உள்ளான சந்தர்ப்பங்களில் அதனை மீளக்கட்டியெழுப்பி தாம் பெற்றுள்ள பரந்த அனுபவங்களைப் பின்புலமாகக் கொண்டு, இப்பொருளாதார நெருக்கடியில் இருந்தும் நாட்டையும் மக்களையும் மீட்டெடுக்க முடியும் என்ற உறுதியான நம்பிக்கையுடன் அவர் இப்பதவியை ஏற்றார்.

அதற்கேற்ப இப்பதவியை ஏற்றது முதல் பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்டெடுப்பதை இலக்காகக் கொண்டு முன்னுரிமை அடிப்படையில் பொருளாதார மேம்பாட்டு வேலைத்திட்டங்களை ஆரம்பித்தார்.

இதன் பயனாக கடந்த வருடத்தின் ஆரம்பப்பகுதி முதல் நாட்டில் நிலவிய பொருளாதார நெருக்கடியின் அசௌகரியங்களும் பாதிப்புக்களும் கட்டம் கட்டமாக நீங்கலாயின. குறிப்பாக அத்தியாவசியப் பொருட்களுக்கு வரிசையில் காத்திருக்கும் யுகம் குறுகிய காலப் பகுதிக்குள் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது. அத்தோடு பொருளாதார நெருக்கடி தோற்றுவித்திருந்த ஏனைய நெருக்கடிகளும் நீங்கலாயின. இந்நிலையில் எரிவாயு, எரிபொருள் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களின் விலைகளும் அவ்வப்போது குறைக்கப்படக்கூடிய சூழல் நிலையும் உருவாகியுள்ளது.

அதேநேரம் ஜனாதிபதி பதவியேற்கும் போது அரிசி கூட இறக்குமதி செய்யப்படக்கூடிய ஒன்றாகக் காணப்பட்டது. ஆனால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னெடுத்த வேலைத்திட்டங்களின் பயனாக நாட்டுக்குத் தேவையான அரிசியை உள்நாட்டிலேயே உற்பத்தி செய்துகொள்ளும் நிலைமை உருவாகியுள்ளது. அத்தோடு உல்லாசப் பயணத்துறைக்கு அவசியமான பாஸ்மதி அரிசி தவிர்ந்த வேறு எந்தவொரு அரிசியையும் இறக்குமதி செய்ய வேண்டிய தேவை இல்லாமலாகியுள்ளது.

இவை இவ்வாறிருக்க, பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டையும் மக்களையும் மீட்டெடுக்கும் வகையில் ஜனாதிபதி தலைமையில் முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்களுக்கு சர்வதேச நாணய நிதியம் அங்கீகாரம் அளித்துள்ளதோடு கடன் நீடிப்புக்கான இணக்கப்பாட்டுக்கு அங்கீகாரமும் அளித்துள்ளது. அத்தோடு 2.9 பில்லியன் அமெரிக்க டொலர்களைக் கடனாக வழங்க முன்வந்துள்ள சர்வதேச நாணய நிதியம் அதன் ஒரு பகுதியை கடந்த மார்ச் மாதம் வழங்கியுமுள்ளது.

மேலும் தற்போது முன்னெடுக்கப்பட்டுவரும் பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களின் பயனாக ரூபாவுக்கு நிகரான டொலரின் பெறுமதி கடந்த சில மாதங்களாக வீழ்ச்சி அடைந்து வருகிறது. அத்தோடு பணவீக்கமும் தொடர்ந்தும் குறைவடைந்து வருகின்றது.

இதேவேளை, கடந்த காலத்தில் இறக்குமதிக்கு தடை விதிக்கப்பட்டிருந்த பெரும்பாலான பொருட்களின் இறக்குமதி தடை நீக்கப்பட்டுள்ளது. மேலும் பல பொருட்களுக்கான தடையை நீக்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன.

பொருளாதார நெருக்கடிக்கு உள்ளாகி வங்குரோத்து நிலையை அடைந்திருந்த நாட்டின் தலைமைப் பதவியை ஏற்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமைத்துவத்தின் பயனாக முழு நாடும் மறுமலர்ச்சிப் பாதையில் பிரவேசித்துள்ளது. பொருளாதார ரீதியில் அதலபாதாளத்தில் வீழ்ந்திருந்த நாடு இன்று நம்பிக்கையுடன் முன்னோக்கி பயணிக்கின்றது. அதற்கு ஜனாதிபதியின் தலைமையே அடித்தளமாகும்,

அதனால் ஜனாதிபதியின் தலைமையே நாட்டு அவசியமானது. அதுவே பெரும்பாலான மக்களின் கருத்தாகும். பொருளாதார நெருக்கடிக்குள்ளாகி வீழ்ச்சி அடைந்திருந்த நாட்டை மறுமலர்ச்சி பாதையில் இட்டுசென்ற பெருமையும் கௌரவமும் ஜனாதிபதியையே சாரும்.

ஆகவே கட்சி அரசியல் பேதங்களுக்கு அப்பால் நாட்டின் நலன்களுக்கு முன்னுரிமை அளித்து ஜனாதிபதியின் பொருளாதார மேம்பாட்டு திட்டங்களுக்கு ஆதரவும் ஒத்துழைப்பும் நல்க வேண்டும். அதுவே மக்களுக்கு வளமான வாழ்வைப் பெற்றுக் கொடுப்பதற்கான பங்களிப்பாக அமையும்.

editor.tkn@lakehouse.lk

# அதலபாதாளத்தில் வீழ்ந்த நாட்டை காப்பாற்றிய ஆளுமைமிகுந்த தலைவர் ரணில் விக்கிரமசிங்க

## ஜனாதிபதியாகப் பதவியேற்று இன்றுடன் ஒருவருடம்

**"நான் ஒரு ஆபத்தான சவாலைத்தான் பொறுப்பேற்றேன். ஆழமான குழி. அடிப்பகுதி கண்ணுக்குத் தெரிவதில்லை. மெல்லிய கண்ணாடியால் பாலம் கட்டப்பட்டிருக்கிறது. கைப்பிடி கூட இல்லை. என் கால்களுக்கு கழற்ற முடியாத இரண்டு காலணிகள் இடப்பட்டுள்ளன. பாதணிக்குக் கீழே கூர்மையான இரும்பு ஆணிகள் இருக்கின்றன. குழந்தையைப் பாதுகாப்பாக அடுத்த பக்கத்திற்கு அழைத்துச் செல்ல வேண்டும். நாட்டுக்காகவே இந்த சவாலை ஏற்றேன். தனிநபரையோ குடும்பத்தையோ ஒரு குழுவையோ காப்பதல்ல எனது நோக்கம். முழுநாட்டையும், மக்களையும் காப்பாற்றவும் இளைஞர்களின் எதிர்காலத்தைப் பாதுகாக்கவும் நான் என் உயிரைப் பணயம் வைத்து இந்தச் சவாலை எதிர்கொள்கிறேன். இந்த சவாலை நான் வெற்றி கொள்வேன். உங்கள் அனைவரின் ஆதரவையும் தாருங்கள். நாட்டுக்கான எனது பொறுப்பை நான் நிறைவேற்றுவேன். அதுவே நான் உங்களுக்கு வழங்கும் வாக்குறுதி"**



2022 மே 16 ஆம் திகதி அப்போதைய பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்க ஆற்றிய விசேட உரையில் இவ்வாறு கூறியிருந்தார். இளவரசர் மைக்கேலின் உயிரைக் காப்பாற்றும் சவாலை குரூசா எதிர்கொண்டார். ஆனால் அதனை விட பாரிய சவாலான இந்த நாட்டின் 22 மில்லியன் மக்களின் தலைவிதியைக் காக்கும் சவாலை அப்போது ரணில் விக்கிரமசிங்க தன் தோள் மீது சுமந்தார். ரணில் விக்கிரமசிங்க ஒரேயொரு பாராளுமன்ற உறுப்பினர் பதவியை வைத்துக் கொண்டு இந்தச் சவாலை ஏற்றுக்கொண்டார். ஒரு சிறு தவறு நிகழ்ந்தாலும் அனைத்தையும் இழக்கும் அபாயம் உள்ள நிலையில் இந்தச் சவாலுக்கு அவர் முகங்கொடுத்தார்.

குரூசா கொடிப் பாலத்தை வெற்றிகரமாகக் கடந்தாள். "கடவுளே, விழுந்துவிடுவாள் என்று நினைத்தோம்" என அவளைப் பார்த்து அன்று சொன்னார்கள். ரணில் விக்கிரமசிங்க சவாலை ஏற்றுக்கொண்ட போது, "ரணிலும் வீழ்வார்" என்றே சிலர் நினைத்தார்கள்.

அன்று நாட்டில் எரிபொருள் இருக்கவில்லை, எரிவாயு இல்லை, பால்மா இல்லை. நீண்ட வரிசைகள் மட்டுமே இருந்தன.

பணவீக்கத்தால், அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலை கிடுகிடுவென உயர்ந்திருந்தன. மருந்துத் தட்டுப்பாடும் அந்த பட்டியலில் இணைந்திருந்த்து. தினமும் 12 மணி நேரத்திற்கும் மேலாக மின்வெட்டு அமுலில் இருந்தது. போக்குவரத்து நிறுத்தப்பட்டு, தொழிற்சாலைகள் மூடப்படும் நிலை உருவானது. இலங்கை மத்திய வங்கியின் டொலர் கையிருப்பு அடிமட்டத்திற்கு வந்தது. பொருட்களை இறக்குமதி செய்ய முடியாத நிலை ஏற்பட்டது. உர இறக்குமதி நிறுத்தப்பட்டதால், நாட்டில் உணவுப் பயிர்களின் உற்பத்தியும் தடைப்பட்டது. பஞ்சம் ஏற்படும் அபாயம் குறித்து தொடர்ந்து எச்சரிக்கை விடுக்கப்பட்டது. குறைந்த பட்ச வாழ்வாதாரம் கூட இல்லாமல் மக்களின் உயிர்கள்



ஊசலாடின. பல்வேறு கும்பல்கள் அமைதிப் போராட்டத்தை வன்முறையாக மாற்றி நீடித்த அராஜகத்தை உருவாக்கியிருந்தன.

சர்வதேச தர நிர்ணய முகவர் நிலையங்கள் இலங்கையை தங்கள் சுட்டெண்களில் அடிமட்டத்திற்கு கொண்டு வந்தன. நாடு வங்குரோத்தாகிவிட்டதாக உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டதால் எந்த வெளிநாட்டு நிதி நிறுவனங்களிடமிருந்து கடன் பெற முடியாத நிலை உருவானது. இலங்கையில் உருவாகி வரும் நெருக்கடிக்கு தீர்வை வழங்குவது சாத்தியமற்றது எனவும் அதைக் கணிப்பது கூட கடினம் எனவும் சர்வதேச பொருளாதார மற்றும் அரசியல் ஆய்வாளர்கள் அறிவித்திருந்தார்கள். நவீன கடன்பொறியில் சிக்கியதால் ஏற்பட்ட பாரிய நிதிபொருளாதார நெருக்கடி நிலைமையில் இலங்கை குறித்து சர்வதேச மட்டத்தில் பேசப்பட்டது. இலங்கை கரையேறுவதானால் பாரிய அதிசயம் நடக்க வேண்டும் என்றும் கூறப்பட்டது.

இந்தப் பின்னணியில்தான் அமைச்சரவையைக் கலைத்து புதிய அரசாங்கத்தை அமைக்குமாறு அன்றைய ஜனாதிபதி கோட்டாபய மற்றும் மஹிந்த ஆகியோர் அழைப்பு விடுத்தார்கள். ஆனால் சம்பிரதாயபூர்வமான எந்த அரசியல் தலைவரும் அந்த அழைப்பை ஏற்றுக்கொள்ளவில்லை. எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச கூட பின்வாங்கினார். எந்த அரசியல்வாதிக்கும் நெருக்கடி நிலைமை குறித்து சரியான பார்வையும் மதிப்பீடும் இருக்கவில்லை. எனவே, நாட்டைக் கட்டியெழுப்புவது தொடர்பான சரியான தொலைநோக்கோ வேலைத்திட்டமோ எவருக்கும் இருக்கவில்லை.



வரலாற்றில் முதன்முறையாக, அரசியலமைப்பு இனியும் செல்லுபடியாகாது என அராஜகக் குழுக்கள் அறிவித்த பின்னணியில், அரசின் அனைத்து நிர்வாகக் கட்டமைப்புகளும் போராளிகள் எனக் கூறும் கும்பல்களால் கைப்பற்றப்பட்டன. பாராளுமன்றத்தைக் கைப்பற்றத் தயாராகிவிட்ட பின்னணியில், சம்பிரதாயபூர்வ அரசியல் தலைமைகள் செய்வதறியாது தடுமாறின. இவ்வாறான பின்னணியில் "ரணிலும் வீழ்வாரா?" என பலரும் சிந்தித்தது நியாயமானதுதான்.

ஆனால் ரணில் விக்கிரமசிங்க நாட்டின் எதிர்காலம் குறித்து சிறந்த நோக்கைக் கொண்டிருந்தார், தெளிவான பார்வையைக் கொண்டிருந்தார். இலங்கையின் வரலாறு எதிர்நோக்கும் மிக மோசமான பொருளாதார நெருக்கடி விரைவில் வரப்போகிறது என்பதை அந்த தொலைநோக்கின் வாயிலாகத்தான் அவர் முன்கூட்டி எச்சரித்திருந்தார். அதனால்தான் IMF உடனான திட்டமொன்றிற்கு உடனடியாகச் செல்ல வேண்டும் என்று எதிர்கட்சியில் தனி ஒருவராக இருந்து முதன் முதலில் குரல் எழுப்பினார்.

பாராளுமன்றத்தின் பெரும்பான்மை வாக்குகளுடன் ரணில் விக்கிரமசிங்க நிறைவேற்று ஜனாதிபதியாக தெரிவானார். நாட்டின் 22 மில்லியன் மக்களும் அதை அமைதியாக ஆமோதித்தனர்.

### 22 மில்லியன் மக்களின் நம்பிக்கைக்குரியவாறு நாட்டை சரியான பாதையில் வழிநடத்தும் ஜனாதிபதி

21 ஜூலை 2023 ஆம் திகதி ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாகப் பதவியேற்று ஓராண்டு நிறைவடைகிறது.

சர்வகட்சி அரசாங்கத்தை ஸ்தாபிப்பதற்கு எதிர்க்கட்சி இணங்கவில்லை.

"எனக்கு அதிகாரம் அல்ல, நாடுதான் முக்கியம். எனக்கு அதிகார ஆசையோ தேவையோ இல்லை. நாட்டை மீட்க வேண்டும் என்பது மட்டுமே எனக்குள்ள ஒரே தேவை" என்று ஜனாதிபதி தனது நோக்கத்தை அனைவர் முன்னிலையிலும் வைத்தார் .

முதலில் போராட்டம் என்ற பெயரில் நாட்டை அராஜகத்திற்கு தள்ளும் சக்திகள் விரட்டப்பட்டு சட்டம் ஒழுங்கு நிலைநாட்டப்பட்டது. பின்னர் 2022ஆம் ஆண்டுக்கான இடைக்கால வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டதுடன், பாதிக்கப்பட்ட பொதுமக்களுக்கு உடனடி நிவாரணம் வழங்குவதற்கான அவசரகால தீர்வுகள் முன்மொழியப்பட்டன. நீண்ட பயணத்திற்கு நாட்டை தயார்படுத்தும் வகையில் உரம், உணவு, மருந்து, எரிபொருள், எரிவாயு தட்டுப்பாடு முடிவுக்கு வந்ததுடன், மின்வெட்டு படிப்படியாக முடிவுக்கு வந்தது. 2023 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகள் மூலம் பழைய பொருளாதாரப் பாதையை மாற்றுவதற்காக துரித மறுசீரமைப்புகள் அறிமுகப்படுத்தப்பட்டன.

அதன் மூலம், பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண ஒரே திறவுகோலாக இருந்த சர்வதேச நாணய நிதியத்துடன் (IMF) ஒப்பந்தம் செய்வதற்கான அடித்தளம் அடிப்படை தயாரிக்கப்பட்டது. ஒரு சில மாதங்களுக்குள், IMF உடனான ஒரு புதிய வேலைத்திட்டத்திற்குத் தேவையான பல மறுசீரமைப்புகள் செயல்படுத்தப்பட்டன. அரசின் வருவாயை உயர்த்தி, புதிய வரிக் கொள்கையை அறிமுகம் செய்தல், தேவையற்ற செலவுகளை கண்டிப்பாகக் கட்டுப்படுத்துதல், எரிபொருள் மற்றும் மின்சார விலை சூத்திரங்களை அறிமுகப்படுத்துதல் என்பவற்றின் ஊடாக அரச நிதியை ஒருநிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது. முதலீட்டுச் சூழலை உருவாக்குவதற்கும் அத்தியாவசியப் பொருட்களின் இறக்குமதிக்கான திறனை உருவாக்குவதற்கும் ஒரு நெகிழ்வான அந்நிய செலாவணி முறையும் அறிமுகப்படுத்தப்பட்டது.

அரசாங்கத்தின் நிதித்துறையின் ஸ்திரத்தன்மைக்கான கொள்கைகளை அறிமுகப்படுத்துதவும் அரசாங்க இயந்திரத்தில் ஊழலைக் ஒழிப்பதற்கான கட்டமைப்பு ரீதியான மறுசீரமைப்புகளை மேற்கொள்ளவும் தேவையான அடிப்படைப் பின்னணியும் தயாரிக்கப்பட்டுள்ளது. பொருளாதார ரீதியாக நலிவடைந்த சமூகத்தை இலக்காகக் கொண்ட சமூக பாதுகாப்புத் திட்டமும் செயல்படுத்தப்பட்டது. கடந்த ஆண்டு 65% ஆக இருந்த பணவீக்கத்தை ஒற்றை இலக்கத்திற்கு கொண்டு வர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதன்மூலம் பொருளாதாரத்தை மீட்பதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டதன்காரணமாகசிலமாதங்களாக வீழ்ச்சியடைந்திருந்த நிலையில் இருந்து தலைநிமிர்ந்து நிற்க முடிந்தது.

மேலும் கடன் மறுசீரமைப்பு வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதியின் நேரடி அறிவுறுத்தலின் பேரில் அமுல்படுத்தப்பட்ட இந்தக் கடன் மறுசீரமைப்புச் செயற்பாடு உலகின் கவனத்தை ஈர்த்தது மட்டுமன்றி உலகத்திற்கே முன்னுதாரணமாகவும் அமைந்தது. மேலும் அண்மையில் பாகிஸ்தான் பிரதமர், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு நன்றி தெரிவித்திருந்தார். ஜனாதிபதி வழங்கிய ஆலோசனைகள் தமது நாட்டின் கடன் மறுசீரமைப்புச் செயற்பாடுகளை வெற்றிகரமாக மேற்கொள்ள உதவியதாக அவர் குறிப்பிட்டிருந்தார்.

ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கம் சர்வதேச நாணய நிதிய செயற்பாடுகளை வெற்றிகரமாக முன்னெடுக்கையில் எதிர்க்கட்சிகள் வழமை போன்று IMF விரும்பிய வழியில் நாடு வழிநடத்தப்படுவதாக விமர்சித்தது. ஆனால் 2048 இல் சக்தி வாய்ந்த மற்றும் அபிவிருத்தியடைந்த இலங்கையை இலக்காகக் கொண்ட ஒரு வேலைத்திட்டம் தான் முன் வைக்கப்பட்டுள்ளது என்ற உண்மை எதிரணிக்கு விளங்கவில்லை.

கடுமையான பொருளாதாரப் படுகுழியில் விழுந்து கிடக்கும் ஒரு நாட்டை சற்று தூக்கி நிறுத்தியதன் ஊடாக மாத்திரம் அபாயத்திலிருந்து விடுபட்டதாக அர்த்தமாகி விடாது. இதனை சரியான திசையில் தொடர வேண்டும். இல்லையேல் இன்னும் மோசமான படுகுழியில் விழுவதை தவிர்க்க முடியாது.அதற்கான 'தேசிய மறுசீரமைப்பு திட்டம்' தற்போது தயாராகி வருகிறது. அடுத்த 5 ஆண்டுகளில் முழுமையான பொருளாதார ஸ்திரத்தன்மையை உருவாக்கி, அடுத்த 25 ஆண்டுகளில் இந்த நாட்டை அதிக வருமானம் பெற்று வளர்ந்த நாடாக மாற்றும் வேலைத்திட்டம் அது.

மேலும், சர்வதேச நாணய நிதியத்தின் பரிந்துரைகளுடன் முன்னோக்கி நகர்ந்து, 2048 ஆம் ஆண்டில் சக்திவாய்ந்த மற்றும் அபிவிருத்தியடைந்த இலங்கையை கட்டியெழுப்புவதற்கான அடித்தளம் அமைக்கப்பட்டுள்ளது. அரச நிதி மற்றும் மறுசீரமைப்புகள் மூலம் பொருளாதார வளர்ச்சியை அடைய, தேசிய வருமானத்தை அதிகரிக்க, மொத்த உள்நாட்டு உற்பத்தியை அதிகரிக்க, பணவீக்கத்தை கட்டுப்படுத்த, வேலையில்லாதிண்டாட்டத்தை குறைக்க மற்றும் ஏற்றுமதி பொருளாதாரத்தை உயர்த்த ஒரு புதிய பெரிய பொருளாதார நோக்கு முன்வைக்கப்பட்டுள்ளது.

அதேவேளை நாட்டில் நிரந்தர நல்லிணக்கத்திற்கான முறையான செயற்பாடும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அது தொடர்பில் அண்மையில் வடக்கு, கிழக்கை பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் அரசியல் தலைவர்களை ஜனாதிபதி சந்தித்தார்.

நல்லிணக்கத்தை ஏற்படுத்தவும் அந்தப் பிரதேச மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கும் சிறந்த தீர்வொன்றை தாம் முன்வைத்துள்ளதாகவும், அதனை நடைமுறைப்படுத்துவதா இல்லையா என்பது உங்களுடைய கைகளிலே உள்ளது என்றும் ஜனாதிபதி வலியுறுத்தினார். தேசியப் பிரச்சினைக்கு தீர்வு காண்பதை அடுத்த தலைமுறை வரை கொண்டு செல்ல மாட்டேன் என்றும் அவர் உறுதிபட கூறியிருந்தார்.

13ஆவது அரசியலமைப்பு திருத்தத்தை முழுமையாக செயற்படுத்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உடன்பட்டிருந்தது பற்றியும் இதன் போது அலசப்பட்டது. ஆனால், தான் ரணில் விக்கிரமசிங்க என்றும் ரணில் ராஜபக்ஷ அல்ல என்றும் ஜனாதிபதி பதிலளித்திருந்தார். தனது பதவிக்காலத்திற்குள் வழங்கக் கூடிய உச்சபட்ச தீர்வை வழங்குவதில் தனக்குள்ள ஈடுபாட்டையும் அவர் வெளிப்படுத்தியிருந்தார்.

எவ்வாறாயினும், தனது நிலைப்பாட்டை விட்டுக்கொடுக்காத அரசியல் ஆளுமையாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இருந்து வருகிறார். நாட்டில் வாழும் 22 மில்லியன் மக்களின் மீட்பாளராக அவர் இன்று மாறியிருக்கிறார். அவரைத் தெரிவு செய்தது சரியானதே என்பது கடந்த ஆண்டு நாடு இருந்த நிலையையும் நாட்டின் தற்போதைய நிலைமையும் ஒப்பிடுகையில் புலனாகிறது. இந்த சுமுக நிலைமை நீடிப்பதற்கு 2048 இல் சக்திவாய்ந்த அபிவிருத்தியடைந்த இலங்கையை உருவாக்குவதற்காக போடப்பட்டுள்ள அடித்தளத்தின் ஊடாக நாட்டைக் கட்டியெழுப்ப வேண்டும். ஆரம்பித்துள்ள பயணத்தை பாதியில் நிறுத்தாமல் தொடர வேண்டும். ஜனாதிபதி பதவியேற்று ஓராண்டு நிறைவடையும் நிலையில் நாட்டிலுள்ள 22 மில்லியன் மக்களுடன் ஏற்படுத்தப்பட்டுள்ள உடன்பாடு அதுதான்.

**எஸ்.எம். லியனகே...**
தமிழாக்கம்:
**எம்.எஸ். பாஹிம்**

# நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்டெடுக்கும் சாதனைப் பயணத்தின் ஒரு வருட பூர்த்தி

## பொருளாதார வீழ்ச்சியிலிருந்து படிப்படியாக மீண்டெழுந்து வரும் இலங்கைத் தேசம்

## இலங்கையின் நிறைவேற்று அதிகாரமுள்ள எட்டாவது ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க பதவியேற்று ஒருவருட காலம் நிறைவு

**மனிதன் மீது வரலாறு சுமத்துகின்ற பணிகளை செய்து முடிக்க வேண்டியது கட்டாயமாகும். எக்காலத்திலாவது, எவ்விதத்திலாவது அதனை செய்து முடிக்க நேரிடும். அதற்கு தனிப்பட்ட விருப்புவெறுப்புகள் அவசியமில்லை. இந்த வரலாற்றுப் பொறுப்பு தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிர–மசிங்க மீதும் சுமத்தப்பட்டது. அல்லது சவால்கள் நிறைந்த அந்தப் பொறுப்பை அவர் ஏற்றுக்கொண்டார். அந்தப் பணிகளை அவர் தற்போது செய்து வருகிறார்.**



சவால்கள், நெருக்கடிகள் நிறைந்த காலப்பகுதியில் அவற்றைச் சமாளித்து நாட்டை வழிநடத்துவது மட்டுமன்றி இன்னும் 25 வருடங்கள் கடந்து அடுத்த தலைமுறைக்கு அபிவிருத்தி அடைந்த நாட்டை கையளிக்கும் வரலாற்றுப் பணியை அவர் படிப்படியாக ஆற்றிக் கொண்டிருக்கிறார். டிஜிட்டல் மயமாக்கல் பசுமை பொருளாதாரம், விவசாய நவீனமயமாக்கல் உள்ளிட்ட அனைத்துத் துறைகளையும் நவீனமயப்படுத்தி, 2048 இற்குள் சர்வதேசத்தை வெற்றி கொள்ளக்கூடிய அபிவிருத்தி அடைந்த இலங்கையை கட்டியெழுப்புவதே எனது திட்டம் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அறிவித்துள்ளார்.

கடந்த இரண்டு, மூன்று வருடங்களுக்குள் நாம் வரலாற்றில் ஒருபோதும் காணாத பொருளாதார நெருக்கடிகளை எதிர்கொண்டோம். நாட்டின் பொருளாதாரம் 7.8 % ஆக முடங்கிப் போனது. வெளிநாட்டு வருமானம் அற்றுப்போனது. பணவீக்கம் விண்ணைத் தொட்டது. பணவீக்கம் அதிகமுள்ள நாடுகளின் பட்டியலில் இலங்கையும் சேர்க்கப்பட்டது. உணவுத் தட்டுப்பாடும் ஏற்பட்டது. பணம் இருந்தும் பொருட்களை வாங்க வரிசையில் நிற்க நேரிட்டது. எரிபொருள், எரிவாயு பெற்றுக்கொள்ள இரவுபகலாக வரிசையில் நின்ற அனுபவங்கள் கசப்பானவை. உரம் இல்லாமையினால் விவசாயிகள் நிர்க்கதியாகினர். வியாபாரங்கள் சரிவடைந்து பலர் வேலைகளை இழந்தனர். வருமான வழிவகைகளும் முடங்கிப் போயிருந்தன. மருந்து தட்டுப்பாடு, மின்தடை மக்களை பெரும் நெருக்கடிக்குள் தள்ளியது. பொருளாதார சரிவிற்கு மத்தியில் வெளிநாட்டு கடனுக்கான வட்டிகளை மீளச்செலுத்த முடியாத நிலையில் இலங்கை வங்குரோத்து நாடு என்ற பெயரையும் பெற்றுக் கொண்டது.



இத்தனை நெருக்கடிகளுக்கு மத்தியில் நாடு மீட்சிபெறும், அபிவிருத்தியை நோக்கிய பாதையில் அடிவைக்கலாம் என்ற நம்பிக்கை எவருக்கும் இருக்கவில்லை. அதனால் சவால் மிகுந்த வரலாற்றுப் பொறுப்பை ஏற்றுக்கொள்ள எவரும் முன்வரவில்லை. இத்தனை நெருக்கடிகளையும் மிகவும் அமைதியாக அவதானித்துக் கொண்டிருந்த ரணில் விக்கிரமசிங்க, தனது வாழ்நாள் ஆளுமையைக் கொண்டு வீழ்ச்சி அடைந்த நாட்டை மீளக்கட்டியெழுப்பும் பணியை ஏற்றுக்கொண்டார். அவர் ஜனாதிபதியாக பொறுப்பேற்றார். உலகில் அராஜக நிலை உச்சமடைந்த பெருமளவான நாடுகள், பல வருடங்களாக முடங்கிக் கிடக்கும் போது ஜனாதிபதியின் வேலைத்திட்டத்தால் ஒரு வருடம் என்ற குறுகிய காலப் பகுதிக்குள் இலங்கைக்கு மீண்டெழும் இயலுமை கிட்டியது.

### சட்டம் ஒழுங்கை பாதுகாத்தல்:

போராட்டம் என்ற பெயரில் அரச சொத்துக்களை சேதப்படுத்திய சிலர் நாடு முழுவதும் வன்முறைகளைப் பரப்பி நாசவேலைகளில் ஈடுபட்டனர். அமைச்சர்கள், அரசியல் தலைவர்கள் மற்றும் ஆதரவாளர்களின் வீடுகளை எரித்து சாம்பலாக்கியவர்கள், கொழும்பு றோயல் கல்லூரிக்கு நன்கொடையாக வழங்க தீர்மானித்திருந்த ஜனாதிபதியின் பிரத்தியேக சொந்த வீட்டிலுள்ள நூலகத்திற்கும் தீமூட்டினர். இந்த நூலகத்தில் ஆசியாவின் பல முக்கியமான புத்தகங்கள் இருந்தன. பொருளாதாரம், சட்டம் மற்றும் ஒழுங்கு என்பன நலிவடைந்து கிடந்த நாட்டை ரணில் விக்கிரமசிங்க பொறுப்பேற்றுக் கொண்டார்.

அரசியல் நோக்கம் கொண்ட ஒருதரப்பு வன்முறையாளர்கள் நாட்டின் ஜனநாயகத்தின் மீது பார்வையை திருப்பியிருந்தனர். நாட்டுத் தலைவரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலமான கோட்டையில் உள்ள ஜனாதிபதி மாளிகை, இந்நாட்டின் முக்கியமான நிர்வாக நிறுவனங்களில் ஒன்றான ஜனாதிபதி அலுவலகம், பிரதமர் அலுவலகம் உள்ளிட்ட இடங்களை தம்வசப்படுத்திக் கொண்டனர். அதன் பின்னர் இந்நாட்டு ஜனநாயகத்தின் உச்ச அம்சமாகக் கருதப்படும் பாராளுமன்றத்தை கையகப்படுத்தும் முயற்சிகளும் இடம்பெற்றன. அதனையடுத்து நிறைவேற்று மற்றும் சட்டவாக்க துறைகளை முடக்க மேற்கொள்ளப்பட்டவிருந்த நாசகார செயற்பாடுகளுக்கு முற்றுப் புள்ளி வைக்கும் வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தீர்மானங்களை எடுத்து, உத்தரவுகளைப் பிறப்பித்தார். இதனால் பொதுமக்களின் பாதுகாப்பு உறுதி செய்யப்பட்டது, சட்டம் உரிய முறையில் நடைமுறைப்படுத்தப்பட்டது, நாட்டில் அமைதி திரும்பியது.

### வரிசையுகம் நிறைவு:

மின்தடை, உணவு எரிபொருள் தட்டுப்பாடு, எரிவாயுவுக்கான வரிசை என்பவற்றினால் மக்கள் அன்றாடம் நெருக்கடிகளைச் சந்தித்தனர். எரிபொருள் தட்டுப்பாட்டினால் வீதிகளிலும் கூட அமைதியின்மை நிலையே காணப்பட்டது. கொழும்பிலும் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்பட்ட நிலையில், வீதிகளை மறித்து, மக்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர்.

வீதிகளில் இறங்கிப் போராடினாலும் அடுத்து தாம் எந்தப் பாதையில் செல்வது என்ற கேள்விக்குறியுடன் இருந்த மக்கள் பெரும் நெருக்கடியில் சிக்கிக்கொண்டிருந்தனர். எந்த வரிசையில் நிற்பது என்று தெரியாமல் திண்டாடி வந்தனர்.

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாகப் பொறுப்பெற்ற பின்னர், அத்தியாவசியான எரிவாயு, எரிபொருள், உணவுப் பொருட்கள் உள்ளிட்ட சேவைகளையும், தேவைகளையும் படிப்படியாக பெற்றுக்கொடுக்க ஆரம்பித்தார். அதேநேரம் சரியான பொருளாதார முன்னேற்றத்திற்கான திட்டங்களை வகுத்தார். வரிசை யுகத்திற்கும் முற்றிப்புள்ளி வைக்கப்பட்டது. விரக்தியை ஏற்படுத்திய பணவீக்கத்தை குறைக்க ஆரம்பித்தார். நாட்டின் பிரச்சினையைக் கண்டறிந்தார். பிரச்சினைகளுக்கான குறுகிய, இடைக்கால, நீண்டகால திட்டங்களை வகுத்து, நோய்க்குரிய சரியான மருந்தை கொடுக்க ஆரம்பித்தார்.

சர்வதே நாணய நிதியத்துடனான வேலைத்திட்டம்:

பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான அல்லது நெருக்கடியில் இருந்து மீள்வதற்கான ஒரே வழியாக சர்வதேச நாணய நிதியத்தை நாடுவதை மாத்திரமே செய்ய முடியுமென அறிந்திருந்த ஜனாதிபதி, சர்வதேச நாணய நிதியத்துடன் மேற்கொண்ட பல சுற்று நீண்ட பேச்சுவார்த்தைகளை வெற்றிப் பாதையில் நகர்த்தினார். நீடிக்கப்பட்ட வசதிகளை இலங்கைக்கு பெற்றுக்கொடுக்க சர்வதேச நாணய நிதியம் இணக்கம் தெரிவித்தது. உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி உள்ளிட்ட நிதி நிறுவனங்களுடன் இணைந்து நாட்டிற்கு கடன் வசதிகளை பெற்றுக்கொள்ளும் வேலைத்திட்டமும் ஆரம்பிக்கப்பட்டது.

ஜனாதிபதியின் வேலைத்திட்டத்திற்கு அயல்நாடான இந்தியாவின் ஆதரவு பெருமளவில் கிடைத்தது. பங்களாதேஷ் மற்றும் ஜப்பான் உள்ளிட்ட நாடுகளிலிருந்து மனிதநேய உதவிகளும் கிடைத்தன. அதேபோல் சீனா, இந்தியா மற்றும் ஜப்பான் போன்ற இந்நாட்டின் பிரதான கடன் வழங்குநர்களுடன் பெரிஸ் சமவாய நாடுகளும் கடன் மறுசீரமைப்பு முயற்சிகளுக்கு இணக்கம் தெரிவித்தன. கடன் மறுசீரமைப்பின் பலன்களை அடைந்துகொள்ள இலங்கையால் முடிந்துள்ளது. அந்த வரிசையில் உள்நாட்டு கடன்களையும் மறுசீரமைக்க வேண்டிய தேவை எழுந்துள்ளது.

இலங்கையின் வெளிநாட்டு கடன்களை விடவும் உள்நாட்டு கடன்கள் அதிகமாக காணப்படுவதால், நாம் மீண்டும் வங்குரோத்து நிலையை அடையாமல் இருக்க கடன் மறுசீரமைப்பு அவசியமானது. இலங்கை வங்குரோத்து நிலையிலிருந்து மீண்டு கடன்களை மீளச்செலுத்தும் நிலைக்கு வரவேண்டுமாயின் உள்நாட்டு கடன் மறுசீரமைப்பை மேற்கொள்ள வேண்டியதன் அவசியம் வலியுறுத்தப்பட்டது. ஆனால் பொதுமக்களின் வங்கிக் கணக்குகள் முடக்கப்படும், நிதித் துறைக்கு பெரும் பாதிப்புகள் ஏற்படும் என்பது போன்ற போலிப் பிரசாரத்தை எதிர்கட்சிகள் முன்னெடுத்தன. ஊழியர் சேமலாப மற்றும், நம்பிக்கை நிதியங்களுக்கு பாதிப்பு ஏற்படும் என்று கூச்சலிட்டார்கள்.

ஆனால், உள்நாட்டு கடன் மறுசீரமைப்புகள் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டன. பொது நிதியங்களுக்கும் 57 மில்லியன் வங்கிக் கணக்குகளுக்கும் எவ்வித பாதிப்புக்களும் ஏற்படவில்லை. உண்மையாகவே இந்த கடன் மறுசீரமைப்பு பணிகள் அரசியல்வாதிகளால் மேற்கொள்ளப்படவில்லை. அதற்கான திட்டமிடலை திறைசேரி, மத்திய வங்கி மற்றும் உள்நாட்டு வெளிநாட்டு நிதி ஆலோசகர்களின் பங்கேற்புடனேயே முன்னெடுக்கப்பட்டது.

இவ்வாறு திட்டமிடப்பட்ட வகையில் மேற்கொள்ளப்படும் வேலைத்திட்டங்களின் பலனாக மக்களால் தற்போது நிம்மதிப் பெருமூச்சுவிட முடிந்துள்ளது. ஓரளவு நிவாரணம் கிட்டியுள்ளது. முடங்கிக் கிடந்த நாடு நகர ஆரம்பித்துள்ளது.

### விவசாயப் புரட்சி:

இலங்கை விவசாய நாடு என்ற வகையில் விவசாயத்துறையில் கவனம் செலுத்துவது மிக முக்கியமானதாகும். கடந்த காலங்களில் விவசாயிகள் எதிர்கொண்ட பெரும்பாலான பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்பட்டுள்ளது. ஆனால் இது போதுமானதாக இல்லை. விவசாய நவீனமயமாக்கல் காலத்தின் கட்டாயம் என்பதை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தி வருகிறார். இதனை விரைந்து முன்னெடுப்பதால் விவசாயிகளுக்கு நம்பிக்கை பிறந்துள்ளது.

2020/21 ஆம் ஆண்டுகளில் இயற்கை உரம் கட்டாயமாகப்பட்டதால் விவசாயிகள் பல நெருக்கடிகளை எதிர்கொண்டனர். உணவுப் பஞ்சம் ஏற்படும் நிலை வந்தது. இதனை அறிந்துகொண்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, விவசாயிகளுக்கு அவசியமான உர வகைகளை உரிய விதத்தில் பெற்றுக்கொடுக்க உத்தரவிட்டார். இதனால் பெரும் உணவுப் பஞ்சத்தில் விழுந்துவிடாமல் நாடு தப்பிக் கொண்டது.

விவசாய அறுவடைகள் மேம்பட்டதன் பலனாக நாட்டின் உணவுத் தட்டுப்பாடு சடுதியாக தணிந்தது. 2022/2023 களில் தன்னிறைவான நெல் உற்பத்தியை மேற்கொள்ள முடிந்தது. குறைந்த வருமானம் ஈட்டும் 02 மில்லியன் குடும்பங்களுக்கு 10 கிலோ அரிசியை இரு மாதங்களுக்கு இலவசமாக வழங்க முடிந்தது. அரிசியின் விலை குறைந்தது. நுகர்வோருக்கும் நிவாரணம் கிடைத்தது.

விவசாயத்துறையை நவீனமயப்படுத்துவதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னெடுத்துச் செல்லும் வேலைத்திட்டங்களின் கீழ் 2025 அம் ஆண்டளவில் இந்நாட்டுத் தேவைக்கான 80 வீத விவசாய உற்பத்திகளை உள்நாட்டிலேயே மேற்கொள்ள முடியும் என விவசாய அமைச்சர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

நிலையான விவசாய அபிவிருத்தியின் ஊடாக 2048 ஆம் ஆண்டில் 'அபிவிருத்தி அடைந்த இலங்கை' என்ற இலக்கை அடைய அவசியமான ஏற்றுமதியை இலக்குவைத்த விவசாய உற்பத்திகளை ஊக்குவிப்பதே நோக்கமாகும்.

ஜனாதிபதியின் பணிப்புரைக்கமைய ருஹுனு பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் காமினி சேனாநாயக்க தலைமையில் அனைத்து நிறுவனங்களையும் ஒழுங்குபடுத்தும் வகையில் விவசாயத் துறையை நவீனமயப்படுத்துவதற்கான தேசிய கொள்கை கட்டமைப்பொன்று தற்போது தயாரிக்கப்பட்டு வருகின்றது. இந்தக் கொள்கை கட்டமைப்பு ஓகஸ்ட் 2023 இறுதிக்குள் நிறைவு செய்யப்படவுள்ளது.

விவசாயத்தின் உற்பத்தித்திறனை அதிகரிப்பதற்காக விவசாய நவீனமயமாக்கல் செயலகம் நிறுவப்பட்டுள்ளது.




மேலும், பல்வேறு வெளிநாட்டு உதவித் திட்டங்களின் மூலம் விவசாயத்தை நவீனமயமாக்கும் பல வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அதன்படி விவசாய நவீனமயமாக்கல் திட்டத்தின் ஊடாக விவசாய பொருளாதாரம் ஒன்றை கட்டமைக்க முடியும் என்பதே ஜனாதிபதியின் நம்பிக்கையாகும்.

போட்டித்தன்மை நிறைந்த உலகை எதிர்கொள்ளும் வகையில் நாட்டின் பொருளாதாரத்தை வடிவமைக்கத் தேவையான பொருளாதார சீர்திருத்தங்கள் ஜனாதிபதியின் வழிகாட்டுதலின் கீழ் படிப்படியாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. இந்த பொருளாதார மறுசீரமைப்புக்கள் மூலம், தவறான கொள்கைகள், பலவீனமான திட்டங்கள் மற்றும் தோல்வியடைந்த திட்டங்களுக்கு பதிலாக, புதிய சிந்தனைகளுடன் புதிய பாதையில் நாட்டைக் கொண்டுச் செல்ல வேண்டும் என்பதையே ஜனாதிபதி வலியுறுத்துகிறார்.



இருப்பினும், பாரம்பரிய அரசியலில் ஈடுபட்டுள்ள சில குழுக்கள் இந்தப் பொருளாதார மறுமலர்ச்சியைத் தடுக்க பல்வேறு முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றன. பொருளாதார மறுசீரமைப்புக்கள் குறித்து மக்களிடையே தேவையற்ற அச்சத்தை ஏற்படுத்த முயற்சிக்கின்றன. 'நாடு விற்கப்பட போகிறது' என்ற முழக்கத்தை முன்வைத்து மக்களை தவறாக வழிநடத்தி வருகின்றனர்.

நவீன உலகத்துக்கும், நவீன தொழில்நுட்பத்துக்கும் ஏற்றவாறு நமது பொருளாதாரத்தை வடிவமைக்காவிட்டால், பின்னோக்கிச் செல்ல வேண்டியிருக்கும். அவ்வாறான கொள்கைகளினால் நாடு பொருளாதார காலனித்துவ நிலைமைக்குள் தள்ளப்படும் என்பதோடு, நாட்டை விற்றாலும் கடன் பெற முடியாது என்ற நிலைமை உருவாகிவிடும்.

எனவே எமது நாட்டுக்குத் நிலையான அபிவிருத்தியையும் வெற்றியையும் பெற்றுக்கொடுக்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் முன்மொழியப்பட்ட பொருளாதார மறுசீரமைப்புக்களை முன்னெடுக்கப்பட வேண்டும். இந்த மறுசீரமைப்புக்களின் ஊடாக இலங்கையின் நவீனமயமாக்கல் துரிதப்படுத்தப்பட்டு அர்த்தமுள்ளதாக இருக்கும், சந்தை வாய்ப்புக்கள் விரிவடையும், அபிவிருத்தி முயற்சிகளுக்கு சர்வதேச சமூகம் அதிக பங்களிப்பை வழங்கும். எனவே, மழையில்லாத தெளிவான வானத்தில் மின்னலைத் தேடி காலம் கடத்துவது வீண் முயற்சியாகும் என்பதை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

சமூக நலன்புரித் திட்டங்கள்:

பொருளாதார மீட்சி தேவைப்படும் மக்களுக்கு ஆதரவளிக்கும் வகையில் ஜனாதிபதியின் வழிகாட்டுதலின் கீழ் 'அஸ்வெசும' சமூகநலத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இதன்படி, மாற்றுத்திறனாளிகள், பாதிக்கப்படக் கூடியவர்கள், வறியவர்கள் மற்றும் மிக வறியவர்கள் ஆகிய 04 சமூகப் பிரிவுகளின் கீழ் 'அஸ்வெசும' நலன்புரிப் பலன்கள் வழங்கப்படுகிறது. ஊனமுற்றோர், முதியவர்கள் மற்றும் சிறுநீரக நோயாளர்களுக்கு வழமை போன்று உரிய கொடுப்பனவுகள் வழங்கப்படும்.

எவருக்கும் அநீதி இழைக்கப்படாமலும், எவரும் கைவிடப்படாமலும் இந்த வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துமாறு ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார். இதற்கு அரசியல் சாயம் பூச சிலர் முயற்சித்தாலும், இது உண்மையில் சமூக நலனை நோக்கமாகக் கொண்ட வேலைத்திட்டமாகும்.

கடந்த வருடம் அரசாங்கம் 144 பில்லியன் ரூபாவை நலன்புரி நலன்களுக்காக செலவிட்ட போதிலும், இந்த வருடம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் ஆரம்பிக்கப்பட்ட 'அஸ்வெசும' வேலைத்திட்டத்திற்காக 206 பில்லியன் ரூபாவை ஒதுக்கீடு செய்ய எதிர்பார்த்துள்ளதாக நிதியமைச்சு தெரிவித்துள்ளது.

சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கியுடனான பேச்சுவார்த்தையில் 187 பில்லியன் ரூபாவை இந்நாட்டின் வறிய மக்களின் மேம்பாட்டிற்காக பயன்படுத்துமாறு முன்மொழிந்துள்ள போதிலும், கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் அரசாங்கம் குறித்த தொகைக்கு மேலதிகமாக 62 பில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளமை சிறப்பம்சமாகும்.

### உலகிற்கு திறக்கப்பட்டும் இலங்கையின் கதவுகள்:

பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்த இலங்கையின் கதவுகள் உலகுக்காக திறக்கப்பட வேண்டும் என்பதே ஜனாதிபதியின் எதிர்பார்ப்பாகும். சர்வதேச வர்த்தக நிறுவனங்களால் எடுக்கப்படும் தனித்தனியான தீர்மானங்களில் காணப்படும் குறைபாடுகளை நிவர்த்தித்து, அந்தச் செயற்பாடுகளை மேலும் வினைத்திறன் மிக்கதாகவும் ஒழுங்காகவும் மேற்கொள்ளும் வகையில், இலங்கையில் சர்வதேச வர்த்தக அலுவலகத்தை (ITO) நிறுவுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. சம்பந்தப்பட்ட அனைத்து நிறுவனங்களையும் ஒருங்கிணைப்பதன் மூலம், நாட்டின் பொருளாதாரத்திற்குத் தேவையான ஒத்துழைப்புக்களை சர்வதேச துறையிடமிருந்து பெற்றுக்கொடுக்க முடியும்.

முதலாவதாக தெற்காசியாவின் பரந்துபட்ட கூட்டமைப்பான (Regional Comprehensive Economic Partnership RCEP) அமைப்பில் இணைந்துகொள்ளும் முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதோடு இலங்கையில் வெளிநாட்டு முதலீடுகளுக்கு சாதகமான சூழல் மற்றும் சுற்றுலாத்துறை ஊக்குவிப்பு முயற்சிகளும் சாதகமான முறையில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இலங்கையின் அரசாங்கத்துறையின் செயற்பாடுகளை செயற்றிறன் மிக்கதாக மாற்றமால் பலப்படுத்துவது கடினம் என்பதால் டிஜிட்டல் மயமாக்கல் செயற்பாடுகள் கட்டாய தேவையாகியுள்ளன. அதனால் அரசாங்க துறையை டிஜிட்டல் மயமாக்கி நாட்டின் டிஜிட்டல் மயமாக்கல் பணிகளை துரிதப்படுத்துவதே ஜனாதிபதியின் இலக்காகும்.

அடுத்த ஐந்து வருடங்களில் இலங்கையை உயர் வருமானம் ஈட்டும் நாடாக மாற்றுவதே ஜனாதிபதியின் எதிர்பார்ப்பாகும். அத்தோடு 2048 அபிவிருத்தி அடைந்த இலங்கையின் பங்குதாரர் ஆவதற்கு இளைஞர்களுக்கு உள்ள வாய்ப்புக்களையும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சுட்டிக்காட்டியுள்ளார். அதேபோல் நாட்டின் இனப்பிரச்சினையை அடுத்த தலைமுறை மீது சுமத்தாமல் நல்லிணக்கம் குறித்த செயற்பாடுகளை துரிதப்படுத்தியுள்ளார்.

**நாட்டில் பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்துவதாயின் இலங்கையின் கதவுகள் உலகுக்காக திறக்கப்பட வேண்டும் என்பதே ஜனாதிபதியின் எதிர்பார்ப்பு**

**கணேசன் கமலநாதன்...**

# மலேசிய பிரதமர் அன்வருக்கு உலகத் தமிழ் வம்சாவளி அமைப்பு பாராட்டு



11வது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு மலேசிய தலைநகர் கோலாலம்பூர் மலாயா பல்கலைக்கழகத்தில் ஜூலை 21ஆம் திகதி மாலை மலேசிய பிரதமர் டான்ஸ்ரீ அன்வர் இப்ராஹிம் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பல்வேறு நாடுகளில் உள்ள தமிழ் ஆர்வலர்கள் கல்வியாளர்கள், தமிழ் மொழி ஆராய்ச்சியாளர்கள் கலந்து கொண்டு தமிழ் மொழியை அடுத்த கட்டத்திற்கு கொண்டு செல்ல உள்ளனர். இந்நிகழ்விற்கு மலேசிய அரசாங்கம் 1 மில்லியன் ரிங்கட் வழங்கி ஆதரவு அளித்துள்ளது. மேலும் மலேசியாவில் உள்ள அனைத்து தமிழ் அரசியல் கட்சிகளையும் ஒன்றிணைத்து இந்நிகழ்வை முன்னெடுக்க உறுதுணையாக இருந்த மலேசிய பிரதமருக்கு உலகத் தமிழ் வம்சாவளி அமைப்பு நன்றி தெரிவித்துள்ளது. மலேசியாவில் தற்போது ஒற்றுமை அரசாங்கம் நடைபெற்று வருகிறது. அதேபோல் அனைத்து தமிழர்களையும் ஒன்றிணைத்த பிரதமர், மனிதவள அமைச்சர் சிவக்குமார் மற்றும் இந்நிகழ்ச்சி சிறப்பாக அமைய உறுதுணையாக இருந்த ஓம்ஸ் தியாகராஜன், டான்ஸ்ரீ மாரிமுத்து மற்றும் விழா குழுவினர்களுக்கு பாராட்டுக்களை உலகத் தமிழ் வம்சாவளி அமைப்பு தலைவர் செல்வகுமார் தெரிவித்தார்.



நட்டத்தை ஈடு செய்யும் வகையில்

# ரயில்வே திணைக்களத்தை ரயில்வே அதிகார சபையாக மாற்ற நடவடிக்கை

## அமைச்சர் பந்துல குணவர்தன சபையில் தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

நட்டத்தில் இயங்கும் ரயில்வே திணைக்களத்தை இலாபமீட்டும் நிறுவனமாக மாற்றும் வகையில் அதிகார சபையாக உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக போக்குவரத்து,பெருந்தெருக்கள், ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்த்தன பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

ரயில்வே துறையை திணைக்களமாக முன்னெடுத்து ரயில் சேவையை நவீனமயப்படுத்த முடியாதென்றும் ரயில்வே துறையை அதிகார சபையாக மாற்றியமைக்க வேண்டுமெனவும் அமைச்சர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் அசோக அபேசிங்க வாய்மூல விடைக்கான வினாக்கள் வேளையில் எழுப்பிய கேள்வி யொன்றுக்குப் பதிலளிக்கும் வகையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். அது தொடர்பில் அமைச்சர் மேலும் தெரிவிக்கையில், நாட்டில் 168 பிரதான ரயில் நிலையங்களும் 147 உப ரயில் நிலையங்களும் உள்ளன. அத்துடன் 69 ரயில் தரிப்பிடங்களும் காணப்படுகின்றன.

ரயில் நிலையங்களை நவீனமயப்படுத்த பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அதற்கமையவே கொம்பனித் தெரு ரயில் நிலையத்தை ஜோன் கீல்ஸ் நிறுவனமும் களனி ரயில் பவர் நிறுவனம், ராகம, கண்டி, நம்புக்கணை, அநுராதபுரம், நாவலப்பிட்டி ஆகிய ரயில் நிலையங்களை பய்னோ என்ற நிறுவனமும் தெமட்டகொட ரயில் நிலையத்தை தந்திரி என்ற நிறுவனமும் யாழ்ப்பாணம் ரயில் நிலையத்தை இலங்கை வங்கியும் அபிவிருத்தி செய்யும் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளன.

ரயில்வே திணைக்களத்துக்கு சொந்தமான காணிகள் மற்றும் சொத்துக்கள் தொடர்பில் ஆராய்ந்து அவற்றை பிரயோசனப்படுத்துவதற்கு விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இந்த குழுவின் பரிந்துரைக்கமைய எதிர்வரும் நாட்களில் அமைச்சரவை ஊடாக சிறந்த தீர்மானம் மேற்கொள்ளப்படவுள்ளது.

அத்துடன் ரயில் நிலையங்களை அண்மித்துள்ள இரண்டு கிலோமீற்றர் தூரத்துக்குட்பட்ட காணிகளில் சட்ட விரோதமாக அமைக்கப்பட்டுள்ள கட்டிடங்கள் மற்றும் குடியிருப்புகளில் வரி சேகரித்தல் தொடர்பில் கவனம் செலுத்தப் பட்டுள்ளது.

அந்தப் பொறுப்பை ரயில் நிலைய அதிபர்களுக்கு வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வரி சேகரிப்பின் போது 15 வீதத்தை ரயில் நிலைய பொறுப்பதிகாரிகளுக்கு வழங்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

சமஷ்டியை தவிர எதையும் ஏற்க மாட்டோமெனக் கூறி

# உறங்கிக் கொண்டிருக்கும் தெற்கு இளைஞர்களை உசுப்ப வேண்டாம்

## இராஜாங்க அமைச்சர் சுரேன் ராகவன்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

சமஷ்டியைத் தவிர வேறு எதனையும் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை என தெரிவித்து, உறங்கிக்கொண்டிருக்கும் தெற்கு இளைஞர்களை மீண்டும் உசுப்பி விட தமிழ் தேசியவாதிகள் முயற்சிக்கக்கூடாது என இராஜாங்க அமைச்சர் சுரேன் ராகவன் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அதேவேளை, வடக்கு மக்கள் கோராத சமஷ்டிக்கு தாம், ஒருபோதும் இடமளிக்கப் போவதில்லை என்றும் அவர் சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற மத்திய வங்கி சட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சபையில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

அதிகாரப் பகிர்வு தொடர்பான நான்கு சுற்று பேச்சுவார்த்தைகளில் ஜனாதிபதி ஈடுபட்டுள்ளார். இந்த பேச்சுவார்த்தைகளில் கலந்து கொண்ட தமிழ்த் தேசியவாதிகள் வெளியில் சென்று இது அவசியமில்லை என்றே கூறினர். கனவு காண வேண்டாம் என்று நான் அவர்களுக்கு கூற விரும்புகின்றேன்.

சமஷ்டியிலிருந்து வட்டுக்கோட்டைவரைசென்றுமீண்டும்2009 வரை இந்நாட்டு இளைஞர்களை இரத்த களரிக்குள் கொண்டு சென்றவர்கள் மீண்டும் யுத்தத்தையா கேட்கின்றனர்?

அன்றைய கூட்டத்தில் சம்பந்தன் இருந்தார். அவர் சரத் பொன்சேகாவுடன் யாழ்ப்பாணத்தில் சிங்கக் கொடியை அசைத்து பிரிக்கப்படாத நாட்டுக்குள் தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ளும் தீர்வுக்குள் போவோம் என்று உறுதியளித்தார்.

அவ்வாறென்றால் இப்போது பேச்சுவார்த்தை நடக்கும் போது வெளியில் சென்று சமஷ்டியைத் தவிர வேறு எதனையும் ஏற்கமாட்டோம் என அவர்கள் கூறுவது விந்தையாக உள்ளது.

அவர்களுக்கு நான் ஒன்றைக் கூறிக்கொள்ள விரும்புகின்றேன். இந்த நாட்டை ஒருபோதும் பிரிக்க முடியாது. பிரிவினைவாதத்திற்கு நாடு முகம்கொடுக்காது. அந்த வகையில் நாட்டை மீண்டும் யுத்தத்திற்குள் தள்ள வேண்டாம். உறங்கிக் கொண்டிருக்கும் தெற்கு இளைஞர்களை மீண்டும் எழுப்ப முயற்சிக்க வேண்டாம்.

எம்மால் சர்வதேசத்தை மகிழ்விக்கவும் அமெரிக்க, இந்திய தூதுவர்களை மகிழ்விக்கவும் முடியும். ஆனால் அதுவல்ல இன்றைய தேவை.அனைத்து இனங்களின் உரிமைகளுக்காகவும் பொதுவான ஜனநாயகத்தை ஏற்றுக் கொள்வோம். பயணத்தை ஆரம்பிக்க முன்னரே பிரிவினைவாதம், சமஷ்டி என கூறினால் அதற்கு எம்மால் இடமளிக்க முடியாது.

சாதாரண மனிதனாக அன்றி வடக்கு ஆளுநராக இருந்த அனுபவத்துடன் என்னால் ஒன்றைக் கூற முடியும். வடக்கு மக்கள் சமஷ்டிக்கு இடமளிக்கப் போவதில்லை. அடுத்த தேர்தலில் தோல்வியடையும் தமிழ் தேசியவாதிகள் முன்னெடுக்கும் இந்த செயற்பாடுகளை நாம், எதிர்ப்போம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# மயூரபதி ஸ்ரீபத்ரகாளியம்மன் ஆலய ஆடிப்பூர பாற்குட பவனி 22ஆம் திகதி

கொழும்பு 06 வெள்ளவத்தை மயூரபதி ஸ்ரீபத்ரகாளியம்மன் ஆலயத்தின் 36ஆவது ஆடி மஹோற்சவம் கடந்த 8ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. இவ்வாலயத்தில் நாளை 22 ஆம் திகதி ஆடிப்பூர பாற்குட பவனி இடம்பெறவுள்ளது. அன்று காலை 5 மணிக்கு நடைபெறும். அதனைத் தொடர்ந்து அன்று காலை 7 மணிக்கு கொழும்பு பம்பலப்பிட்டி மாணிக்கப்பிள்ளையார் ஆலயத்தில் இருந்து பாற்குட பவனி ஆரம்பமாகும். அன்று காலை 8 மணிக்கு சங்காபிஷேகம் நடைபெறும். மஹோற்சவ காலத்தில் தினமும் அன்னதானம் வழங்கப்படும். எதிர்வரும் 28ஆம் திகதி இலட்சார்ச்சனை பூர்த்தியும் 29ஆம் திகதி காலை 7 மணிக்கு பஞ்சரத பவனி தேர்த்திருவிழாவும் 30ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் 31ஆம் திகதி பூங்காவனமும் இடம்பெறும்.

## சிங்கப்பூரில் நடத்தப்பட்ட...

காப்புறுதியாளர்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணிகளுக்குமிடையிலான பேச்சுவார்த்தை சிங்கப்பூரில் கடந்த ஜுலை 18, 19 ஆம் திகதிகளில் நடைபெற்றன.

கொழும்பு துறைமுகத்துக்கருகில் தீப்பிடித்த எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலினால் ஏற்பட்ட சேதத்துக்கு இழப்பீடு கோரி, இலங்கை அரசாங்கம் கடந்த ஏப்ரல் மாதம் சிங்கப்பூரில் வழக்குத் தாக்கல் செய்தது. இதையடுத்து, தமது கட்சிக்காரர் சார்பில் சட்டத்தரணிகள்

விடுத்த கோரிக்கைக்கு பதிலளிக்கும் வகையில் இந்த கலந்துரையாடலுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது.

சம்பவத்தின் முக்கிய விடயங்கள் மற்றும் அதனால் ஏற்பட்ட விளைவுகள் குறித்து இரு தரப்பிலும் கவனம் செலுத்தப்பட்டது.

இலங்கை அரசாங்கத்தின் சார்பாக கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபை, கடற்றொழில் அமைச்சு ஆகியவை சமர்ப்பித்த இடைக்கால நட்டஈடு மதிப்பீடு தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இந்தக் கோரிக்கை மதிப்பீடு உடனடியாக மேற்கொள்ளப்படுமென கப்பல் உரிமையாளரின் காப்புறுதியாளர்கள், இலங்கைப் பிரதிநிதிகளுக்கு உறுதியளித்தனர்.

இலங்கை கடற்பரப்பில் தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் சிதைவுகளை அகற்றும் பணியை நிறைவு செய்ய வேண்டியதன் அவசியத்தை சட்ட மாஅதிபர் சஞ்சய் ராஜரத்தினம் வலியுறுத்தினார். இதற்கும் காப்புறுதி உரிமையாளர் தரப்பில் சாதகமான பதில் கிடைத்துள்ளது.

Express Pearl கப்பல் விபத்தினால் இலங்கை கடல் சூழலுக்கு ஏற்பட்ட சேதத்துக்கு இழப்பீடு வழங்குமாறு இலங்கை அரசாங்கம் விடுத்த கோரிக்கைக்கு கப்பலின் உரிமையாளரைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தரப்பினர் சாதகமான பதில்களை வழங்கியுள்ளமை விசேட அம்சமாகும்.எதிர்காலத்தில் இலங்கை அரசாங்கத்துடன் இது தொடர்பில் மேலும் கலந்துரையாட அவர்கள் உடன்பாடு தெரிவித்துள்ளனர்.

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் தீ விபத்தினால் ஏற்பட்ட சேதத்துக்கு இழப்பீடு கோரி இலங்கை அரசாங்கம், சிங்கப்பூரில் ஏற்கனவே ஆரம்பித்துள்ள சட்ட நடவடிக்கைகளுக்கு, இந்தப் பேச்சுக்கள் பாதிப்பை ஏற்படுத்தாதென்றும் அவர்கள் உறுதியளித்துள்ளனர்.

## நடத்துநர் இல்லா பஸ் சேவை ...

வினாக்கள் வேளையில் காவிந்த ஜயவர்த்தன எம்.பி எழுப்பிய கேள்வியொன்றுக்குப் பதிலளித்தபோதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

டிஜிட்டல் மயப்படுத்தலோடு ஒப்பிடுகையில் நமது நாடு வெட்கப்படக் கூடிய நிலையில் காணப்படுகிறது என்றும் அவர் தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அமைச்சர்,

இலங்கை போக்குவரத்து சபையில் பல்வேறு ஊழல், மோசடிகள் மற்றும் முறைகேடுகள் இடம்பெற்றுள்ளன.

அதனை தடுக்கும் வகையிலேயே மேற்படி நிறுவனத்தின் தலைவராக அரச சேவையில் மிகுந்த அனுபவம் கொண்ட பொறியியலாளர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

அவரது நிர்வாகத்தின் கீழ் டயர் ஒன்றை ஒன்பதாயிரம் ரூபாவுக்கு குறைந்த விலையில் கொள்வனவு செய்ய முடிந்துள்ளது.இதை, 8,000 கிலோமீற்றருக்கு உபயோகிக்க முடியும்.

நீண்ட காலமாக விநியோகஸ்தர்கள் இதற்கு எதிராகவே செயல்பட்டு வந்துள்ளனர். அந்த வகையில் பெறுகைக் கோரல் மற்றும் கொள்வனவு நடவடிக்கைகளை டிஜிட்டல் மயப்படுத்தும் வரை இத்தகைய முறைகேடுகளை நிறுத்துவது கஷ்டமாகும். ஒரே உபகரணம் 04 டிப்போக்கள் மூலம் ஒவ்வொரு விலைக்கு கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பில் எதிர்காலத்தில் முறையான வேலைத் திட்டம் முன்னெடுக்கப்படும்.

ஈ டிக்கட்டிங் தற்போது மிக அவசியமாகிறது. டிக்கெட் வழங்காத நடத்துநர்கள் பலர் தற்பொழுது வேலை நீக்கம் செய்யப்பட்டு வருகின்றனர். இத்தகைய நிலையில் நடத்துநரின்றி சேவையில் ஈடுபடுத்தப்பட்டு வரும் பஸ்களின் வருமானம் பாரிய அளவில் அதிகரித்துள்ளது என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## மத்திய வங்கி சட்டமூலத்துக்கு ...

அளிக்கப்பட்டன.இதன்பிரகாரம் 42 மேலதிக வாக்குகளால் சட்டமூலம் சபையில் நிறைவேற்றப்பட்டது.

இலங்கை மத்திய வங்கி சட்டமூலம் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதம் நேற்று (20) சபையில் முழுநாள் விவாதமாக முன்னெடுக்கப்பட்டது. விவாதத்தில் ஆளும் கட்சி மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பலரும் கருத்துக்களை முன்வைத்தனர். விவாதத்தின் இறுதியில் மக்கள் விடுதலை முன்னணி எம்பி விஜித ஹேரத் வாக்கெடுப்பைக் கோரினார்.

அதனையடுத்து சபையில் இலத்திரனியல் முறையிலான வாக்கெடுப்பு நடைபெற்றது. இச்சட்ட மூலம் 42 மேலதிக வாக்குகளால் சபையில் நிறைவேற்றப்பட்டது.

மேற்படி சட்டமூலத்திற்கு ஆதரவாக அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் பொதுஜன பெரமுன கட்சி உறுப்பினர்கள் வாக்களித்தனர். அத்துடன் ஐக்கிய மக்கள் சக்தி, தேசிய மக்கள் சக்தி மற்றும் அரசாங்கத்திலிருந்து விலகி சுயாதீனமாக செயற்படும் விமல் வீரவன்ச அணியைச் சேர்ந்த உறுப்பினர்கள், பொதுஜன பெரமுனவின் சுயாதீன அணியை சேர்ந்தவர்களும் எதிராக வாக்களித்தனர்.

அத்துடன் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி உள்ளிட்ட தமிழ்க் கட்சிகள் வாக்களிப்பில் கலந்துகொள்ளவில்லை.

அதேவேளை முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ எம். பி உள்ளிட்ட 134 பேர் வாக்களிப்பின் போது சபையில் சமூகமளித்திருக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

## பாடசாலை வரவு நாட்கள்...

பாடசாலைகளிலிருந்து உயர்தர பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கு 80 வீத வருகை அவசியமாகும். இதற்கு முன்னரும் இந்த வீதமே நடைமுறையில் இருந்தது.

எனினும், 2020, 2021 வருடங்களில் நாட்டில் நிலவிய கொவிட்19 தொற்று மற்றும் அதன் பின்னர் நாட்டில் ஏற்பட்ட நெருக்கடி நிலைகள் காரணமாக பாடசாலை மாணவர்களுக்கு முறையாக பாடசாலைக்கு செல்ல முடியாத நிலை ஏற்பட்டது.

இதனைக் கவனத்திற் கொண்டு மீண்டும் கடிதமொன்று மாகாண கல்விச் செயலாளர்கள், வலயக் பணிப்பாளர்கள் மற்றும் அதிபர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இதன்படி இம்முறை கல்வி பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைக்கு தோற்றவுள்ள பாடசாலை மாணவர்களின் விண்ணப்பங்கள் தொடர்பில், பாடசாலை மட்டத்தில் தீர்மானம் மேற்கொள்ளப்பட வேண்டுமென குறிப்பிட்டுள்ளோம்.

எண்பது வீத வருகை என்பது , மாணவர்கள் கல்வி பொதுத் தராதர உயர்தர பரீட்சைக்கு பாடசாலை விண்ணப்பதாரியாக தோற்றுவதற்குள்ள சந்தர்ப்பத்தை இல்லாமலாக்கலாம் என்பதையும் இதன் மூலம் அறிவுறுத்தியுள்ளோம்.

அதேவேளை, பாடசாலையிலிருந்து விலகிய மாணவர்கள் மீண்டும் அப்பாடசாலையில் உயர்தரப் பரீட்சைக்கு விண்ணப்பிக்கக் கோரினால், அதற்காக அம்மாணவர்களின் சேர்வு இலக்கத்திலேயே மீண்டும் அவர்களை பதிவுசெய்து பாடசாலை விண்ணப்பதாரியாக பரீட்சையில் தோற்ற இடமளிக்கப்பட வேண்டும் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## நம்பிக்கையில்லா பிரேரணையை...

பாராளுமன்றத்தில் நேற்று எதிர்க்கட்சித் தலைவர் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அது தொடர்பில் மேலும் தெரிவித்த அமைச்சர்,

அமைச்சர் ஒருவரிடம் கேள்வியெழுப்ப முன் அந்த கேள்விகளை உரிய அமைச்சருக்கு அறிவிக்கும் வழக்கம் பாராளுமன்றத்தில் உள்ளது.

தற்போது அந்த வழக்கத்தை ஒரு சிலர் பின்பற்றுகிறார்களா என்பதை அறிய முடியவில்லை.நான் சபையில் இல்லாத போது எதிர்க்கட்சித் தலைவர் உட்பட எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சுகாதாரத்துறை தொடர்பில் பல கேள்விகளை முன்வைத்துள்ளனர்.

எனினும், நான் சுகாதார அமைச்சர் என்ற ரீதியில் சகல கேள்விகளுக்கும் வெகுவிரைவில் முழுமையான அறிக்கையை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பேன்.

களுத்துறை போதனா வைத்தியசாலையில் சிசேரியன் சத்திரசிகிச்சைக்கு தேவையான எவிமாகென் தடுப்பூசி மருந்து இல்லாத காரணத்தால் சிசேரியன் சத்திரசிகிச்சைகள் நிறுத்தப்பட்டுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சபையில் குறிப்பிட்டுள்ளார்.

எவிமாகென் தடுப்பூசி தட்டுப்பாடு தொடர்பில் களுத்துறை போதனா வைத்தியசாலை பணிப்பாளர் மாகாண சுகாதார அமைச்சுக்கு அறிவித்துள்ளார்.

இரு வாரங்களுக்குப் பின்னரே அந்த மருந்துக்கான குறைபாடு நிலவும் என அவர் அதன் போது குறிப்பிட்டுள்ளார்.

அதற்கிணங்க நேற்றைய தினம் களுத்துறை வைத்தியசாலைக்கு 50 எவிமாகென் தடுப்பூசிகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. 30,000 தடுப்பூசிகள் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளன.

அந்த வகையில் ஒரு அறிவித்தலையும்,அதனை அடிப்படையாகக் கொண்டு எடுக்கப்பட்ட தீர்மானங்களையும் அறியாமல், எதிர்க்கட்சித் தலைவர் குற்றம் சுமத்துவது தவறானது.

இலவச சுகாதாரத்துறை சேவைக்கு எதிராக திட்டமிட்ட வகையில் அச்சுறுத்தல்கள் தோற்றுவிக்கப்படுகின்றன. மருந்து தட்டுப்பாட்டை அடிப்படையாகக் கொண்டு எனக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணையை கொண்டு வர எதிர்க்கட்சியினர் தீர்மானித்துள்ளனர்.

திருட்டு பொருட்கள் கொண்டு வந்து உயர்நீதிமன்றத்தால் வெளியேற்றப்பட்ட நபர் நான் அல்ல. நம்பிக்கையில்லா பிரேரணையை வெகுவிரைவில் கொண்டு வாருங்கள் அதை எதிர்கொள்ள தயாராக உள்ளேன் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## இலங்கை முதலீட்டுச் சபையில்...

திலும் அமுனுகம தெரிவித்தார். முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சு என்ற வகையில் பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுத்துள்ளதாகவும், அதேபோன்று பல்வேறு மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளதோடு, ஜனாதிபதியின் பணிப்புரையின் பிரகாரம் கொள்கை ரீதியிலான தீர்மானங்கள் பலவற்றை மேற்கொண்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று (20) நடைபெற்ற ஊடக மாநாட்டில் கருத்துத் தெரிவிக்கும்போதே முதலீட்டு ஊக்குவிப்பு பதில் அமைச்சர் திலும் அமுனுகம இதனைத் தெரிவித்தார்.

நமது நாட்டில் முதலீடு செய்யும்போது நீண்டகாலமாக பின்பற்றப்பட்டுவரும் சட்டக் கட்டமைப்பை திருத்த வேண்டியுள்ளது.

முதலீட்டாளர்கள் எளிதாக முதலீடு செய்வதற்கான பின்னணியை உருவாக்க வேண்டும். மேலும், இந்த நாட்டுக்கு வரும் முதலீட்டாளர்கள் தங்கள் முதலீடுகளின் உரிமையைப் பெறுவதில்லை. இதற்கு ஒரு தீர்வாக, அவர்களின் முதலீட்டு உரிமைகள் உறுதிப்படுத்தப்படும் வகையில் நமது சட்டக் கட்டமைப்பில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த முதலீட்டு ஊக்குவிப்பு பதில் அமைச்சர் திலும் அமுனுகம,

இந்த ஆண்டு இறுதிக்குள் அனைத்து வகையான முதலீட்டையும் உள்ளடக்கும் வகையில் புதிய விதிகள் அறிமுகப்படுத்தப்பட வேண்டும். இந்த சட்டங்களைக் கொண்டுவரும் போது, ஏனைய அரச நிறுவனங்களின் தற்போதைய சட்டங்கள் பாதிக்கப்படாத வகையில் அவர்களுடன் கலந்தாலோசித்து இந்த சட்டங்களை அறிமுகப்படுத்த எதிர்பார்க்கிறோம். முதலீடுகளுக்குத் தடைகளை ஏற்படுத்தும் வகையில் உள்ள தற்போதைய சட்டங்கள் குறித்து ஆராய்வதற்காக 07 உறுப்பினர்களைக் கொண்ட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார். இது முதலீட்டாளர்களுக்கு குறுகிய, இடைக்கால மற்றும் நீண்ட காலத் தீர்வுகளை வழங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தற்போது குத்தகைக் காலம் நிறைவடைந்துள்ள முதலீடுகள் தொடர்பில் அவற்றை தொடர்ந்தும் நம் நாட்டில் தக்கவைத்துக் கொள்வதற்காக, நம் நாட்டுக்கு குறித்த முதலீட்டாளர்கள் வழங்கிய பங்களிப்புக்கேற்ப அவர்களுக்கு புதிய குத்தகைக் காலத்திற்கு பல்வேறு சலுகைகளை வழங்கத் திட்டமிட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

நாட்டை மீண்டும் கட்டியெழுப்புவதற்கு நேரடி முதலீடுகளை பெற்றுக்கொள்ள வேண்டும் என்றும், முதலீட்டாளர்களைக் கவரக்கூடிய வகையில் கொள்கை ரீதியிலான பல்வேறு தீர்மானங்களை மேற்கொள்ள வேண்டியதன் அவசியத்தையும் அமைச்சர் இதன் போது தெளிவுபடுத்தினார்.

## யாழ். பல்கலைக்கழக பட்டமளிப்பு...

பட்டம் பெற்றிருந்தார். எனினும், இவர் உயிருடன் இல்லாததால், அவரது தாயாரிடம் பட்டம் கையளிக்கப்பட்டது.இப்பட்டமளிப்பு விழா,கடந்த புதன்கிழமை நடைபெற்றது. இப்பல்கலைக்கழகத்தின் 37 ஆவது பொதுப்பட்டமளிப்பு விழா இதுவாகும்.

## GSP+வரிச்சலுகை மேலும்...

கடந்த 2022 ஆம் ஆண்டில் இலங்கை ஐரோப்பிய ஒன்றியத்துக்கு 3.2 பில்லியன் யூரோ மதிப்பிலான ஏற்றுமதிகளை செய்துள்ளதாக இலங்கையிலுள்ள ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதி அலுவலகம் மேலும் தெரிவித்துள்ளது.

## ஜோன்ஸ்டனுக்கு எதிரான...

விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்படி, வழக்கு விசாரணையை நவம்பர் 24ஆம் திகதி நடத்துவதாக உயர்நீதிமன்ற நீதிபதி அறிவித்தார்.

ச.தொ.ச நிறுவன ஊழியர்களை உத்தியோகபூர்வ கடமைகளிலிருந்து நீக்கியதன் மூலம் அரசாங்கத்துக்கு நஷ்டம் ஏற்படுத்தியதாக முன்னாள் வர்த்தக அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, ச.தொ.ச நிறுவனத்தின் முன்னாள் தலைவர் எராஜ் பெர்னாண்டோ மற்றும் முன்னாள் பணிப்பாளர் மொஹமட் சாகிர் ஆகியோர் மீது குற்றம் சுமத்தி வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

## மதுரையிலிருந்துயாழுக்கு...

முன்னெடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள் ளதாகவும் அச்செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. மதுரை – கொழும்புக்கிடையேயான முதலாவது சர்வதேச விமான சேவை 2012 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டது. தற்போது மதுரையிலிருந்து நாளாந்தம் கொழும்புக்கு நேரடி விமான சேவையை, ஸ்ரீ லங்கன் எயார் லைன்ஸ் நிறுவனம் வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## பாதாள உலகக் குழுவின்...

நடவடிக்கையில், இச்சந்தேக நபர், விசேட அதிரடிப்படையினரை நோக்கி துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டுள்ளார். பதிலுக்கு விசேட அதிரடிப்படையினர் நடத்திய துப்பாக்கி பிரயோகத்தில் சந்தேக நபர் கொல்லப்பட்டுள்ளார்.

துப்பாக்கிப் பிரயோகத்தில் காயமடைந்த பாதாள உலகக் குழு உறுப்பினரான மனிக்குகே கசுன் லக்சித சில்வா என்ற 29 வயதானவ,ர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

சம்பவத்தில் விசேட அதிரடிப்படை வீரர் ஒருவர் காயமடைந்து சிகிச்சைக்காக கம்பஹா வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.

## கெஹெலியவுக்கு எதிராக...

இதைப் பொருட்படுத்தாது அவசர நிலை எனக் கருதி கொள்முதல் மற்றும் பதிவு செயல்முறைக்கு புறம்பாக மருந்துப்பொருட்கள் இறக்குமதி செய்யப்பட்டன. இதனால் நாட்டின் பல முக்கிய மருத்துவமனைகளில் உயிரிழப்புச் சம்பவங்கள் நிகழ்ந்தன.

இந்த உண்மைகளை வைத்து நம்பிக்கையில்லாப் பிரேரணை கைச்சாத்திடப்படுகிறது. மக்களது வாக்குகளின் மூலம் பாராளுமன்றத்துக்கு வந்த ஆளும் கட்சி உறுப்பினர்களுக்கு முதுகெலும்பு இருந்தால் இந்த நம்பிக்கையில்லா பிரேரணையில் கையொப்பமிட வேண்டுமென, இது தொடர்பில் கருத்து தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அதேபோல்,ஒரு நாட்டின் சுகாதாரம் என்பது மக்களின் வாழ்க்கை என்றும்,சுகாதார சீர்கேடு மக்களின் இயல்பு வாழ்க்கை சீர்குலைவதற்கு ஒரு காரணம் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவித்தார்.

## QR எரிபொருள் ஒதுக்கீடு...

சுத்திகரிப்புச் செயற்பாடுகள், சுத்திகரிப்பு நிலையத்தை மேம்படுத்துவதற்கான முன்மொழிவுகள், கியூ.ஆர் ஒதுக்கீடு உட்பட பல விடங்கள் இந்தக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டது. இதனையடுத்தே, உரிய மதிப்பீடுகளின் முடிவில், தற்போதுள்ள எரிபொருள் கியூ. ஆர் ஒதுக்கீடு முறைமையின் கீழ் ஆகஸ்ட் மாதத்தில் அதிகரிக்கப்படும் என்று தீர்மானிக்கப்பட்டது.





# 'மலையகம் 200' மாபெரும் வரலாற்றில் காமன் கூத்துக்கலையின் மேம்பாடும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்

## தேசமான்ய சந்திர வதனா ரட்ணராஜா குருக்கள்

சமூகச் செயற்பாட்டாளர் தேசமான்ய சந்திர வதனா ரட்ணராஜா குருக்கள். சமூகப் பணிகளின் மூலம் கண்டியில் மிகவும் காத்திரமான பங்களிப்பை ஆற்றி வருகின்ற ஒரு பெண்மணி. அவர் கணவர் ரட்ணராஜா குருக்கள் சமயக் கிரியைகளை உணர்வுடனும் சமயம் ஆன்மிகத் தொடர்பான புலமைத்துவ நெறியுடனும் நீண்டகாலமாக கடமையாற்றி வருபவர். அவருக்கு துணையாக இருந்து சமயக் காரியங்களில் ஈடுபாடு காட்டி வருவதைப் போல் மலையகத்தில் மலையக மக்களால் கோலகலமாகக் கொண்டாடும் காமன் கூத்துக்கலை தொடர்பில் மிகுந்த ஆர்வத்தைக் கொண்டவர்.இக் கூத்து தொடர்பில் தினகரன் பத்திரிகைக்கு அவர் வழங்கிய செவ்வி.





**மலையகம் 200 ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் தருணத்தில் மலையகக் கலைகளின் வளர்ச்சி பற்றியும் அவை தொடர்பான விளக்கங்களையும் அதன் வரலாறு அதன் பண்புகளை இக்கால கட்டத்தில் பேசுவதற்கு பொருத்தமானதாக அமையும். அந்த வகையில் மலையக மக்களால் பிரதானமாக கொண்டாடப்படும் காமன் கூத்துக் கலை பற்றி விரிவாகக் கூறமுடியுமா?**

மலையகம் 200 ஆவது நிறைவைக் கொண்டாடும் தருணத்தில் அருகி வரும் கலைகள் பற்றியும் கவனத்தில் கொள்ள வேண்டியுள்ளது. மேற்கத்தேய காலனித்துவத்திற்கு உற்பட்டிருந்த அப்போதைய இலங்கைத் நாட்டில் தொழில் நிமித்தம் அடிமைகளாய் அழைத்து வரப்பட்ட போது அவ் தென்னிந்திய கொத்தடிமைகளின் உணர்வுகள் வழியான கலாசாரமாக அவர்களோடு தொடர்ந்து வந்தவைகளுள் கூத்துக் கலைகளானது தனியானதொரு சிறப்பிடத்தை பெற்றுக் கொள்கின்றது. அவ்வாறு மலையகத்தை தனித்து அடையாளப்படுத்தும் கூத்துக் கலைகளில் காமன் கூத்து, அர்ச்சுனன் தபசு, பொன்னர் சங்கர் முதலான கூத்துக் கலைகள் மலையகத்தின் தோற்றம் முதல் இன்று வரையிலும் பிரதான இடம் வகித்து வருகின்றன. இவற்றுள் இன்றும் பிரதானமாக மலையக மக்களால் கோலாகலமாக நடாத்தப்பட்டு வருகின்ற காமன் திருவிழா என்று அழைக்கப்படும் காமன் கூத்துக் கலை இன்றியமையாத ஒன்றாக அமையும்.

**மலையகத்தை தனித்து அடையாளப்படுத்தும் இந்த கூத்துக்கலை எக்கால கட்டங்களில் விழாவாக கொண்டாடப்படுகிறது என்று கூறுவீர்களா?**

மலையகம் வாழ் மலை மாந்தருள் இந்து சமயத்தை பின்பற்றுவோரது மதம் சார் வரலாற்று இதிகாச கதையம்சத்தை அடிப்படையாக கொண்டு நடைபெற்றாலும் கூட மலையகத்தில் இன, மத வேறுபாடுகளை கடந்து மலையகத்தராய் ஒரு சமூகமாய் இணைந்து இக் காமன் கூத்து என்று அழைக்கப்படுகின்ற காமன் திருவிழாவானது முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இக் கூத்து கலையானது முதற் காலத்





தில் தொடர்ச்சியான வேலைப் பளுக்களாலும் அடிமைதனத்தாலும் விரத்தி அடைந்திருந்த சோர்வுற்றிருந்த மன நிலையை மாற்றியமைக்கும் விதமாகவும் இறைவழிபாட்டு தன்மையை அடையாளப்படுத்தும் விதமாகவுமே முன்னெடுக்கப்பட்டு வந்தாலும் இன்றைய நிலையில் மலையக குல தெய்வ வழிபாடுகள் என்ற பிரிவிற்குள் மலையகத்தின் பெரும்பாலான தோட்டங்களில் நடைபெற்று வருகின்றது. இக் காமன் திருவிழாவானது மலையகத்தில் மாசி மாதத்தில் வளர்பிறையில் குறிப்பாக பெப்ரவரி மாதம் பதினாறாம் பதினேழாம் திகதிகளில் பந்தற்கால் நாட்டல் இடம் பெற்று விழா தொடங்கி விழாவானது மாசி மாத இறுதியில் நிறைவுக்கு வருகின்றது.

**இக்கலை இந்து சமயத்தோடு ஒட்டிய ஒன்றாக விளங்குகின்றது. அது குறித்து**

மலையகத்தில் வருடத்தின் முதற் பகுதியில் அரங்கேறும் இக் காமன் கூத்துக்கும் இந்து மதத்திற்கும் உள்ள தொடர்பை காமன் திருவிழாவின் கதை களத்தை கொண்டு மிக தெளிவாக அறிந்து கொள்ளக் கூடியதாக அமைகின்றது. இவ்வாறு இந்து மத சிறப்பை விபரிக்கும் காமன் கூத்தின் இதிகாச கதை களத்தை அறிந்து கொள்வோம். இந்து மதத்தின் முழுமுதற் கடவுளான சிவ பெருமானின் மகளான ரதி தேவிக்கும் தேவர் குல இளவரசனான ஆண் அழகர் மன்மதனுக்கும் காதல் ஏற்பட பின் அவர்களுக்கு மூன்றுலக தேவர்களை சாட்சி கொண்டு திருமணமானது. அரங்கேறி வாழ்க்கை இன்பியலாய் தொடர்ந்திட கால ஓட்டத்தில் மகிழ்ச்சியாக கடந்த வாழ்க்கையில் உமாதேவியரின் தந்தை சிவனின் சக்தியை வலுவிழக்க செய்யும் விதமாக தொடர்ந்த யாகத்தை அழிக்க சிவன் தவமிருந்து வீரபுத்திரனை தோற்றுவித்து தக்கன் தவம் அழிக்க அனுப்புகிறார். மறுபுறத்தில் உமா தேவியார் தன் தந்தையின் யாக பூஜைக்கு செல்ல அங்கு வீரப் புத்திரனால் தலைத் துண்டிக்கப்பட்டிருந்த தக்கனின் உடலில் முடிவின்றி சொறியும் உதிரத்தை கண்டு சாந்த சொரூபியான தேவியர் அகோர காளி ரூபம் கொண்டு உதிரத்தை உரிந்து குடித்து தன் தந்தை உயிர் மாய்க்க காரணமாகின்றாள். மறுபுறத்தில் ஓயாத கடுந்தவத்தில் இருக்கும் சிவனின் தவம் நிறைவேறினால் மூவுலகம் தாங்காது என அறிந்து தேவர் சபையினரால் சிவனின் தவம் அழிக்க தேவர் சபை அழைக்கப்படுகின்றார். மன்மதன் தேவர் சபையினரின் தூண்டுதலால் சிவனின் தவம் அழிக்க சென்ற மன்மதன் சிவனை நோக்கி மலரம்பு தொடுத்து சிவனின் தவம் கலைக்கிறார். தன் தவம் கலைந்ததால் பெரும் கோபம் கொண்ட சிவன் மன்மதனை நோக்கி தன் நெற்றிக் கண் தீ கொண்டு உயிர் பறிக்கிறார். இவ்வாறு மன்மதன் உயிர் துறந்த சேதி அறிந்து பெரும் துயர் கொண்டு தன் தந்தையான சிவனிடம் நீங்கள் ஏற்படுத்தி கொடுத்த வாழ்க்கையை நீங்களே பறித்து கொண்டீரே என ரதி தேவியார் புலம்பி சண்டையிட, சிவனால் பறிக்கப்பட்ட உயிர் மீண்டும் உயிர் பெறாது என்பதை உணர்த்தி ரதி தேவியின் கண்களுக்கு மட்டும் தெரியுமாறு மன்மதனை ரூபியாக உயிர்ப்பிக்கிறார். இவ் இதிகாச கதையே கூத்து களத்தில் ரசனைக்கு ஏற்றாற் போல மாற்றி அமையப் பெற்று அறங்கேற்றம் அடைகின்றது.

இவ்வாறு காமன் திருவிழாவின் கனிக்கால் நாட்ட மூன்றாம் நாள் முதல் தொடங்கி ரதி மதனது காதல் வெளிப்பாடாக மாலை நேரங்களில் தோட்டத்தில் வீடுகளுக்கும் காமன் திருவிழா இடம்பெறாத சக ஊர்களுக்கும் சென்று நடனமாடி பாடல் பாடி இன்பியல் வாழ்க்கை பற்றிய விபரிப்பை வழங்குகின்றனர். இவ்வாறு நாட்கள் செல்ல காமன் திருவிழாவின் இறுதி நாளில் சிவன், உமயவள்,முருகன், விநாயகர்,விஷ்ணு,சரஸ்வதி தேவி, லக்ஷ்மி தேவி,பிரம்மா மற்றும் தேவலோக தேவர்கள் முன்னிலையில் ரதி,மதனது திருமணங்கள் நடந்தேருகின்றது. பின்னர் இன்பமாய் பாடல் பாடி காதல் வாழ்க்கையை தொடரும் விதமாக கூத்து களத்தில் நடனமாடி மகிழ்ந்து ரதி,மதன் உரக்கம் கொள்ள ரதி தேவியாரின் கனவில் தேவலோகத்தாரின் வேண்டுதலால் மன்மதன் சிவன் தவமழிக்க கோபத்தில் மன்மதனை சிவன் நெற்றிக் கண்ணால் எரிக்கும் காட்சி தென்பட திடுக்கிட்டு எழுந்து மதனிடம் கனவை உரைக்க பின் மறு நாள் மதன் வேட்டைக்கு சென்ற தருவாயில் ரதி தேவியை சந்தித்த குறத்தி பெண் உன் தாலி பாக்கியம் பறிபோகும் நேரம் தொலைவில் இல்லை உன் கணவன் உயிர் துறக்க போகிறார் என எடுத்துரைத்து செல்ல சலனமுற்று இருந்த ரதி தேவி மதன் தரப்புக்கு தேவலோகத்திலிருந்து மன்மதனை தேவர் சபை அழைத்து தூது வந்து சேர்கின்றது. இதில் தொடங்கி ரதி தேவியார் மன்மதனை போக வேண்டாம் என தடுக்கும் படலம் ஆரம்பமாகிறது.

தொடர்ந்து ரதி தேவியார் தடுப்பதும் மன்மதன் போக விடை கோருவதாகவும் கதை களம் அமைகின்றது. இந்த தருணங்களில் மலையகத்தின் குல தெய்வங்களான உமா தேவியரது மறு ரூபங்களான மாரித் தாய் ,காளித் தாய் அகோர காளி, மோகினி தேவி, அதே போல சுடலைமாடன்,முனீஸ்வரர், கருசாமி, அக்கினி புத்திரன், நாரதர் முதலானவர்கள் மதன் ரதியை சந்தித்து மன்மதனை தேவர் சபை செல்ல வேண்டாம் என தடுப்பதாகவும் கதை களம் தொடர்கின்றது. இக்காட்சிகளின் ஒரு புறத்தில் தக்கன் தவமழிக்கும் சம்பவமும் அரங்கேற்றம் பெற்று முடிகின்றது. இவ்வாறு செல்லும் கதை களத்தில் ரதி தேவி மதனின் செங்கரும்பு வில் எடுத்து மதனை தடுக்க தேவர் சபையிலிருந்து மன்மதனை அழைத்து மறு தூது வந்து கிடைக்கின்றது. இவ் அழைப்பு கண்டதும் மதன் ரதி தேவியிடமிருந்து வில்லை பறித்துக் கொண்டு தென்றல் ரதத்தில் தேவர் சபை செல்லும் காட்சி இடம் பெறுகின்றது. இதனை அடுத்து மதன் தேவர் சபையினரின் வேண்டுதலால் சிவனின் தவமழிக்கும் காட்சியும் சிவன் மதனை அழிக்கும் காட்சியும் அரங்கேற்றம் பெறுகின்றது. இறுதியாக சிவனை அழிக்கும் காட்சியில் சிவனின் நெற்றி தீ காமன் திருவிழாவிற்காக நாட்ட கன்னிக்கால் பந்தலில் படுவதாகவும் அதில் இருக்கும் மதனின் கரும்புவில்லால் மன்மதன் உயிர் எரிவதாகவும் மலையகத்தாரால் நம்பிக்கை கொள்ளப்படுகின்றது. இதனை காணும் ரதியின் துயர் நிலையோடு அன்றைய காமன் திருவிழா நிறைவுக்கு வருகின்றது. அதனை அடுத்த மூன்றாம் நாள் ரதி தேவி தன் தந்தையான சிவனிடம் சண்டையிடுவதும் பின் மதனை ரதி தேவிக்கு மட்டும் தெரியும் உருவமாக உயிர்ப்பிக்கும் நிகழ்வு இடம் பெற்று காமன் பண்டிகை இனிதாக நிறைவுற்று முடிகின்றது. இக் காமன் பண்டிகையானது மலையக இந்துக்களின் இறை நம்பிக்கை நிறைந்த விழாவாக அன்று முதல் இன்று வரையிலும் கொண்டாடப்பட்டு வருகின்றது.





**இவ்விழா மேடை அமைப்பு பற்றிக் கூறுவீர்களா?**

இவ் விழாவின் மேடை அமைப்பானது ஏனைய கூத்துக் களங்களை விட சற்று வேறுபட்டதாக அமைகின்றது. அவ்வாறு வட்ட மைதானம் போன்ற களத்தில் நடுப் பகுதியில் கன்னிக்கால் நாட்டப்பட்டு பந்தலிட்டு அதை சுற்றி ஆடி நடிக்குமாறு களம் அமைப்பு அமையப் பெற்றிருக்கும் அதே வேலை களத்தை சுற்றி மக்கள் அமர்ந்து பார்த்து ரசிக்கும் வகையிலும், மக்கள் கூட்டங்களின் ஆங்காங்கே சிவன் பார்வதியின் கைலாச மலை அமைப்பும் ஒரு புறத்தில் தேவர் சபை அமைப்பும் அமைக்கப்பட்டிருக்கும்.

இக் காமன் பண்டிகையில் பயன்படுத்தப்படும் இசைக் கருவிகளில் பிரதானமானதாக தப்பிசை அமையப் பெறுகின்ற அதே வேலை மலையக மூத்த காமன் கூத்துக் கலைஞர்களின் வழி வந்த சொல் இசை பாடல்களுக்கு ஏற்றாற் போல தப்பிசைக்கும் தன்மை அமையப் பெருகின்றன.

இவ்வாறு ரதி,மதன்,கதை இடையில் வந்து செல்லும் குல தெய்வங்கள் முதலான காட்சிகளில் தன் கூற்று பாடல்களை பாட கூடிய மூத்த கலைஞர்களின் வழியில் தொடங்கி இன்று இளைய சமூகத்தினர் வரைக்கும் பெரும் தேர்ச்சி கொண்டவர்களாக அமைகின்றனர். அதே போல பல வகை தெரிவுகளில் தப்பிசைக்க கூடிய தப்பிசை கலைஞர்களுள் இன்றைய இளைய சமூகத்தினர் தப்பிசைக்க பஞ்சமற்ற எண்ணிக்கையிலேயே காணப்படுகின்றனர்.

**உடை அலங்காரம்**

இத்தனை சிறப்பு பெற்ற காமன் பண்டிகையில் பயன்படுத்தப்படும் உடை மற்றும் நகை அலங்காரங்கள் முதலானவை ஏனைய கூத்து களங்களை விட சற்று வித்தியாசமானதாக அமையும். அதே தருணம் இங்கு பயன்படுத்தப்படும் உடை அமைப்புக்கள் மலையகத்தவர்களின் கைவண்ணங்களிலேயே அமையப் பெறுகின்ற அதே தருணம் தேவர் சபையினரது உடை,நகை அணிகலன்கள் முதலானவை தத்ரூபமாக கற்பனை திறனுக்கு ஏற்றாற் போல் அராசாம்சத்தை கொண்டதாக அமையும் வகையில் மூங்கில் மற்றும் முருங்கை முதலான மர வகைகளைக் கொண்டு மலையகத்தவர்களாலேயே உருவாக்கப்பட்டு வருகின்றது. மேலும் கதைக் களத்தில் இடையில் வரும் குல தெய்வங்களானது தீப் பந்தங்களை கொண்டதான ஆங்கார ரூபமாக அமையப் பெருகின்றமை இக் கூத்தின் தனித் தன்மையாகும். அவற்றுள் அகோர காளி,வீர புத்திரன்,தூதன் அக்கினி பத்திரன் முதலான குல தெய்வங்கள் பதினாறு தீப்பந்த அமைப்புக்கள், முப்பத்து ரெண்டு தீப்பந்த அமைப்புக்கள், முதலானவற்றில் தொடங்கி நூற்றியெட்டு தீப்பந்த கட்டமைப்புக்கள் வரையிலும் கொண்டு தெய்வங்கள் காட்சியளிக்கும் வகையில் அரங்கேற்றம் பெறுகின்றது.

**இக்கலையின் பெறுமானம் பல்கலைக்கழக மட்டங்களிலும் கற்கை பாடமாகவும் நாடக அரங்கிலும் இடம்பெற்று வருகின்றது. அது குறித்து**

இவ்வாறு மலையகத்தின் தோற்ற காலம் முதல் இன்று வரையிலும் சற்றும் தளராது நடைபெற்று வருகின்ற காமன் கூத்து கலையானது இன்றைக்கு இருநூறு ஆண்டுகளை சந்தித்து சிறப்பாக நடைபெற்று வருகின்றது. இவ்வாறு தேர்ச்சி பெற்று பயணிக்கும் காமன் கூத்துக் கலை இன்றைய கதை களத்தில் சற்று மருவி வருவதற்கான தன்மை வெளிப்பட்டாலும் கூட மலையக மூத்த கலைஞர்களிடம் இருந்து கதை தொகுப்புக்களை மலையக இளைஞர்கள் களத்திலிருந்தே கற்றுத் தேர்ந்து வருகின்ற நிலையானது குறிப்பிடத்தக்கதாகும். இதற்கு மேலாக இன்றைய உயர்கல்வி நிலையங்களிலும் பல்கலைக்கழகங்களிலும் காமன் கூத்து கலை பற்றிய தெளிவை பெற்று பாதுகாக்கும் வகையில் காமன் கூத்து பற்றிய கற்கை மற்றும் ஆய்வானது நாடகமும் அரங்கியலும் என்ற பாடப் பகுதி ஊடாக இடம்பெற்று வருகின்றமையானது காமன் கூத்து கலை மேலும் வலுப் பெற உதவிப் புரிகின்றது.

**அப்படியாயின் இக் கூத்துக்கலை அரங்கேற்றத்தற்கு எவ்வளவு மூலதனத்தை கொண்டிருத்தல் வேண்டும்.?**

@காமன் திருவிழாவிற்கு இன்றைய நிலையில் சுமார் இரண்டு இலட்சம் ரூபாய் வரை செலவாகும். அதே வேலை தோட்ட மக்களால் காமன் பண்டிகையை கொண்டாடும் விதமாக வழங்கப்படும் அன்பளிப்புக்கள் ஊடாக விழா நிறைவில் அன்னதான நிகழ்வும் நடைபெறுகின்றமையும் குறிப்பிடத்தக்கது. இப் பண்டிகைக்கு செலவாகும் பணமானது தோட்ட மக்களிடமிருந்து கிடைக்கும் அன்பளிப்பு மற்றும் காணிக்கைகள் ஊடாகவே இடம் பெறுகின்றதாகும். இவ்வாறு பல தடைகளை கடந்தும் மலையகத்தின் தனித்துவமாய் மலையக மக்களின் கலாசாரத்தின் தனித் தன்மையில் அரங்கேறும் இக் காமன் கூத்து பற்றிய அறிமுகத்தை மலை மாந்தரின் வாழ்வியலோடு பயணிக்கும் தன்மையை அறிந்து கொண்ட நாமும் மலையகத்தில் அரங்கேறும் நேரடி கூத்துக் களத்தில் கண்டு மகிழ்ந்திடுவோம்.

நேர்காணல்: இக்பால் அலி

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
புதன்கிழமை 2023.07.19
உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk
NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 5180
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 23,571,200.00
ஆங்கில எழுத்து M
வெற்றி இலக்கங்கள் 6 9 1 7 1 2

ராசி சுப பலன் Handahana
சீட்டிழுப்பு இலக்கம் 489
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 3,572,620.60
வெற்றி இலக்கினம் மிதுனம்
வெற்றி இலக்கங்கள் 25 35 52 53
விசேட இலக்கினம் மிதுனம்

லக்கி 7 Lucky 7
சீட்டிழுப்பு இலக்கம் 0006
வெற்றி இலக்கினம் கன்னி
வெற்றி இலக்கங்கள் 1 9 1 1 7 6
L7 இலக்கம் 2 0
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் 1210
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 100,636,130.40
ஆங்கில எழுத்து D
வெற்றி இலக்கங்கள் 02 10 58 79
விசேட எழுத்து D

கொவிசெத Govisetha
சீட்டிழுப்பு இலக்கம் 3422
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 69,664,564.00
ஆங்கில எழுத்து Y
வெற்றி இலக்கங்கள் 04 11 44 80

Mega Power
சீட்டிழுப்பு இலக்கம் 1528
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 401,512,616.00
ஆங்கில எழுத்து E
சுப்பர் இலக்கம் 26
வெற்றி இலக்கங்கள் 18 28 33 49
ரூ. 10,000,000.00
ரூ. 10,000,000.00

# ஆலமுல் இஸ்லாம்

மர்லின் மரிக்கார் aalamulislam.tkn@lakehouse.lk

# ஆஷூரா நோன்பின் மகத்துவம்

கலாநிதி, அல்ஹாபிழ் **எம்.ஐ.எம். சித்தீக்...** (அல்ஈன்ஆமி)
B.A.Hons,(Al Azhar university, Egypt) M.A.& PhD (International Islamic university, Malaysia)

இஸ்லாமிய புத்தாண்டின் 1445 வருடம் மலர்ந்து அதன் முதல் மாதமான முஹர்ரம் மாதத்தில் நாம் வீற்றிருக்கின்றோம். முஹர்ரம் அல்லாஹ்வின் மாதம் (ஷஹ்ருல்லாஹி அல் முஹர்ரம்) என்று அழைக்கப்படுகின்றது. இவ்வாறான சிறப்பையும் மேன்மையையும் தாங்கியுள்ள புனித மாதமே முஹர்ரம் ஆகும். காலமும் நேரமும் அல்லாஹ்வின் அற்புதமான படைப்பு. அல்லாஹ்வால் படைக்கப்பட்ட நாட்கள் எல்லாமே சிறப்புக்குரியது. அவைகளில் இகழ்ச்சிக்குரிய நாட்கள் என்று எதுவுமில்லை. அல்லாஹ் இதனை பின்வருமாறு இயம்புகிறான்.

“நிச்சயமாக அல்லாஹ்விடத்தில் மாதங்களின் எண்ணிக்கை ஒரு ஆண்டுக்கு 12 தான். இவ்வாறு வானங்களையும் பூமியையும் படைத்த நாளில் அல்லாஹ்வின் வேதத்தில் பதியப்பட்டுள்ளது. அவற்றில் நான்கு மாதங்கள் சிறப்புற்றவை. இதுதான் நேரான மார்க்கம் ஆகும். ஆகவே இவற்றில் நீங்கள் உங்களுக்கு தீங்கிழைத்துக் கொள்ள வேண்டாம்.

(அல்குர்ஆன் 9:36)

என்றாலும் மாதங்களிலும், நாட்களிலும், நேரங்களிலும் சிலதை விட சிலதை அல்லாஹ் மேம்படுத்தி உயர்வாக்கி வைத்துள்ளான் என்பதுதான் ஒரு உண்மையான இஸ்லாமியனது நம்பிக்கை. காலத்தை திட்டுவதையோ அதை இகழ்வதையோ இஸ்லாம் ஒரு போதும் அனுமதிக்கவில்லை.

ஒரு தடவை நபி (ஸல்) அவர்கள், “நீங்கள் காலத்தை திட்ட வேண்டாம். நிச்சயமாக அல்லாஹ் தான் காலமாக இருக்கின்றான். அவனே இரவையும் பகலையும் மாறி மாறி வர செய்கிறான்.” (ஆதாரம்: முஸ்லிம்)

மேற்குறிப்பிடப்பட்டுள்ள குர்ஆன் வசனத்தில் கூறப்பட்டுள்ள சங்கைமிகு நான்கு மாதங்களாக, “துல்கஃதா, துல்ஹிஜ்ஜா, முஹர்ரம், ரஜப்” ஆகியன விளங்குகின்றன.

(ஆதாரம்: புஹாரி)

அல்லாஹ்விடத்தில் சங்கை செய்யப்பட்ட இந்நான்கு மாதங்களிலும் முதன்மை சிறப்புக்குரிய மாதமாக முஹர்ரம் மாதம் கணிக்கப்படுகின்றது. அபூதர் (ரழி) அவர்கள், “நான் நபி (ஸல்) அவர்களிடம் இரவின் எந்தப் பகுதி சிறந்தது? இன்னும் மாதங்களில் எது சிறந்தது? என கேட்டேன். அதற்கு நபி (ஸல்) அவர்கள், இரவில் சிறந்தது அதன் நடுப்பகுதி. மாதங்களில் மிகச்சிறந்தது முஹர்ரம் என்று அழைக்கப்படுகின்ற அல்லாஹ்வுடைய மாதம்' என்று கூறினார்கள்.

(ஆதாரம்: நசாயி)

இவ்வாறு முஹர்ரம் மாதம் தனிச்சிறப்பை பெறுவதற்கு பல்வேறு காரணிகளை நாம் இங்கே அடையாளப்படுத்தலாம். அவைகளில் முஹர்ரம் மாதம் இஸ்லாம் தோன்றுவதற்கு பல்லாயிரம் வருடங்களுக்கு முன்பிருந்தே முன்னைய சமூகத்தவர்களால் சங்கைப் படுத்தப்பட்டு வந்துள்ளது. குறிப்பாக, முஹர்ரம் பத்தாவது நாள் “ஆசூரா” தினம் என அழைக்கப்படும். அந்நாள் யூதர்களால் நோன்பு நோற்று கௌரவிக்கப்பட்டு வந்ததை நபி மொழிகள் உறுதி செய்திருக்கின்றன.

இப்னு அப்பாஸ் (ரழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: “அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் மதீனா வந்தபோது யூதர்கள் முஹர்ரம் பத்தாவது நாளில் ஆஷூரா நோன்பு நோற்றிருப்பதை கண்டார்கள். நீங்கள் நோன்பு நோற்றிருக்கும் இது என்ன நாள் என்று கேட்டார்கள். அதற்கு யூதர்கள் இது மகத்தான நாள். இந்நாளில் தான் மூஸாவையும் அவருடைய சமுதாயத்தாரையும் அல்லாஹ் காப்பாற்றினான். பிர்அவுனையும் அவனுடைய சமுதாயத்தாரையும் செங்கடலில் மூழ்கடித்தான். எனவே மூஸா (அலை) அவர்கள் இறைவனுக்கு நன்றி தெரிவிக்கும் முகமாக இந்நாளில் நோன்பு நோற்றார்கள். ஆகவே நாங்களும் இந்நாளில் நோன்பு நோற்கிறோம் என்று கூறினார். அப்போது நபி (ஸல்) அவர்கள், உங்களை விட நாங்களே மூஸா (அலை) அவர்களுக்கு மிகவும் உரியவர்களும் நெருக்கமானவர்களுமாவோம் என்று கூறினார்கள். பின்னர் நபி (ஸல்) அவர்கள் அந்நாளில் தாமும் நோன்பு நோற்று பிறருக்கும் நோன்பு நோற்க்குமாறு கட்டளையிட்டார்கள்.”

(ஆதாரம்: புஹாரி)

இவ்வாறு யூதர்கள் மட்டுமன்றி, இஸ்லாம் தோன்றுவதற்கு முன்பிருந்து குரைஷியர் முஹர்ரம் பத்தாவது நாளில் நோன்பு நோற்று அந்நாளை கண்ணியப்படுத்தியுள்ளதாக நபி மொழிகளில் காணப்படுகின்றன. ஆயிஷா (ரழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள் “ரமழான் நோன்பு கடமையாக்கப்படுவதற்கு முன்னால் மக்கள் முஹர்ரம் பத்தாம் நாளில் நோன்பு நோற்று வந்தார்கள். அதுதான் கஃபாவுக்கு புதிய திரை போடப்படும் நாளாக இருந்தது. அல்லாஹ் ரமழானுடைய நோன்பை கடமையாக்கிய போது ஆஷூரா உடைய நோன்பு நோற்க விரும்புகிறவர் அதை நோற்றுக் கொள்ளட்டும், அதை விட்டு விட விரும்புகிறவர் விட்டு விடட்டும் என்று இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.” (ஆதாரம்: புஹாரி)

மேற்குறிப்பிடப்பட்ட நபி மொழிகளில் இருந்து முஹர்ரம் மாதமும் அதன் பத்தாவது நாளும் வரலாறு நெடுகிலும் சிறப்பிக்கப்பட்டிருப்பதை அவதானிக்க முடிகிறது.

இஸ்லாமும் முஹர்ரம் மாதத்திற்கான உன்னத கௌரவத்தை வழங்கியுள்ளது. குறிப்பாக, முஹர்ரம் மாதத்தின் பத்தாவது நாள் (ஆசூரா) நோன்பு நோற்பது கொண்டு கண்ணியப்படுத்தியுள்ளது. நபி (ஸல்) அவர்களும் நபித்தோழர்களும் நுபுவத்திற்கு முற்பட்ட காலம் தொடக்கம் மதீனாவுக்கு ஹிஜ்ரத் போன பின்பும் ஆசூரா நோன்பை நோற்றார்கள். இத்தினத்தில் எல்லோரும் நோன்பு நோற்கவேண்டும் என்பதில் நபி (ஸல்) அவர்கள் அதீத அக்கறை கொண்டிருந்தார்கள்.

பின்த் முஅவ்வித் (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள், “நபி (ஸல்) அவர்கள் ஆஷூரா தினத்தில் காலையில் அன்சாரிகளின் கிராமங்களுக்கு ஆளனுப்பி யார் நோன்பு நோற்காதவராக காலை பொழுதை அடைந்து விட்டாரோ அவர் இன்றைய தினத்தில் எஞ்சிய நேரத்தை நோன்பாக நிறைவு செய்யட்டும். யார் நோன்பாளியாக காலை பொழுதை அடைந்தாரோ அவர் நோன் பை தொடரட்டும் என்று அறிவிக்க செய்தார்கள். நாங்கள் அதன்பின்னர் அந்நாளில் நோன்பு நோற்கலானோம். எங்கள் சிறுவர்களையும் நோன்பு நோற்க வைப்போம். கம்பளியால் ஆன விளையாட்டுப் பொருட்களை அவர்களுக்காக நாங்கள் செய்வோம். அவர்கள் பசியால் உணவு கேட்டு அழும்போது நோன்பு முடியும் நேரம் வரை அவர்கள் பசியை மறந்து இருப்பதற்காக அவர்களிடம் அந்த விளையாட்டுப் பொருட்களை கொடுப்போம்.

(ஆதாரம்: புஹாரி)

மகத்துவம் நிறைந்த ஆஷூரா நோன்பு பற்றி நபி (ஸல்) அவர்களிடம் கேட்கப்பட்ட போது நபி (ஸல்) அவர்கள் அந்நாளில் நோன்பு வைப்பது ஒரு வருடத்தின் பாவங்களை அழித்துவிடுகின்றது என்று கூறினார்கள். (ஆதாரம்: முஸ்லிம்)

எனவே ஆஷுரா தினத்தின் சிறப்புக்களையும், அதன் கீர்த்தியையும் உணர்ந்து அந்நாளில் நோன்பு நோற்று உயர் நன்மைகளை பெற வல்ல அல்லாஹ் அருள் புரியட்டும்.

# இரத்த உறவுகளைப் பேணுவோம்!

உறவுகளைத் துண்டித்து வாழ்பவர்களை அல்லாஹ் பின்வருமாறு எச்சரித்திருக்கிறான். 'அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள், மேலும் இரத்தபந்த உறவுகளைச் சீர்குலைப்பதிலிருந்து நீங்கள் விலகி வாழுங்கள்' (அல் குர்ஆன் 4:1)

அதேநேரம் நபி (ஸல்) அவர்கள்,'யார் அல்லாஹ்வையும் மறுமை நாளையும் நம்புகிறாரோ அவர் தன் இரத்த பந்தங்களுடன் இணைந்து வாழட்டும்' (ஆதாரம் புஹாரி முஸ்லிம்) என்றும் 'எவர் ஒருவர் தனக்கு நீண்ட ஆயுளும் வாழ்வாதாரமும் வேண்டுமென விரும்புகிறாரோ அவர் உறவைத் துண்டிக்காமல் வாழட்டும்' (திர்மிதி) என்றும் 'சொந்தக்காரர்களிடம் உறவை முறித்து அவர்களுக்கு தீங்கு விளைவிப்பவன் ஒரு போதும் சுவனம் புக மாட்டான்' (திர்மிதி) என்றும் குறிப்பிட்டுள்ளார்கள்.

மேலும் அல்லாஹ் தன் அருள் மறையில், 'இன்னும் உங்களில் (அல்லாஹ்வின்) கொடை அருளப்பட்டவர்களும் தக்க வசதியுடையவர்களும், உறவினர்களுக்கும், ஏழைகளுக்கும் (தம்மிடங்களை விட்டு) அல்லாஹ்வின் பாதையில் ஹிஜ்ரத் செய்தவர்களுக்கும் (எதுவும்) கொடுக்க முடியாது என்று சத்தியம் செய்ய வேண்டாம் (அவர்கள் தவறு செய்திருப்பின்) அதை மன்னித்து (அதைப்) பொருட்படுத்தாமல் இருக்கவும். அல்லாஹ் உங்களை மன்னிக்க வேண்டும் என்று நீங்கள் விரும்ப மாட்டீர்களா? மேலும் அல்லாஹ் (பிழை பொறுப்பவன்) மிக மன்னிப்பவன், அன்பு மிக்கவன்' (24:22) என்று குறிப்பிட்டுள்ளான்.

ஒரு தடவை மனிதரொருவர் நபி (ஸல்) அவர்களிடம், 'அல்லாஹ்வின் தூதரே! எனக்கு சில உறவினர்கள் இருக்கிறார்கள். அவர்களுடைய உரிமைகளை நான் நிறைவேற்றுகிறேன். அவர்கள் என் உரிமைகளை நிறைவேற்றுவதில்லை. நான் அவர்களுடன் நல்ல விதமாக நடந்து கொள்கிறேன். அவர்கள் என்னுடன் மோசமாக நடந்து கொள்கின்றனர். நான் அவர்களுடன் பொறுமையோடும் சகிப்புத் தன்மையோடும் நடந்து கொள்கிறேன். அவர்கள் என்னுடன் அறிவீனமாக நடந்து கொள்கின்றனர்' என்று கூற நபி (ஸல்) அவர்கள், 'நீர் சொல்வதைப் போன்றே அவர்களுடன் நடந்து கொண்டிருந்தால், அது அவரின் முகத்தில் (தனக்குத் தானே) கரி (நெருப்புக் கணல்) பூசுவது போன்றதாகும். அல்லாஹ் அவர்களுக்கு எதிராக எப்போதும் உமக்கு உதவிய வண்ணம் இருப்பான். நீ இதே பண்பில் நிலைத்திருக்கும் வரை'

(ஆதாரம்: முஸ்லிம்)

ஆகவே, தவறு செய்த உறவினர்களை மன்னித்து அவர்களுடன் நல்ல முறையில் நடந்து கொள்வது இன்றியமையாததாகும்.

தொகுப்பு: **அபூ ஸப்வான் உமைர்...**

# இஸ்லாத்தின் பார்வையில் மனிதன்

மனிதன் என்பவன் சாதாரணமானவன். அவனது வாழ்வும் சர்வ சாதாரணமானது. பிறந்தோம், வாழ்ந்தோம், மடிந்தோம் அவ்வளவு தான் என்ற மனப்பான்மை பரவலாகக் காணப்படுகிறது. இது முற்றிலும் தவறானதும் பிழையானதுமான பார்வை. மனிதன் வீணாகப் படைக்கப்படவில்லை. அவனது வாழ்வுக்கு நோக்கமும், இலக்கும் பொறுப்பும் உள்ளது. அவை அவன் நிறைவேற்ற வேண்டிய பொறுப்பையும் கடமையையும் ஆகும்.

இஸ்லாமிய கண்ணோட்டத்தில் நோக்கும் போது மனிதனும் மனித வாழ்வும் எவ்வளவு பெறுமதியானதும் முக்கியமானதும் என்ற உண்மையைப் புரிந்து கொள்ளலாம். உலகம் உள்ளிட்ட முழு பிரபஞ்சத்தையும் மனிதன் உள்ளிட்ட அனைத்து உயிரினங்களையும் படைத்தவன் சர்வ வல்லமை படைத்த அல்லாஹ்வேயாவான். 'அவனே வானங்களையும் பூமியையும் அவற்றுக்கு மத்தியிலுள்ளவற்றையும் படைத்து வளர்ப்பவன்'. (37:05) என்று அல் குர்ஆன் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கின்றது. அதனால் இந்த படைப்புகளுக்கும் படைப்பாற்றலுக்கும் அல்லாஹ்வே உரிமையாளன் ஆவான். அவனைத் தவிர வேறு எவருக்கும் அவற்றில் உரிமை கிடையாது.

அதேநேரம் அவன் அனைத்தையும் படைத்ததோடு நின்றுவிடாது அவற்றைக் கண்காணித்து நிர்வகித்து பராமரித்து வருபவனாகவும் படைப்புகளுக்கு தேவையான அனைத்து வசதிகளையும் செய்து கொடுப்பவனாகவும் இருந்து கொண்டிருக்கின்றான்.

அவனது படைப்புக்களில் மனிதனை மேலான படைப்பாக அவன் படைத்திருக்கின்றான். அல்லாஹ்வின் பூமிக்கான பிரதிநிதி என்ற உயரிய அந்தஸ்தையும் பொறுப்பையும் அவனுக்கு அல்லாஹ் வழங்கி இருக்கின்றான். அது மகத்துவம் மிக்க உரிய பொறுப்பாகும். அப்பொறுப்பை அவன் மனிதனைத் தவிர வேறு எவருக்கும் வழங்கவில்லை.

அல்லாஹ்தஆலா மனிதனைப் படைக்க முன்னர் தன்னை சதா வணங்கி துதித்துக் கொண்டிருக்கும் மலக்குமாரிடம், பூமிக்கான எனது பிரதிநிதியைப் படைக்கப் போவதாகக் குறிப்பிட்டான் (அல் குர்ஆன் 2:30). அச்சமயம் மலக்குமார் மனிதர்கள் குறித்து குறிப்பிட்ட விடயங்களும் அதற்கு அல்லாஹ் அளித்த பதில்களும் சூரா பகராவின் 30 முதல் 39 வரையான வசனங்களில் தெளிவாக எடுத்தியம்பப்பட்டுள்ளன.

இவ்வசனங்களின் படி அல்லாஹ், முதல் மனிதரான ஆதம் (அலை) அவர்களைப் படைத்து அவருக்கு அனைத்து பொருட்களின் பெயர்களையும் கற்றுக்கொடுத்தான். அவனை சதாவும் வணங்கி வழிபட்டுக் கொண்டிருக்கும் மலக்குகள் அல்லாஹ்வின் கட்டளைக்கு அமைய முதல் மனிதரான ஆதமுக்கு சிரம் பணிந்தார்கள் (2:34)

அதேநேரம் முதல் மனிதரை அவன் தன் கரங்களால் படைத்திருக்கின்றான் (அல் குர்ஆன் 38:75) அத்தோடு நில்லாது மனிதன் வாழ்வதற்கு ஏற்ப பூமியை அமைத்து கொடுத்திருக்கின்றான். மனித வாழ்வுக்கும் அவனது பிரதிநிதித்துவ பொறுப்பையும் நிறைவேற்றவும் உழைக்கவென பூமியிலுள்ள அனைத்தையும் அவனுக்கு வசப்படுத்தியும் கொடுத்திருக்கின்றான்.

இதனை அல்லாஹ்வே தன் அருள் மறையில், 'அவன் தான் உங்களுக்கு பூமியை (நீங்கள் வசிப்பதற்கு) வசதியாக ஆக்கி வைத்தான்' (67:15) என்றும் 'அவன் தான் (பூமியையும்) பூமியிலுள்ள அனைத்தையும் உங்களுக்காகப் படைத்தான். (2:29) என்றும் குறிப்பிட்டு வைத்திருக்கின்றான்.

உண்மையில் மனிதன் வாழ்வதற்கு ஏற்ப அல்லாஹ் இப்பூமியை ஏற்பாடு செய்து கொடுத்திராவிட்டால் பூமியில் மனித வாழ்வே சாத்தியமற்றதாகிவிடும். அத்தோடு எந்தவொரு படைப்பினமும் மனிதனுக்காக உழைக்கவும் மாட்டாது.

மேலும், மனிதன் தம் பிரதிநிதித்துவப் பொறுப்பையும் கடமையையும் நிறைவேற்றுவதற்கு தேவையான இறைவழிகாட்டலையும் அவன் வழங்கியுள்ளான். இது தொடர்பில் நினைவூட்டல்களையும் வழிகாட்டல்களையும் வழங்கவென அவன் காலத்திற்கு காலம் மனிதர்களில் இருந்து இறைத்தூதர்களைத் தெரிவு செய்து அந்தந்த சமூகங்களுக்கும், பிரதேசங்களுக்கும் கால இட சூழல்களுக்கு ஏற்ப வழிகாட்டல்களை வழங்கியுள்ளான். ஆதம் (அலை) முதல் முஹம்மத் (ஸல்) அவர்கள் வரை இவ்வாறு இறைத்தூதர்கள் அனுப்பி வைக்கப்பட்டனர்.

என்றாலும் இறுதித்தூதர் முஹம்மத் (ஸல்) அவர்களின் வருகையோடு இறைத்தூதர்களை அனுப்பி வைக்கும் முறைமைக்கு முற்றுப்புள்ளி வைத்த அல்லாஹ், உலகம் இருக்கும் வரையும் பிறக்கும் ஒவ்வொருவருக்கும் நேர்வழிகாட்டக்கூடிய உயிரோட்டம் மிக்க இறைவழிக்காட்டலை அன்னார் ஊடாக உலகிற்கு அருளினான்.

இற்றைக்கு 1400 வருடங்களுக்கு முன்னர் சவூதி அரேபியாவின் மக்கா, மதீனாவில் வாழ்ந்த நபி (ஸல்) அவர்கள் ஊடாக உலகிற்கு கட்டம் கட்டமாக அருளப்பட்ட இந்த இறைவழிகாட்டல், 23 வருட காலப்பகுதியில் முழுமைப்படுத்தப்பட்டது. அத்தோடு எல்லா கால, இட சூழலுக்கு ஏற்றதும் முற்றிலும் நடைமுறைச் சாத்தியமானதுமான இறை வழிகாட்டல் இது என்பதும் உறுதிப்படுத்தப்பட்டிருகின்றது.

இந்த இறைவழிகாட்டலின் அடித்தளமான அல் குர்ஆன் 1400 வருடங்களுக்கு முன்னர் அருளப்பட்டது என்றாலும் அது உலகம் இருக்கும் வரையும் உயிரோட்டத்துடன் இருந்து கொண்டிருக்கக்கூடியதாகும். அது முழுமையானது, பூரணத்துவமானது. மனிதனின் இம்மை மறுமை வாழ்வின் விமோசனத்திற்கு நேர்வழிகாட்டுவதே அதன் இலக்கும் நோக்கமும் ஆகும். அதனால் 1400 வருடங்களுக்கு முன்னர் அருளப்பட்ட அதே வசனங்கள் தான் அன்றும் இன்றும் நாளையும் இருந்து கொண்டிருக்கின்றது. அவ்வசனங்கள் எல்லாக் காலங்களிலும் உயிரோட்டமாக இருந்து கொண்டிருக்கிறது. இப்பண்பை அல் குர்ஆனைத் தவிர வேறு எந்த நூலிலும் அவதானிக்க முடியாது.

அதேநேரம் நிச்சயமாக அல்லாஹ்விடத்தில் (அங்கீகரிக்கப்பட்ட) மார்க்கம் இஸ்லாம் தான்'. (3:19) என்று அல் குர்ஆன் குறிப்பிட்டிருக்கின்றது. அதனால் வரையறுக்கப்பட்ட வாழ்வுக் காலத்தையும் மட்டுப்படுத்தப்பட்ட தெரிவுச் சுதந்திரத்தையும் பெற்றுக் கொண்டுள்ள மனிதனின் பொறுப்பும் கடமையும் தெளிவானது. பூமியில் பிறக்கும் ஒவ்வொருவருக்கும் மரணம் நிர்ணயிக்கப்பட்டதாகவே உள்ளது. அதனால் உயிர்வாழ்வுக்கான நேர காலம் முடிவுற்ற பின்னர் எவரும் ஒரு நிமிடம் கூட உயிர் வாழ முடியாது. மரணத்தை சுவைத்தே ஆக வேண்டும். மரணமின்றி எவரும் காலாகாலம் உயிர் வாழ முடியாது. அதற்கான ஏற்பாடே கிடையாது.

அதனை அல் குர்ஆன் இவ்வாறு குறிப்பிட்டிருக்கிறது. 'ஒவ்வொரு வகுப்பாருக்கும் (அவர்கள் வாழவும் அழியவும்) ஒரு காலமுண்டு. அவர்களுடைய காலம் வரும் பட்சத்தில் ஒரு வினாடி பிந்தவும் மாட்டார்கள். முந்தவும் மாட்டார்கள்' (7:34). அதனால் இந்த வரையறுக்கப்பட்ட வாழ்வு கால எல்லைக்குள் தமது பிரதிநிதித்துவப் பொறுப்பை உரிய ஒழுங்கில் நிறைவேற்றியாக வேண்டும்.

'(மனிதர்களே..) நிச்சயமாக நாம் உங்களுக்கு பூமியில் எல்லா வசதிகளையும் அளித்து அதில் உங்களுக்கு வாழ்வதற்கு தேவையான காரணங்களையும் ஏற்படுத்தினோம்' (7:10).

அதனால் மனிதன் தன் பிரதிநிதித்துவ பணியை நிறைவேற்ற வேண்டும். அது அவனது இம்மை மறுமை வாழ்வின் விமோசனத்தை அடிப்படையாகக் கொண்டிருக்கின்றது. இது தொடர்பில் அல்லாஹ்வுக்கு மறுமையில் பதிலளிக்க வேண்டும். அதாவது பிரதிநிதித்துவ பணியை நிறைவேற்றும் ஒழுங்குக்கு ஏற்பவே மறுமையின் அறுவடை அமைந்திருக்கும். அதுவே அல் குர்ஆனினதும் நபிமொழிகளதும் போதனைகளாகும். அதேநேரம், அல்லாஹ்தஆலா தன் படைப்புக்களில் மனிதனைப் போன்று வேறு எந்தப் படைப்பையும் கண்ணியப்படுத்தியதாகவோ கௌரவப்படுத்தியதாகவோ இல்லை. குறிப்பாக மனிதர்கள் குறித்து மலக்குமார்கள் எடுத்துக்கூறிய போதிலும் மனிதனைப் படைப்பதில் அவன் உறுதியாக இருந்துள்ளான். தன் கரங்களால் அவன் முதல் மனிதனைப் படைத்தான். அதன் ஊடாக அல்லாஹ்வின் கரங்களால் படைக்கப்பட்ட முதல் மனிதரின் பரம்பரையைச் சேர்ந்தவர்கள் என்ற கௌரவத்தை ஒவ்வொரு மனிதனும் பெற்றுக்கொண்டுள்ளான்.

அத்தோடு அல்லாஹ் முதல் மனிதருக்கு எல்லா பொருட்களது பெயர்களையும் கற்றுக்கொடுத்தான். தன்னை சதா வணங்கி வழிபட்டு துதித்துக் கொண்டிருக்கும் வானவர்கள் சிரம் பணிந்த படைப்பு என்ற அந்தஸ்தை அவன் மனிதனுக்கு பெற்றுக் கொடுத்திருக்கிறான். அவன் வாழ்வதற்கு ஏற்ப பூமியை அமைத்து வசதிகளை செய்து கொடுத்து தம் பிரதிநிதித்துவப் பொறுப்பை நிறைவேற்றிட தேவையான இறை வழிகாட்டலையும் வழங்கியுள்ளான். அத்தோடு அப்பணிக்காக உதவி ஒத்துழைப்புக்களை நல்கவென அனைத்தையும் வசப்படுத்தியும் கொடுத்திருக்கின்றான்.

இவ்வாறு அல்லாஹ்வின் கௌரவத்தையும் சிறப்பையும் பெற்றுக் கொண்டுள்ள மனிதன், அவனுக்காக தன்னை முழுமையாக அர்ப்பணித்தாலும் அதற்கு ஈடாகாது. என்றாலும் தாம் பெற்றுக்கொண்டுள்ள இந்த வரையறுக்கப்பட்ட வாழ்வுக் காலத்தை அல்லாஹ்வின் விருப்பதற்கு ஏற்ப அமைத்துக் கொள்ளும் போதே தம் பிரதிநிதித்துவப் பொறுப்பை உரிய ஒழுங்கில் நிறைவேற்றக்கூடியதாக இருக்கும். அதற்காக அல்லாஹ்வின் நினைவுகளுடன் அருள் மறையாம் அல் குர்ஆனுடன் பயணித்தாக வேண்டும். அதுவே மனித வாழ்வின் விமோசனத்திற்கான அடித்தளமாக அமையும். அதனால் அல்லாஹ்வின் கட்டளை, நபி (ஸல்) அவர்களின் போதனைகள், வழிகாட்டல்களுக்கு ஏற்ப குர்ஆனை அணுகி அதனுடன் பயணிப்போம். அதன் ஊடாக ஈருலகிலும் விமோசனம் பெறுவதை இலக்காகக் கொள்வோம்.

**மர்லின் மரிக்கார்...**



# மீன்பாடும் தேன்நாடாம் மட்டுநகர், மாங்கேணியில் மாபெரும் சமாதான பெருவிழா

## வாழ்க்கையில் பலதரப்பட்ட பிரச்சினைகள், அடிமைத்தனங்கள், பாவ, சாபங்களிலிருந்து விடுதலை பெற விரும்பும் அனைவருக்கும் ஒரு அரிய சந்தர்ப்பம்....

## பெரேயா ஜெபவீடு வளாக திறந்தவெளி அரங்கில் ஜூலை 28,29,30 ஆம் தினங்களில் தினமும் பி.ப 4 மணிக்கு

## தேவ செய்தியாளர் பிரபல சுவிசேஷகர் சகோ. ஜெயம் சாரங்கபாணி

மீட்பரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் அதி உன்னத நாமத்தில் கிறிஸ்துவுக்குள் பிரியமான உங்கள் அனைவருக்கும் அன்பின் வாழ்த்துக்கள். மீண்டும் ஒரு நல்ல நாளில் உங்களை இக் கட்டுரை வாயிலாக சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி.



புனித வேதாகமத்தில் தேவனாலே எல்லாம் கூடும் (மாற்கு 10:27) என்ற தேவவார்த்தையின் படி சர்வத்தையும் படைத்த சர்வ ஞானி தேவனால் இப்பிரபஞ்சத்திலும் நம்முடைய வாழ்க்கையிலும் செய்யக் கூடாதவை ஒன்றுமில்லை. இறைவன் நியமித்ததை யாரைக்கொண்டும் எப்படியும் நிறைவேற்றி முடிக்க வல்லவர். அந்த வகையில் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் மக்களின் ஆன்மீக விடுதலைக்காக ஆத்தும பாரத்தோடு சுமார் 42 வருடங்கள் ஆவிக்குரிய வாழ்வில் இறை பணியில் அயராது உழைத்து வரும் முகத்துவார மிஸ்பா ஜெப மிஷனரி ஊழியத்தின் ஸ்தாபகரும், போதகரும், சுவிசேஷகருமான சகோ. ஜெயம் சாரங்கபாணி அவர்களின் தேவ செய்தியுடனான மூன்று நாள் மாபெரும் ஜெப ஒன்று கூடுகை மட்டக்களப்பு, வாகரை, மாங்கேணியில் பெரேயா ஜெபவீடு வளாக திறந்தவெளி அரங்கில் மக்களின் ஆசீர்வாதத்திற்காக ஒழுங்கு செய்யப்பட்டிருக்கிறது.

நாளுக்கு நாள் வாழ்க்கையில் எதையோ தேடி, எதையோ நோக்கி, எதற்காகவோ ஓடிக்கொண்டிருக்கும் மக்கள் மத்தியில் நாமும் நம்முடைய வாழ்க்கையை ஓட்டிக் கொண்டிருக்கிறோம். இலங்கையை பொறுத்தமட்டில் நேற்றைய நாளோடு இன்றைய நாளை ஒப்பிடும் போது ஏதோ ஒரு மாற்றம் இருக்கத்தான் செய்கிறது. மக்கள் மனதில் அன்று இருந்த நிம்மதியும், மகிழ்ச்சியும் கூடவே மறைந்து கொண்டு போகிறது.



தொலைக்காட்சியிலும் சமூக வலைதளங்களிலும் வீட்டிலிருந்தவாறே தேசத்தில் மற்றும் உலகத்தில் நடக்கிறவற்றை பார்க்க முடிகிறது. அதி உயர் தொழில்நுட்ப நிமித்தமும் நவ நாகரிகத்தினாலும் உலகம் இன்று சீர்குலைந்து அழிவை நோக்கி போய்க்கொண்டிருக்கிறது. மக்களுக்கு நாளைய தினத்தை குறித்தும், எதிர்காலத்தை குறித்த பயம், நம்பிக்கை அற்ற நிலை. சடுதியில் மரணம் சம்பவித்து விடுமோ என்று ஒரு சிலர், எப்போது மரணம் சம்பவிக்கும் என்று வேறு சிலர். இவ்வுலக வாழ்க்கையில் முடியுமானவரை மனிதன் சகலதையும் செய்ய, உருவாக்க முயற்சிக்கிறான். ஆனால் மரணம் அடையாமல் இருப்பதற்கு அவனால் கொடுக்கக்கூடியது ஒன்றுமில்லை. தனது சுய நோக்கத்தில் சார்ந்திருந்து

இவ்வுலக வாழ்க்கையை மட்டும் கருத்திற்கொண்டு தனக்காக வாழ விரும்புகிறவன் பரம வாழ்க்கையை இழந்து போகிறான்.

வானத்துக்கு கீழும் பூமிக்கு மேலும் நடப்பவை யாவும் மாயை என புனித வேதாகமத்தில் பிரசங்கி புத்தகம் கூறுகிறது. 'பொய்யான மாயையைப் பற்றிக் கொள்ளுகிறவர்கள் தங்களுக்கு வரும் கிருபையைப் போக்கடிக்கிறார்கள்.' என்று புனித வேதாகமத்தில் யோனா 2:8 ல் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

உலகப்பிரகாரமான மகிழ்ச்சி, மதுபானம், செல்வங்கள், பல முயற்சிகள் செய்து பொருட்களை சேர்த்தல், விருப்பத்தின் படி எல்லாம் தனது வாழ்க்கையை அனுபவித்தல் போன்ற யாவும் மாயையே. உலகுக்குரிய மாயையான காரியங்களில் ஈடுபடும்பொழுது மனதுக்கு சஞ்சலம், வேதனை, தனிமை, வெறுமை மாத்திரமே மிஞ்சும். ஆதாமின் வீழ்ச்சி



யின் நிமித்தம் வந்த சாபத்தினால் மனிதர் அநேக தொல்லைகளை அனுபவிக்கின்றனர்.தேவனுக்கு பயப்படுபவர்களும் கொடுமைகாரரும் ஒரேவிதமான துன்பங்களை அடைவதும், ஞானியும் மூடனும் ஒரே விதமாக மரணிப்பதும் உண்மைதான். ஆனால் மரணத்திற்கு பின்னர் அவர்களின் நிலை ஒரேவிதமாக அமைவதில்லை.

பிரியமானவர்களே, சர்வத்தையும் உண்டாக்கிய தேவன் சகலதையும் அறிந்திருக்கிறார். உங்களுடைய என்னுடைய வாழ்க்கையையும் நன்றாகவே அறிந்திருக்கிறார். அவரை ஏமாற்ற முடியாது. நாம் நமது வாழ்க்கையை பற்றிய கணக்கை அவருக்கு ஒப்புவிக்க வேண்டும். அவரே எங்களுடைய வாழ்க்கையின் உரிமையாளராக இருக்கிறார் அதுமாத்திரமன்றி மனித வாழ்க்கையை புரிந்து கொள்வதற்காகவும் மனிதனுக்கு விடுதலையை கொடுப்பதற்காகவும் தேவனே மனிதனாக கிறிஸ்து வடிவில் பிறந்தார்.

புனித வேதாகமத்தில் ஏசாயா 53:5 'நம்முடைய மீறுதல்களின் நிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களின் நிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார், நமக்கு சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது. அவருடைய தழும்புகளால் குணமாகிறோம்.' என்ற வசனத்தின்படி மனிதன் செய்கிற பாவத்திற்கான, அக்கிரமங்களுக்கான தண்டனையை மனிதனாக பிறந்த இயேசு கிறிஸ்து அன்று கோர சிலுவையில் மரணத்தை அனுபவித்தார். இயேசு கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டது நமக்காக என்று உணர்ந்து அவரை விசுவாசிக்கிற ஒவ்வொருவரும் மனதில் மகிழ்ச்சி, நித்தியமான வாழ்க்கையை குறித்த ஒரு நம்பிக்கை அது





மாத்திரமா..? மன அமைதி, சரீர சுகம், பாவ சாபத்திலிருந்து விடுதலையை பெற்றுக் கொள்ளுகிறார்கள். இவை யாவும் தேவன் மனிதன் மீது வைத்த அளவு கடங்காத அன்பின் நிமித்தமே. புனித வேதாகமத்தில் ரோமர் 5:8ல் 'நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார்.' என்று மிக தெளிவாக கூறப்படுகிறது.

நாம் பாவிகளாயிருக்கையில் தேவன் நம்மை நேசித்தார் எனில், இயேசு கிறிஸ்துவை ஏற்று அவருடைய ரத்தத்தினால் கழுவப்பட்டு தேவனுடைய சொந்த பிள்ளைகளான பின்பு எவ்வளவு அதிகமாய் நேசிப்பார்..? ஒரு தாய் தன் பிள்ளையை சுமப்பது போல ஒரு தகப்பன் தன் பிள்ளையை தாங்குவது போல எங்கள் பரம பிதாவும் எங்களை பராமரிக்கிறார். இவ்வாறு இன, மத பேதமின்றி மனிதகுலத்தின் அத்தனை பேரும் மனதில் சமாதானத்துடன், மகிழ்ச்சியுடனும், சகல ஐஸ்வரியத்துடனும் சுகமாக வாழ வேண்டும் என்று விரும்புகிறார். தம்மை நாடி வரும் அனைவருக்கும் இலவசமாக இவற்றை அருளுகிறார்.



பலதரப்பட்ட பிரச்சினைகள், அடிமைத்தனங்கள், மந்திர, பில்லிசூனியம், பிசாசின் கட்டு, கடன், நோய், தற்கொலை எண்ணம், பாவ சாபம் போன்றவற்றில் இருந்து விடுதலை பெற விரும்பும் அனைவருக்கும் ஒரு அரிய சந்தர்ப்பம். எதிர்வரும் ஜூலை மாதம் 28, 29, 30 (வெள்ளி, சனி, ஞாயிறு) ஆகிய திகதிகளில் மாங்கேணி, வாகரையில் 'பெரேயா ஜெப வீடு' வளாக திறந்த வெளி அரங்கில் தினமும் மாலை 4:00 மணிக்கு இப்பெருவிழா'



ஒழுங்கு செய்யப்பட்டிருக்கிறது. கண்ணீரோடு கவலையோடு வாழ்க்கையில் போராடிக் கொண்டிருக்கும் அனைவரும் குடும்பத்துடன் வந்து தேவனுடைய இலவச விடுதலையை பெற்றுக்கொள்ளுங்கள்.

அன்றைய தினம் அபிஷேக நிறைந்த ஆராதனை, தேவ செய்தி, விடுதலை நேர ஜெபம் குறிப்பாக இலங்கை தேசத்தின் சமாதானம், தேசத்தின் தலைவர்கள், தேசத்தின் மக்கள், தேசத்தின் சுபீட்சத்திற்கு தேவ பிள்ளைகள் ஒன்றிணைந்து ஜெபிக்கும் நேரம் ஒழுங்கு செய்யப்பட்டிருக்கிறது. வாருங்கள்... தேவனுடைய விடுதலையை பெற்றுக்கொள்ளுங்கள். அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

**தேவதாஸ் சவரிமுத்து**
(சிரேஷ்ட ஊடக இணைப்பாளர்)



# புலமைக் கதிர்

தரம்–5 வகுப்பு மாணவர்களுக்கான





திருமதி.பத்மா சந்திரமோகன்
புனித அந்தோனியார் கல்லூரி
கொழும்பு - 13

## புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் - II

1 மணித்தியாலம் 15 நிமிடம்

**I. பின்வரும் பந்தியை வாசித்து கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.**

இயற்கை அன்னையின் படைப்பில் அனைத்தும் அற்புதமே. உலகிலுள்ள உயிரினங்களுக்கு உவகை அளிக்கும் காலைக்காட்சி மனதிற்கு இனிமையானது. மகிழ்ச்சிகரமானது. பச்சை பட்டாடை விரித்தாற் போல காட்சி தரும் வயல்வெளிகளும், புல்வெளிகளும் காலை நேரத் தென்றலுக்குத் தலை அசைப்பதை கண்டு மனம் மகிழும். பூக்கள் பூத்து மணம் பரப்பி நிற்கும் பூஞ்சோலைகளும் பூக்களில் தேன் அருந்த வரும் வண்டுகளும் கண் கொள்ளாக் காட்சியே.

1. இப்பந்தியிலுள்ள உவமைத்தொடர் ஒன்றினைத் தருக.

…………………………………………………………………………………………

2. கண் கொள்ளாக் காட்சி என்பதன் பொருள் யாது?

…………………………………………………………………………………………

3. பந்தியிலுள்ள சினைப்பெயர் இரண்டு எழுதுக.

…………………………………………………………………………………………

4. ஒத்த கருத்து தருக.

i. உலகிலுள்ள - ……………………….... ii. உவகை - …………………..……..

5. எதிர்கருத்து தருக. i. இயற்கை - ………………………………………….....

6. உயிரினங்களுக்கு உவகை அளிப்பது எது?

…………………………………………………………………………………………

**II. பின்வரும் வாக்கியங்களின் எழுவாய், பயனிலை, செயற்படுபொருளை தெரிவு செய்து எழுதுக.**

7. கந்தன் மரத்தை வெட்டினான்.

i. எழுவாய் - …………………..…….. ii. பயனிலை - ………………………..

iii. செயற்படுபொருள் - ……………………………

8. குமரன் மரத்தில் ஏறினான்.

i. எழுவாய் - ………………………….. ii. பயனிலை - …………………………

iii. செயற்படுபொருள் - …………………………..

9. பின்வரும் ஒருமை வாக்கியத்தை பன்மை வாக்கியமாக மாற்றுக.

i. கோழி குஞ்சுகளுக்கு இரை ஊட்டியது.

…………………………………………………………………………………………

10. பின்வரும் சொற்களை சேர்த்தெழுதுக.

i. பால் + சோறு ……………………… ii. மலை + அருவி ……………………

iii. குளம் + கரை - ……………………..

11. பின்வருவனவற்றின் மரபுப் பெயர்களை எழுதுக

i. பலாவின் உள்ளீடு - …………………………………………………..

ii. தென்னையின் இளையது - …………………………………………………...

12. ஆண்பால் சொற்களுக்கு பெண்பால் சொற்களை எழுதுக.

i. பேரன் - ……………..…………ii. இடையன் - …………………………..……

13. சொற்களை ஒழுங்குபடுத்தி வாக்கியமாக எழுதுவோம்.
i. பெய்யும் / நாளை / மழை / காலையில் / இடியுடன் கூடிய

…………………………………………………………………………………………

14. பழமொழிகளைப் பூர்த்தி செய்க

i. பேராசை ……………………..…ii. ஆற்றிலே போட்டாலும் ……………………..

15. பொருத்தமான நிறுத்தற்குறிகளை இடுக.
i. கோகுல் கடைக்கு சென்று புத்தகம் பென்சில் அழிறப்பர் வாங்கினான்

…………………………………………………………………………………………

16. பொருத்தமான எழுத்துக்களைக் கொண்டு சொற்களை பூரணப்படுத்துக.

i. தொ…….ர்சாலை ii. அனு……லம்

17. மயில் அகவும் என்பது போல பல்லி ……………………………………………

18. ஐம்பொறிகளாவன ……………………………………………………………..

19. பின்வரும் சொற்களின் சிங்கள கருத்தை தமிழ் எழுத்துக்களில் எழுதுக.

i. புதன்கிழமை - ……………………………ii. சூரியன் - ………………………..

iii. மிளகாய் - ……………………..…….iv. சிங்கம் - ……………………..…....

20. பின்வரும் படங்களின் ஆங்கில சொற்களை எழுதுக.





i. ……………………………… ii. ……………………………

**III.**

21. இவ்வுருவிலுள்ள முக்கோணங்களின் எண்ணிக்கையையும் செவ்வகங்களின் எண்ணிக்கையையும் காண்க.



i. முக்கோணங்கள் ……………… ii. செவ்வகங்கள் ………………………

22. சமச்சீர் அச்சுக்கள் சரியாக வரையப்பட்டுள்ள படத்தினை தெரிவு செய்க.



A B C

…………………………..

23. நிழற்றப்பட்ட பகுதியின் பின்னம் யாது?



……………………………………….

24. இக்கூட்டினுள் உள்ள உருக்களில் 2/6 பங்கை நிழற்றுக.



25. 

இவ்வடிவங்களைக் கொண்டு ஆக்கக்கூடிய திண்மவுருவானது

…………………………………………………………………………………………

26. 77077 இதனை சொற்களில் எழுதினால்

…………………………………………………………………………………………....

27. இவ்வுருவிலுள்ள உச்சிகளின் எண்ணிக்கை யாது?



……………………………

28. 1kg 750g தேயிலை ரூபாய் 350.00 எனில் 2 kg தேயிலை எவ்வளவு ரூபாய்?

…………………………………………………………………………………………

29. 3, 7, 15, 31, ….?.....

**IV. சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

30. எமது தேசிய விளையாட்டில் ஒரு குழுவில் இருக்க வேண்டிய விளையாட்டு வீரர்களின் எண்ணிக்கை?
i. 7 ii. 11 iii. 6

31. மலேரியா நோயை ஏற்படுத்துவது
i. எலி ii. நுளம்பு iii. பல்லி

32. கூட்டு இலை வகைகளில் அடங்காதது
i. மா ii. முருங்கை iii. புளி

33. குருதியை உறிஞ்சிக் குடிக்கும் பிராணியானது
i. அட்டை ii. மரவட்டை iii. பாம்பு

34. மிக நீண்ட நாட்கள் உயிர்வாழக் கூடிய பிராணியானது
i. யானை ii. கடலாமை iii. குதிரை

35. நீரில் முழுமையாகக் கரையாத பொருள்
i. சீனி ii. உப்பு iii. மஞ்சட்தூள்

36. 

படத்தில் காணப்படும் பிராணியானது
i. மீன்
ii. கடற்குதிரை
iii. கணவாய்

37. தீயனைக்க பயன்படும் வாயுவானது
i. காபனீரொக்சைட்டு ii. ஒட்சிசன் iii. ஐதரசன்

(11ஆம் பக்கம் பார்க்க)

(10 ஆம் பக்கத் தொடர்)

# புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் - II

38. இலங்கையில் மிக உயரமான நீர்வீழ்ச்சி
i. விக்டோரியா ii. பம்பரகந்த iii. துன்ஹிந்த

39. இலங்கைக்கேயுரிய தாவரம்
i. நிலவேம்பு ii. தென்னை iii. பலா

40. மாணிக்க கங்கை அமைந்துள்ள சரித்திர புகழ்பெற்ற புனிதத் தலமானது
i. திருகோணமலை ii. சிவனொளிபாதமலை iii. கதிர்காமம்

41. தொற்று நோயை உடனடியாக ஒழித்துக்கட்ட அறிவிக்க வேண்டிய அரச நிறுவனம்
i. வைத்தியசாலை ii. பொதுச் சுகாதாரப் பிரிவு
iii. பாடசாலை

42. இலங்கையில் பால் உற்பத்திக்கு பிரசித்திபெற்ற இடமானது?
i. அம்பேவெல ii. ஹங்வெல்ல iii. வெலிசர

43. வனைசில்லு பயன்படுத்தப்படும் தொழிலானது?
i. வயல்வேலை ii. மட்பாண்ட வேலை iii. சுரங்க வேலை

44. “நான் வீட்டுக்கும் நாட்டுக்கும் ஏணியாவேன்” என்பது தியானத்தின் எப் படிமுறையில் கூறப்படுவது?
i. பிரார்த்தனை ii. மனவுறுதி iii. மலர்வு

45. தவளையின் இளம் பருவத்தினை குறிக்கும் பெயரானது?
i. பேத்தை ii. புழு iii. முட்டை

46. தையல் தொழிலுக்கு பயன்படும் உபகரணமானது
i. சீவுளி ii. இடுக்கி iii. தீதாள்

47. வாகனமொன்றினை பின்நோக்கி செலுத்தும் போது ஒளிரும் விளக்கின் நிறம்
i. வெள்ளை ii. மஞ்சள் iii. சிவப்பு

48. அதிக மோப்ப சக்தியையுடைய பிராணியானது
i. பூனை ii. நாய் iii. யானை

49. பலாக்காயில் கூடியளவு காணப்படும் சத்துப்பொருளானது
i. மாப்பொருள் ii. புரதம் iii. கல்சியம்

50. தாள்களை பிணைக்கும் கருவியானது
i. துளை கருவி ii. ஒட்டும் கருவி iii. பிணை கருவி

51. அகத்திப் பூவின் நிறமானது?
i. மஞ்சள் ii. வெள்ளை iii. சிவப்பு

52. 
இக்குறியீடு குறிப்பது?
i. அபாயம்
ii. எச்சரிக்கை
iii. அவதானம்

53. பின்வருவனவற்றுள் நாருரு வேர் கொண்ட தாவரமானது?
i. மா ii. பலா iii. பனை

54. எமது நாட்டின் தேசிய கீதத்தை தமிழில் மொழி பெயர்த்தவர் யார்?
i. மு.நல்லதம்பி ii. அமரதேவா
iii. ஆனந்த சமரகோன்

55. வேடுவர்களின் கலாசார நடனமாக அமைவது
i. கண்டியன் நடனம் ii. கிரிகொரங்கா iii. பரதம்

56. இலங்கை தேசப்படத்தில் மலைகள் குறிக்கப்படும் நிறமானது
i. மஞ்சள் ii. சிவப்பு iii. கபிலம்

57. எமது உடலில் கல்சியம் குறைபாட்டால் அதிகம் பாதிப்படைவது எவை?
i. தசை, இரத்தம் ii. பல், எலும்பு iii. எலும்பு, இரத்தம்

58. பின்வருவனவற்றுள் கூட்டமாக வாழாத பிராணியானது
i. எறும்பு ii. தேனீ iii. பூராண்

59. பலகையில் துளையிடப் பயன்படுத்தப்படும் கருவியானது
i. துறப்பணம் ii. சீவுளி iii. வாள்

60. ‘நான் பார்த்து இரசித்த அழகிய காட்சி’ என்ற தலைப்பில் மூன்று வாக்கியங்கள் அமைக்குக. ஒவ்வொரு வாக்கியத்திலும் ஐந்து சொற்களுக்கு குறையாமல் இருப்பதோடு எழுவாய், பயனிலை தொடர்பு முறையாக பேணப்பட்டிருக்க வேண்டும்.

.........................................................................................................

.........................................................................................................

.........................................................................................................

## கடந்த வார (14.07.2023) வினாத்தாள் II இற்கான விடைகள்

| | | | |
|---|---|---|---|
| 1. 2 | 11. 2 | 21. 1 | 31. 2 |
| 2. 2 | 12. 3 | 22. 2 | 32. 3 |
| 3. 1 | 13. 1 | 23. 3 | 33. 1 |
| 4. 3 | 14. 1 | 24. 3 | 34. 1 |
| 5. 1 | 15. 3 | 25. 1 | 35. 3 |
| 6. 1 | 16. 2 | 26. 3 | 36. 1 |
| 7. 3 | 17. 2 | 27. 1 | 37. 2 |
| 8. 1 | 18. 1 | 28. 1 | 38. 3 |
| 9. 3 | 19. 3 | 29. 3 | 39. 1 |
| 10. 2 | 20. 2 | 30. 2 | 40. 2 |

'அஸ்வெசும' கொடுப்பனவு

# அரச வங்கிகளில் பயனாளிகள் கணக்கு திறப்பதற்கான நடவடிக்கை ஆரம்பம்

அம்பாறை மேலதிக அரசாங்க அதிபர்

ஒலுவில் விசேட நிருபர்



அம்பாறை மாவட்டத்தில் 'அஸ்வெசும' நலன்புரிக் கொடுப்பனவை பெற்றுக்கொள்வதற்கு தகுதி பெற்றுள்ள பயனாளிகள், அரசாங்க வங்கிகளில் கணக்குகளை திறப்பதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக, அம்மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வீ.ஜெகதீசன் தெரிவித்தார்.

வங்கிக் கணக்கு இதுவரையில் உறுதிப்படுத்தப்படாத பயனாளிகள் 'அஸ்வெசும' நலன்புரிக் கொடுப்பனவை பெற்றுக்கொள்வதற்காக இலங்கை வங்கி, தேசிய சேமிப்பு வங்கி, மக்கள் வங்கி, பிரதேச அபிவிருத்தி வங்கி ஆகியவற்றில் ஏதேனுமொன்றில் தங்களுக்கான கணக்குகளை ஆரம்பிக்க முடியும்.

இதற்கான அனுமதிக் கடிதத்தை தத்தமது பிரதேச செயலகத்தில் பெற்றுக் கொள்ளலாமெனவும், அவர் தெரிவித்தார்.

இதேவேளை, தத்தமது பிரதேச செயலகத்தால் வழங்கப்படும் அனுமதிக் கடிதம் இல்லாது, தங்களால் நேரடியாக ஆரம்பிக்கப்படும் வங்கிக் கணக்குகள் நலன்புரி நன்மைகள் சபையால் நிராகரிக்கப்படுமெனவும், அவர் மேலும் தெரிவித்தார்.

ஆட்சேபனை முன்வைக்கப்பட்டுள்ள விண்ணப்பதாரர்களுக்கு மேன்முறையீட்டு குழுவால் தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டு அறிவிக்கப்பட்ட பின்னரே, வங்கிக் கணக்குகளை ஆரம்பிப்பதற்கான அனுமதிக் கடிதங்கள் வழங்கப்படும்.

இத்திட்டத்தில் உள்வாங்கப்பட்டுள்ளீர்களா என்பதை உறுதிப்படுத்த https://iwms.wbb.gov.lk/household/search எனும் இணைப்புக்குச் சென்று, தங்களது QR குறியீட்டு இலக்கம் அல்லது தேசிய அடையாள அட்டை இலக்கத்தை உள்ளிடுவதன் மூலம் அறிய முடியுமெனவும், அவர் தெரிவித்தார்.

# கசிப்பு காய்ச்சிய இருவர் கைது

கந்தளாய் தினகரன் நிருபர்

திருகோணமலை, சேருநுவர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இலிங்க நகரில் சட்டவிரோதமாக கசிப்பு காய்ச்சிய சந்தேகநபர்கள் இருவரை நேற்று முன்தினம் புதன்கிழமை (19) கைது செய்துள்ளதுடன், இவர்களிடமிருந்து கசிப்பையும் கைப்பற்றியுள்ளதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பாக சேருநுவர குற்றப்புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து, சோதனை நடத்தி இலிங்க நகரைச் சேர்ந்த 30, 43 வயதுடைய இச்சந்தேகநபர்களை கைது செய்துள்ளதாகவும், பொலிஸார் தெரிவித்தனர். 5 பரல்கள், 144 போத்தல்கள், 4 கான்கள், 108,500 மில்லிலீற்றர் கசிப்பு, 259,500 மில்லிலீற்றர் கோடா உள்ளிட்டவற்றை கைப்பற்றியுள்ளதாகவும், பொலிஸார் தெரிவித்தனர்.

# கிழக்கின் குரல்

கிழக்கு மாகாண

## கூட்டுறவு ஊழியர்கள் ஆணைக்குழுவின் பணிப்பாளர் சபைக்கு புதிய உறுப்பினர்

அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்



கிழக்கு மாகாண கூட்டுறவு ஊழியர்கள் ஆணைக் குழுவின் பணிப்பாளர் சபைக்கு புதிய உறுப்பினர் ஒருவர், கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இப்பணிப்பாளர் சபையின் புதிய உறுப்பினராக அல் மீஸான் பௌண்டேஷன் ஸ்ரீலங்காவின் தவிசாளரும் ஊடகவியலாளருமான நூருல் ஹுதா உமர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவருக்குரிய நியமனக் கடிதத்தை கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், ஆளுநர் மாளிகையில் வைத்து நேற்று முன்தினம் புதன்கிழமை (19) வழங்கி வைத்தார்.

# மன்னம்பிட்டி விபத்தில் உயிரிழந்த 11 பேரின் குடும்பங்களுக்கு நிதியுதவி

ஓட்டமாவடியில் வழங்கிவைப்பு



கல்குடா தினகரன், சாய்ந்தமருது விசேட, பாசிக்குடா நிருபர்கள்

மன்னம்பிட்டி விபத்தில் உயிரிழந்த 11 பேரின் குடும்பங்களுக்கு தலா 100,000 ரூபாய் நிதியுதவி வழங்கும் நடவடிக்கை, ஓட்டமாவடி பிரதேச சபையில் நேற்று முன்தினம் (19) நடைபெற்றது.

ஸ்ரீலங்கா மீடியா போரத்தின் ஏற்பாட்டில் அதன் பணிப்பாளர் எம்.ரீ.எம்.பாரிஸ் தலைமையில், தியாகி அறக்கொடை நிதியத்தின் தலைவர் வாமதேவன் தியாகேந்திரனின் சொந்த நிதியிலிருந்து இந்த உதவி வழங்கப்பட்டது. இம்மாத முற்பகுதியில் பொலன்னறுவை, கதுருவெலவிலிருந்து கல்முனை நோக்கிப் புறப்பட்ட தனியார் பேருந்தொன்று மன்னம்பிட்டி, கொட்டலி பாலத்திலிருந்து விலகிச்சென்று ஆற்றில் விழுந்ததில், 11 பேர் உயிரிழந்தனர்.

இதேவேளை, மட்டக்களப்பில் வறுமைக் கோட்டுக்கு கீழுள்ள 100 மாணவர்களுக்கு தலா 1,000 ரூபாய் படி ஊக்குவிப்புத்தொகை வழங்கி வைக்கப்பட்டது.

# அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய கல்லூரியில் இஸ்லாமிய புத்தாண்டு

அட்டாளைச்சேனை தினகரன் நிருபர்



அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய கல்லூரியால் ஏற்பாடு செய்யப்பட்ட இஸ்லாமிய புத்தாண்டு தின சிறப்பு நிகழ்வு, அப்பாடசாலையில் நேற்று (20) நடைபெற்றது.

பாடசாலை அதிபர் ஏ.பி.முதீன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், உதவி அதிபர் ஏ.எல்.சம்சுல் பழீலின் வழிப்படுத்தலில் புத்தாண்டு தினத்தின் சிறப்பு, புத்தாண்டு ஆரம்பிக்கும் முஹர்ரம் மாதத்தில் முஸ்லிம்கள் கடைப்பிடிக்க வேண்டிய மத விடயங்கள், ஏனைய மதத்தவர்களுடன் முஸ்லிம்கள் நல்லுறவை ஏற்படுத்தி ஒற்றுமையை கட்டியெழுப்ப வேண்டிய அவசியம் தொடர்பாக மார்க்க அறிஞர்களால் விளக்கமளிக்கப்பட்டது.

இதன்போது, 'இஸ்லாமிய வரலாற்றில் புதுவருடத்தின் சிறப்புகள்' எனும் தலைப்பில் மௌலவி கே.எல்.நைஸர் நழீமி சொற்பொழிவு ஆற்றியதுடன், கலை, கலாசார நிகழ்வுகளும் நடைபெற்றன.

அத்துடன், நிலையான சமாதானம், இன ஐக்கியம், பொருளாதார மேம்பாட்டுக்காக துஆ பிரார்த்தனையும் நடத்தப்பட்டது.

பாடசாலையில் நடத்தப்பட்ட விசேட ஒன்றுகூடலின்போது, இனிப்புப்பண்டங்களும் அன்னதானமும் வழங்கப்பட்டன.

# வெல்லாவெளியில் பாலர் பாடசாலை கட்டட திறப்பு விழா



பாண்டிருப்பு தினகரன் நிருபர்

மட்டக்களப்பு மாவட்டத்தின் போரதீவுப்பற்று, வெல்லாவெளி பிரதேசத்திலுள்ள விவேகானந்தபுரம் அம்மன் பாலர் பாடசாலை கட்டட திறப்பு விழா நேற்று (20) நடைபெற்றது .

இப்பாடசாலைக்குரிய காணியை சமூக ஆர்வலரும் பிரபல வர்த்தகருமான டானியல் நன்கொடையாக வழங்கியிருந்தார்.

ஒசன் ஸ்ற்ரார் நிறுவனம், மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு, முன்பள்ளிப் பருவ அபிவிருத்தி செயற்றிட்டம் ஆகியவற்றின் நிதிப் பங்களிப்புடன் இந்தக் கட்டடம் கட்டப்பட்டு, திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் ஓசியன் அவுஸ்திரேலிய முகாமைத்துவ பணிப்பாளர் டிலானி வென்ரர், போரதீவுப்பற்று உதவிப் பிரதேச செயலாளர் துலாஞ்சணன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# பேருவளை நகரிலே சரித்திர சான்று பகரும் ஸேம் ரிபாய் ஹாஜியார் மகா வித்தியாலயம் (தேசியப் பாடசாலை)

**முஸ்லிம்கள் முதன் முதல் காலடிவைத்த பேருவளை நகரிலே சரித்திர சான்று பகர்ந்து நிற்கும் மாளிகாச்சே–னையில் கலங்கரை விளக்காகத் திகழும் மேல்/களு – ஸேம் ரிபாய் ஹாஜியார் மகா வித்தியாலயம் (தேசியப் பாடசாலை) பல முக்கிய வரலாற்றுத் தடங்களை தன்ன–கத்தே கொண்டுள்ளது.**

இலங்கை ஈன்றெடுத்த இஸ்லாமிய பேரறிஞர் இமாமுஸ் ஸைலான் அஷ் செய்கு முஸ்தபா வலியுள்ளாஹ் நாயகம் கடல்கடந்து அறிவு ஞானம் பெற்று வந்த பின்னர் இலங்கை வீற்றிருந்த அஷ் செய்கு ஷாஹ் அஹ்மத் இப்னு முபாரக் மௌலானா நாயகத்துடன் நாடளாவிய ரீதியில் மார்க்கப்பணிகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்த வேலை மாளிகாச்சேனை வாழ் மக்களுக்கும் மார்க்க அறிவையும் மொழியறிவையும் விருத்தி செய்யும் நோக்கில் முஸ்தபா நாயகம் அன்னவர்களது வீட்டினருகில் மூன்று கட்டடங்களில் 'மக்தபதுல் அமீனிய்யா' என்ற பெயரில் ஓர் மத்ரஸா பாடசாலை ஆரம்பித்து நடாத்தி வரப்பட்டுள்ளது.

அக்காலத்தில் அந்த மத்ரஸாவிலே சன்மார்க்க அறிஞர்களுக்கு மேலதிகமாக தமிழறிவு புகட்ட தர்கா நகர் வெளிப்பிடியைச் சேர்ந்த லத்தீப் புலவர் என அழைக்கப்பட்ட அப்துல் லதீப் மாஸ்டர் அவர்களும் சேவை செய்துள்ளதாக வரலாறுகளில் பதியப்பட்டுள்ளது.('குருநாகல் விஸ்தரய' சரித்திர குறிப்பு) பிற்காலத்தில் சனப்பெருக்கம் மற்றும் கல்விக்கான தேவை அதிகரித்ததுடன் முஸ்தபா நாயகத்தின் பேரர், சீர்திருத்தச் செம்மல் அஷ் செய்கு அப்துஸ் ஸமீஉ நாயகம் அன்னவர்களால் இதனை விரிவுபடுத்தும் நோக்கிலும், திட்டமான நிர்வாகக் கட்டமைப்பினுள் கொண்டுவரும் நோக்கிலும் தனது வீட்டின் அயலில் மாளிகாச்சேனை மண்ணில் ஓர் இடத்தைத் தெரிவு செய்து, பைத்துல் முபாரக் வ தாருல் முஸ்தபா புகாரி தகிய்யாவின் சொந்த நிதியில் 70X21 அளவுடைய ஓர் கட்டடத்தையும் நிறுவி 'மக்தபதுல் அமீனிய்யா' என்ற பாடசாலையை அக்கால அரசுடன் பல உடன்படிக்கைகளை ஏற்படுத்தி ஆரம்பிக்க வழிகோரியுள்ளார்கள்.

அன்னவர்களின் முயற்சியின் வெற்றியே 1926.05.10 ஆம் திகதி 37 மாணவர்கள் மற்றும் 2 ஆசிரியர்களுடன் ஆரம்பிக்கப்பட்ட எமது பாடசாலையாகும். அன்று பாடசாலையின் தலைமை ஆசிரியராக யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இராசைய்யா அவர்கள் கடமைப்பொறுப் பேற்றார்கள்.

இந்த வரலாற்றுச் சுருக்கம் சமூகத்தின் கல்வி மேம்பாட்டுக்காக இனம், மதம் கடந்த சமூகத்தரப்பினரின் முயற்சியை பெரிதும் எடுத்துக்காட்டுகிறது. அக்கால கட்டத்தில் பாடசாலையை அண்மித்த சூழலில் பெண் மாணவிகளுக்கென அல் பாஸியதுன் நஸ்ரியாவும், ஆண், பெண் மாணவ மாணவிகளுக்கு ஐ.எல்.எம் ஸம்ஸுத்தீன் வித்தியாலயமும் நிறுவப்பட்டிருந்தமையும் முக்கிய அம்சமாகும்.



பாடசாலை அதிபர் எஸ்.ஆர். குமார்

இவ்வாறு ஏனைய பாடசாலைகளுடன் கைகோர்த்து தனது பயணத்தை ஆரம்பித்த அப்போதைய 'மக்தபதுல் அமீனிய்யா' பிற்காலத்தில் 'மாளிகாஹேன முஸ்லிம் மகா வித்தியாலயம்' என பெயர் மாற்றம் பெற்று தனது சேவையை தொடர்ந்தது.இதன் தொடர்ச்சியாகவே 'மக்தபதுல் அமீனிய்யா' பாடசாலையின் நினைவாக எமது பாடசாலையில் இன்றும் 'அல் மத்ரஸதுல் அமீனிய்யா' என்ற அல் குர்ஆன் மத்ரஸா பாடசாலை நேரம் முடிவடைந்த பின்னர் நடத்திவரப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

1980 களில் பாடசாலையின் மைதானத் தேவையை கருதி முன்னாள் அதிபர் ஸாலிஹ் அவர்களினது வேண்டுகோளுக்கிணங்க எமது பாடசாலையின் பழைய மாணவரும் அன்றைய பாராளுமன்றத்தின் சபாநாயகருமான அல்ஹாஜ் பாக்கீர் மாக்காரின் முயற்சியினாலும் எஸ். எம். அப்துல்லாஹ் ஹாஜியாரின் புதல்வர் இஸ்மாயில் ஹாஜியார் அவர்கள் தனது சொந்த காணியை பாடசாலைக்கு தமது குடும்பம் சார்பாக அன்பளிப்புச் செய்ததுடன், ஹனீபா ஹாஜியார் (ராஜா) மற்றும் சி.மு.ஹாஜியாரின் குடும்பத்தவரும் தனது காணிகளை பாடசாலைக்கு அன்பளிப்புச் செய்துள்ளனர். இதுவே இன்று எமது பாடசாலையின் மைதானமாக யாவருக்கும் பயனளித்துக் கொண்டிருக்கிறது.

இத்தொடர்ச்சியில் 2000 ஆம் ஆண்டு ஆரம்பத்தில் பாடசாலையின் வரலாற்றினை மீளப்புதுப்பித்து மாற்றங்கள் இடம்பெற்ற அப்போதைய அதிபர் அல்ஹாஜ் அஷ்ரப் அவர்களின் முயற்சியிலும் பேராசிரியர் அல்ஹாஜ் ஹுஸைன் இஸ்மாயில் அவர்களின் வழிகாட்டலின் பேரில் பொறியியலாளர் ஏ.ஜி.ஏ பாரி அவர்களின் சிந்தனைக்கமைவாக ஸ்ரீ லங்கா சிகாமணி கொடைவள்ளல் ஸேம் ரிபாய் ஹாஜியார் அவர்களின் நன்கொடைகளின் பேருதவியால் பாடசாலையின் கல்வியிலிருந்து கட்டடம் வரை பாரிய வளர்ச்சியை கண்டதுடன் பாடசாலையின் தரம் அடுத்த படிக்கு உயர்த்தப்பட்டது எனலாம்.

அதே தொடரில் இக்காலகட்டத்தில் சிறிய கால எல்லைக்குள் உயர்தர கலை, வர்த்தக மற்றும் விஞ்ஞான பிரிவுகள் ஆரம்பிக்கப்பட்டு பாடசாலை 1 ஏ.பி தர பாடசாலையாக உயர்த்தப்பட்டது. தற்பொழுது எமது பாடசாலை சகல ஆய்வுகூட வசதிகளையும் கொண்டதாக எல்லா துறைகளிலும் மாணவர்களைப் பல்கலைக்கழகத்திற்கு அனுப்பி வழிகாட்டக்கூடிய ஓர் கலாசாலையாகவும் எமது பாடசாலை பரிணாமம் பெற்றதில் ஸேம் ரிபாய் ஹாஜியாரை மறக்க முடியாது. அந்நன்றியுணர்வினாலேயே அக்கால நிர்வாகத்தினால் பாடசாலையின் பெயர் ஸேம் ரிபாய் ஹாஜியார் மஹா வித்தியாலயம் என மாற்றப்பட்டது. தற்பொழுது பாடசாலை உயர்தரத்தின் நான்கு துறைகளிலும் மாணவர்களைக் கொண்டதாக 2000 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர்.

எமக்கு 90 இற்கு அண்மித்த ஆசிரியர்கள் சேவையில் ஈடுபட வேண்டியிருப்பினும் 68 ஆசிரியர்கள் மாத்திரமே கடமையில் இருக்கின்றனர். இவ்வாறான இக்கட்டானதொரு சந்தர்ப்பத்தில் பாடசாலையில் ஏற்பட்ட அதிபர் வெற்றிடத்தினை நிவர்த்தி செய்வதற்காக தற்போதைய அபிவிருத்தி சங்கம், பழைய மாணவர் சங்கம் மற்றும் நலன் விரும்பிகளின் முயற்சியால் எஸ்.ஆர் குமார் அவர்கள் பாடசாலையின் பொறுப்புக்களை கடந்த 2023 மார்ச் மாதம் 31 ஆம் திகதி ஏற்றுக் கொண்டார்.

புதிய அதிபர் அவர்கள் பாடசாலைக்கு வந்த முதல் நாளிலேயே அப்போதிருந்த ஆசிரியர்கள் மற்றும் நிர்வாகிகளுடன் கலந்தாலோசித்து பாடசாலையின் அபிவிருத்தியில் செல்வாக்குச் செலுத்தும் பிரதான காரணிகளை இனங்கண்டு அவற்றை பட்டை தீட்டும் பொறுப்பை தாமே ஏற்றார்.

பெற்றார் கூட்டங்கள், மாணவர்களுக்கான கூட்டங்கள் என பல விழிப்புணர்வுக் கூட்டங்களை நடாத்தி அவர்களின் மனம் வென்ற அதிபர் அவர்களுக்கு பாடசாலை சமூகத்தின் ஒத்துழைப்பு யாரும் எண்ணியதை விட மேலாகவே கிடைத்தது. முதற்கட்டமாக பாடசாலையின் வெளி தோற்றத்தையும் மாற்றிய அவர் அவர்களுடைய உள்ளத்திலும் கல்வியின் தேவையை ஊட்டினார்.

பெற்றோரை பாடசாலையுடன் தொடர்புபடுத்தினார். ஆசிரியர்களுக்கு தன்னம்பிக்கையும் தனது செயற்பாடுகளை தைரியமாக மேற்கொள்ளும் சூழலையும் ஏற்படுத்தினார். தீர்க்க முடியாதிருந்த ஆசிரியர் பற்றாக்குறையால் மாணவர்களின் கல்வி பாதிக்கக்கூடாது என்பதால் அபிவிருத்திச் சங்கம் மற்றும் பழைய மாணவர்களுடன் கலந்துரையாடி பாடசாலைக்கு புதிதாக தொண்டர் ஆசிரியர்கள் 20 இற்கும் மேற்பட்டவர்களை பாடசாலையில் இணைத்து 'எல்லா நாளும் 9 பாடங்கள்' என்ற எண்ணக்கருவுக்கேற்ப மாணவர்களுக்கு தொடர்ச்சியான கல்வியை வழங்க ஏற்பாடுகளை செய்துள்ளார்.

மாணவர்களின் திறமைகளை தரம் 1 முதல் வளர்க்க வேண்டும் என்ற நோக்கில் தரங்கள் 1 2, தரங்கள் 3 5, தரங்கள் 6 13 என மூன்று வகுதிகளாக தனித்தனியே காலைக் கூட்டங்கள் ஏற்பாடு செய்து அதில் நிகழ்ச்சித் தொகுப்பினை ஒவ்வொரு வகுப்பிற்குமாக வழங்கியிருப்பது மாணவர்களின் ஆளுமையினை மேலும் விருத்தி செய்துள்ளது.

இவ்வாறு இன்னோரன்ன திட்டங்களுடன் அதிபர் எஸ். ஆர். குமார் அவர்கள் பாடசாலையை நடத்திச் செல்வது பாடசாலையின் ஆசிரியர் குழாம், மாணவர்கள், பெற்றார்கள் அனைவரிடமும் புத்தாக்க சிந்தனையை உண்டாக்கியுள்ளது என்றால் அது மிகையாகாது.

இந்த சந்தர்ப்பத்தில் அதிபரோடு தோளோடு தோள் நின்று உழைக்கும் எமது ஆசிரியர் குழாம் மற்றும் செயலாளர் உஸ்மான் உட்பட பாடசாலையின் அபிவிருத்தி சங்க செயலாளர் அப்துல் லதீப் உட்பட பாடசாலையின் பழைய மாணவர் சங்கம் மற்றும் நலன் விரும்பிகள் அனைவரையும் நாம் இங்கு நன்றியுடன் நினைவு கூற கடமைப்பட்டுள்ளோம்.



பாடசாலை உப அதிபர் பாத்திமா நஸ்மியா

2026 ஆம் ஆண்டு 100 ஆண்டுகளை எட்டவிருக்கும் எமது பாடசாலைக்கும் சமூகத்துக்கும் மாணவர்களுக்கும் ஒரு புதிய நம்பிக்கை, எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது. இலங்கையில் தலைசிறந்த பாடசாலையாக எமது பாடசாலை மிளிரும் என்ற நம்பிக்கை பிறந்துள்ளது.

இம்மாபெரும் மாற்றத்தின் கதாநாயகன் எமது அதிபர் எஸ்.ஆர்.குமார் அவர்களையும் நாம் நன்றியுடன் வாழ்த்துகிறோம். மாளிகாச்சேனை ஸேம் ரிபாய் ஹாஜியார் மஹா வித்தியாலயம் இனது வரலாற்றை உற்று நோக்கும் போது இது வெறுமனே ஓர் பாடசாலையல்ல. இது பல இறை நேசர்களின் அடிக்கல், அவர்களின் பிரார்த்தனை.

எனவே பாடசாலை எமது சமூகத்திற்கு என்றும் ஒளிவீசும் கலங்கரை விளக்காக திகழும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

ஆக்கமும்,
M.S.Mநஃப்ஹரான்
பிரதி அதிபர்




அதிபர், பிரதி அதிபர் மற்றும் உப அதிபர்கள் உட்பட தொண்டர் ஆசிரியர்கள்


அதிபர் உட்பட தரம் 6 இற்கு மேற்பட்ட வகுப்புத் தலைவர்கள்


அதிபர் மற்றும் பிரதி அதிபர் உட்பட மாணவத் தலைவிகள்


அதிபர் உட்பட பாடசாலையின் அபிவிருத்திச்சங்கம் மற்றும் பழைய மாணவர் சங்கம்


அதிபர் மற்றும் பிரதி அதிபர் உட்பட மாணவத் தலைவர்கள்


அதிபர் உட்பட ஏனைய ஆசிரியர்கள்

## பிரதி அதிபரின் ஆசிச் செய்தி

'மாளிகாஹேன ஸ்கூல்' என்று பேருவளை வாழ் மக்களால் அழைக்கப்படும் ஸேம் ரிபாய் ஹாஜியார் மஹா வித்யாலயம் (தேசிய பாடசாலை) பேருவளை மண்ணில் வரலாறு பேசும் மேதைகளுடன் தொடர்புடைய ஓர் பாடசாலையாகும்.

நாடு போற்றும் இஸ்லாமிய மாமேதைகளையும் வர்த்தகர்களையும் தொடர்புபடுத்தும் எமது பாடசாலையின் வரலாறு பல கோணங்களில் பல கதைகள் சொல்லும்.

இத்தகைய மரபு ரீதியான பெறுமதி வாய்ந்த எமது பாடசாலை நூற்றாண்டை இன்னும் இரண்டு ஆண்டுகளில் பூர்த்தி செய்ய எதிர்பார்த்திருக்கும் இத்தருவாயில் அதை நோக்கிய பாடசாலையின் இப்பயணம் எமது பாடசாலையின் புதிய அதிபர் எஸ்.ஆர். குமார் அவர்களின் தலைமையில் வேகமாகவும் புதிய சிந்தனையுடனும் சகல தரப்பினரின் ஒத்துழைப்புடனும் முன்னேறுவது மகிழ்ச்சியளிக்கின்றது.

இப்பாரிய சமூகப்பொறுப்பில் என்னையும் இனங்கண்டு எனது உழைப்பையும் பயன்படுத்தியமைக்காக நான் எமது அதிபருக்கு நன்றி கூற கடமைப்பட்டுள்ளேன். எமது பாடசாலையின் இப்புரட்சிகரமான முன்னேற்றத்தில் ஒத்துழைப்பு நல்கும் எமது ஊரிலுள்ள மார்க்க அறிஞர்கள் சமூக சிந்தனையாளர்கள் மற்றும் பாடசாலை சமூகத்தை சேர்ந்த சகல தரப்பினருக்கும் எமது ஆசிரியர் குழாம் சார்பாக நான் எனது மனப்பூர்வமான நன்றிகளை தெரிவிப்பதோடு நூற்றாண்டை எட்டும் எமது ஸேம் ரிபாய் ஹாஜியார் கல்லூரியை இறைவன் அருளால் தொடர்ந்தும் சமூக மேம்பாட்டில் உழைக்கும் என நம்பிக்கையளிப்பதில் பெரு மகிழ்ச்சியடைகிறேன்.

*பிரதி அதிபர்*
*எம்.எஸ்.எம். நப்ஹான்*

## வித்தியாலய அபிவிருத்தி சங்க செயலாளரின் ஆசிச் செய்தி

வரலாற்றுச் சிறப்பு மிக்க பேருவளை மாளிகாச்சேனை பிரதேசத்தில் அமைந்துள்ள இன்னும் இரண்டு வருடங்களில் அதன் நூறாவது ஆண்டை அண்மித்துக் கொண்டிருக்கும் எமது பாடசாலையின் அபிவிருத்தி சங்க செயலாளர் என்ற வகையில் தினகரன் பத்திரிகையின் 91 ஆவது ஆண்டுநிறைவு விழாவை முன்னிட்டு நடைபெறும் ஹஜ்ஜுப் பெருநாள் போட்டி நிகழ்ச்சிக்கு ஆசிச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

மிக நீண்ட கால வரலாற்றைக் கொண்டுள்ள நமது பாடசாலை எத்தனையோ புத்திஜீவிகளையும் கல்விமான்களையும் உருவாக்கிய இக்கல்விக் கூடம் கடந்த சில வருடங்களாக நாட்டில் ஏற்பட்ட நெருக்கடி நிலைமை காரணமாக எமது பாடசாலையும் பற்பல பிரச்சினைகளை எதிர் கொண்டது.இந் நிலையில் 2023 ஆம் ஆண்டு புதிய எஸ்.டி.ஈ.சீ/ஓ.பி.ஏ மற்றும் ஓ.ஜி.ஏ தேர்வு இடம்பெற்றது. இந்நேரத்தில் எமது சமூகத்தின் எல்லா தரப்பினரையும் பிரதிநிதித்துவம் செய்யும் வகையில் சிறந்ததோர் பாடசாலை அபிவிருத்தி, பழைய மாணவ மாணவியர் சங்க அங்கத்தவர்களை எம்மால் பெற முடிந்தது.

அத்துடன் எமது பிரதேசத்தில் இந்த மாளிகாச்சேனை பாடசாலையை தமது சொந்த காணியில் அமைத்துத் தந்து அன்று முதல் எமது பாடசாலையின் மேம்பாட்டுக்காக உதவி ஒத்தாசைகளை வழங்கி வரும் காதிரியத்துன் நபவிய்யா தரீக்காவின் சங்கைக்குரிய செய்கு நாயகம் அன்னவர்களின் வழிகாட்டலின் பேரில் எமக்கு கிடைக்கப்பெற்ற சிறந்ததொரு பொக்கிஷம் அதிபர் எஸ்.ஆர் குமார் அவர்களாகும். 2023 மார்ச் 31 ம் திகதி எமது பாடசாலைக்கு அதிபர் எஸ்.ஆர் குமார் அவர்கள் கடமையேற்று வந்தார்.

அன்று முதல் எமது பாடசாலையின் மேம்பாட்டுக்காக இரவு, பகல் பாராமல் கடுமையாக உழைத்த அதிபர் எஸ்.ஆர். குமார் அவர்கள் குறுகிய இந்த நான்கு மாத காலத்தில் பாடசாலையின் அனைத்து நடவடிக்கைகளிலும் பாரிய மாற்றத்தை ஏற்படுத்தி இன்று எமது பிரதேசத்தில் ஒரு சிறந்த பாடசாலையாக உயர்த்தி உள்ளார்.

பாடசாலை அபிவிருத்தி சங்கம் என்ற வகையில் நாமும் அதிபரும் மேற்கொண்டு வரும் சகல நடவடிக்கைகளுக்கும் நமது பூரணமான ஆதரவை வழங்கி எதிர்வரும் நூற்றாண்டு விழாவின் போது சிறந்த கல்விமான்களையும், புத்திஜீவிகளையும் எமது நாட்டுக்கும் பிரதேசத்துக்கும் பெற்றுக் கொள்வதற்கு எங்களால் ஆன அத்தனை ஒத்துழைப்பையும் தொடர்ந்து வழங்குவோம் என உறுதிமொழி வழங்குவதோடு, தொடர்ந்து எமக்குப் பலவழிகளிலும் ஊக்கமும் உற்சாகமும் வழங்கி வரும் ஆசிரியர்கள், பெற்றார்கள், பழைய மாணவர்கள், பழைய மாணவிகள் நலன் விரும்பிகள்,அபிமானிகள், ஊர்மக்கள் அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளும் அதேவேளை மிகப் பெரிய சவால் மிக்க இப் பயணத்தில் நாம் அனைவரும் ஒன்றாக ஒற்றுமையாக கைகோர்த்து தொடர்ந்து இணைந்து பயணிக்க எல்லாம் வல்ல இறைவனது அருளையும், உங்கள் அனைவரது ஒத்துழைப்பையும் வேண்டிக் கொள்கிறேன்.

*பாடசாலை அபிவிருத்தி சங்க செயலாளர்,*
*எம்.எஸ்.எம் உஸ்மான்*


அதிபர் உட்பட தரங்கள் 1 - 5 வரையான வகுப்புத் தலைவர்கள்

தயாரிப்பு

பி.எம்.முக்தார்

# தினகரனின் ஹஜ்ஜுப் பெருநாள் சிறுவர் விளையாட்டு போட்டிகள் கிரிக்கெட் மற்றும் உதைப்பந்தாட்ட போட்டிகள் நாளை பேருவளையில்

## அனைத்து தரப்பினராலும் விரும்பி வாசிக்கப்படும் ஒரே பத்திரிகை

**பேருவளை விசேட நிருபர்**



இந்த நாட்டின் தேசிய பத்திரிகைகளுள் ஒன்றான தினகரனின் 91 ஆவது வருட பூர்த்தியை முன்னிட்டு வரலாற்று பிரசித்தி பெற்ற பேருவளை மாளிகாசேனை ஸேம் ரிபாய் ஹாஜியார் தேசிய பாடசாலை மைதானத்தில் விளையாட்டு நிகழ்ச்சிகள் நடைபெறுவதை முன்னிட்டு அதிபர் என்ற வகையில் பெருமகிழ்ச்சியடைகிறேன் என அதிபர் எஸ்.ஆர் குமார் தெரிவித்தார்.

அவர் தனது செய்தியில் மேலும் கூறியுள்ளதாவது,

இந்த விளையாட்டு நிகழ்வை நடாத்த எமது பாடசாலை விளையாட்டு மைதானத்தை தெரிவு செய்ததையிட்டு ஏற்பாட்டுக் குழுவினருக்கு நன்றி தெரிவிக்கிறேன். அதிபர் என்ற வகையில் எனதும் ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கம் மற்றும் பழைய மாணவர் சங்கத்தின் முழுமையான ஒத்துழைப்பை வழங்குவோம். இந்த நாட்டில் ஓர் முன்னணி செய்தி பத்திரிகையாக தினகரன் திகழ்கிறது. சிறுபான்மை மக்களின் உள்ளம் கவர்ந்த ஓர் பத்திரிகையாக இப்பத்திரிகை திகழ்கிறது.

சிறுவர் முதல் வயோதிபர் வரை, பணக்காரன் முதல் ஏழை வரை, முதலாளி முதல் தொழிலாளி வரை மிகவும் விரும்பி வாசிக்கும் தேசிய பத்திரிகை என்றால் அது தினகரனேயாகும்.

அரசியல், இலக்கியம், கலை, கலாசாரம், கல்வி, விளையாட்டு உட்பட பல்வேறு துறைகளின் மேம்பாட்டிற்கு தேசிய பத்திரிகையான தினகரன் கடந்த 9 தசாப்த காலமாக செய்துள்ள பங்களிப்பு பாராட்டத்தக்கதாகும்.

## தினகரன் பத்திரிகை ஆற்றி வரும் பணிகள் மகத்தானவை

**பேருவளை விசேட நிருபர்**



தினகரன், பத்திரிகையின் 91 ஆவது ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு பேருவளை மாளிகாசேனை ஸேம் ரிபாய் ஹாஜியார் தேசிய பாடசாலை விளையாட்டு மைதானத்தில் புனித ஹஜ்ஜுப் பெருநாளை முன்னிட்டு சிறுவர்களுக்கான மாபெரும் விளையாட்டு போட்டிகள் நடைபெறுவதையிட்டு பெருமகிழ்ச்சியடைகிறேன் என இலங்கை மருந்தாக்கக் கூட்டுத்தாபனத்தின் முன்னாள் தலைவரும் ரூமி ஹாஷிம் பவுன்டேசன் ஸ்தாபகருமான டாக்டர் ரூமி ஹாஷிம் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில் கூறியுள்ளார்.

அவர் தனது செய்தியில் மேலும் கூறியுள்ளதாவது, தினகரன் பத்திரிகையின் 90 ஆவது ஆண்டு விழாவும் கடந்த வருடம் பேருவளையில் நடாத்தப்பட்டது. 91 ஆவது வருட பூர்த்தி விழாவின் ஓர் அங்கமாக சிறுவர் விளையாட்டுப் போட்டி மற்றும் உதைப்பந்தாட்ட, கிரிக்கெட் போட்டிகளையும் நடத்தவுள்ளது.

இதனை பேருவளையில் நடாத்த முடிவு செய்ததையிட்டு நாம் தினகரன் பிரதம ஆசிரியர் உட்பட அதன் அத்தனை ஊழியர்களுக்கும் நன்றி தெரிவிக்கின்றேன். தினகரன் பத்திரிகைக்கும் களுத்துறை மாவட்ட முஸ்லிம்களுக்கும் இடையிலான தொடர்பு மிக நீண்ட காலமாக இருந்து வருகிறது. இந்த மாவட்ட மக்களின் பல்வேறு பிரச்சினைகளையும், வரலாற்று சாதனைகளையும் அபிவிருத்தி வேலைத்திட்டங்களையும் உலகறியச் செய்து தினகரன் பத்திரிகை ஆற்றி வரும் பணிகள் மகத்தானதாகும். தினகரன் தர்கா நகர் வாசகர் வட்ட தலைவரும் சமூக சேவையாளருமான எம். பாஸி ஸூபைரின் ஏற்பாட்டில் நடாத்தப்படும் இப் போட்டி இனிதே நிறைவேற வாழ்த்துகிறேன்.

## ஒன்பது தசாப்த கால வரலாற்றில் முஸ்லிம்களுக்கு ஒப்பற்ற பணியாற்றியுள்ள தினகரன்

1932ஆம் ஆண்டு ஏரிக்கரையில் உதித்த தினகரன் இன்று நாட்டின் நாலா பக்கங்களிலும் சுடர் பரப்பி பிரகாசித்துக் கொண்டிருக்கிறது. அது 91 ஆவது வருடத்தையும் கடந்துள்ளது.

இந்நாட்டின் பெரும்பாலான முஸ்லிம் வாசகர்களைக் கொண்ட தேசிய நாளிதழாக தினகரன் விளங்குகிறது. முஸ்லிம்களுக்கு இஸ்லாமிய சிந்தனையை ஊட்டுவதிலும் தினகரன் ஆற்றியுள்ள ஆற்றிவரும் மகத்தான பங்களிப்புக்கு முஸ்லிம் சமூகம் அதற்கு நன்றி கூறக்கடமைப்பட்டிருக்கிறது.

வாரத்தில் முஸ்லிம்களின் விசேட தினமாகக் கணிக்கப்படும் வெள்ளிக்கிழமை தோறும் இஸ்லாமிய சமயம் தொடர்பான விடயதானங்களை உள்ளடக்கிய ஒரு பக்கத்தை தினகரன் வெளியிட்டு வருகிறது.

ஆரம்ப நாட்களில் முஸ்லிம் மஞ்சரி என்றும் பின்னாளில் ஆலமுல் இஸ்லாம் என்ற அரபு பதந்தாங்கி இஸ்லாமிய உலகு என்ற பொருள் படும் பகுதி வெள்ளி தோறும் தினகரனில் பிரகாசித்துக் கொண்டிருக்கிறது. இதனால் பெரும்பாலான முஸ்லிம் வாசகர்களால் தினகரன் கவர்ந்திழுக்கப்படுகிறது.



அஷ்செய்கு முஸ்தபா ஜுமாஅஹ் மஸ்ஜித்

மர்ஹூம்களான அல்லாமா ம.மு. உவைஸ், ஏ. ஸீ. ஏ. வதூத், முக்தார் ஏ. முகம்மத், கலாநிதி எம்.ஏ. எம். சுக்ரி முஸ்லிம் வரலாற்றாய்வாளரான எம். ஐ. எம். அமீன் உள்ளிட்டோர்களது தொடர் கட்டுரைகளால் இந்நாட்டு முஸ்லிம்களை சிந்திக்கவும் செயற்படவும் தினகரன் தூண்டியதைஎவரும்மறுக்கவோ,மறக்கவோ மாட்டார்கள்.

முஸ்லிம் புத்திஜீவிகளுக்கு களம் அமைத்துக்கொடுத்தது போல தினகரன் முஸ்லிம் பகுதி முஸ்லிம் எழுத்தாளர்கள் வளரவும் கைகொடுத்துள்ளமை மற்றொரு சிறப்பம்சமாகும். இளம் முஸ்லிம் எழுத்தாளர் வளரும் ஒரு பண்ணையாகவும் தினகரன் ஆலமுல் இஸ்லாம் விளங்குகிறது. அவ்வப்போது முஸ்லிம்களுக்காக மாதா மாதம், வாராந்த பத்திரிகைகள் வெளிவந்து காலப் போக்கில்மறைந்தபோனவரலாறுகள் அதிகம். ஆனால் தினகரன் இஸ்லாமிய பக்கமோ அன்று முதல் இன்று வரையும் இடைவிடாது சளைக்காது வெளிவந்து கொண்டிருப்பது முஸ்லிம் சமூகத்துக்குக் கிடைத்த பேரருள் என்றே கூறலாம்.



பைத்துல் முபாரக் வ தாருல் முஸ்தபா புகாரி தகிய்யா

தினகரனின் முன்மாதிரியைக் கண்டே இதர நாளிதழ்கள், வார இதழ்களும் முஸ்லிம்களின் சமய பிரசாரத்திற்காக பக்கங்கள் ஒதுக்க முன்வந்தன என்பதையும் காண முடிகிறது.

தினகரன் வெள்ளிக்கிழமைகளில் முஸ்லிம் பகுதியை வெளியிடுவதுடன் நின்று விடாது முஸ்லிம்களின் நோன்புப் பெருநாள், ஹஜ்ஜுப் பெருநாள் மற்றும் மிஃராஜ் தினம் போன்ற விசேட தினங்களிலும் விசேட மலர்களையும் வெளியிட்டு குறித்த தினம் தொடர்பான குர்ஆன், ஹதீஸ் ஆதாரங்களுடன் சிறப்புக் கட்டுரைகளை வெளியிட்டு முஸ்லிம் வாசகர்களுக்கு மட்டுமல்லாது தமிழ் பேசும் இதர மதங்களைச் சார்ந்தோருக்கும் கட்டுரைகள் மூலம் சிறந்த தெளிவையும் விளக்கத்தையும் வழங்கி வருவதும் குறிப்பிடத்தக்கது.

எனது ஊடகப் பணி காலத்தில் தினகரன் பத்திரிகையின் முன்னாள் ஆசிரியர்களான கலாசூரி சட்டத்தரணி ஆர். சிவகுருநாதன், ராஜா சிறீகாந்தன், சிவா சுப்ரமணியம், எஸ். அருளானந்தன், எஸ்.தில்லைநாதன், க.குணராசா ஆகியோரின் உன்னத சேவைகளையும் இந்தச் சந்தர்ப்பத்தில் ஞாபகப்படுத்துவது சிறந்ததாகும். அதே போல் தற்போதைய ஆசிரியர் செந்தில் வேலவரின் தலைமையில் தினகரன் பத்திரிகை சிறந்த அம்சங்களுடன் முன்னேற்ற பாதையில் வீறுநடை போடுகிறது.

பேருவளை
**பீ.எம். முக்தார்**

## எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் கட்டுநாயக்கா விமான நிலையம் டிஜிட்டல் மயமாக்கப்படும்

**(அஷ்ரப் ஏ சமத்)**

எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் கட்டுநாயக்கா விமான நிலையம் டிஜிட்டல் மயமாக்கப்பட்ட உலகில் சிறந்த விமான நிலையமாக தரமுயர்த்தப்படும் என விமான சேவைகள், கப்பற்துறை மற்றும் துறைமுக அபிவிருத்தி அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

இலங்கை சிவில் விமான சேவைகள் தினத்தினை முன்னிட்டு (15) கட்டுநாயக்கா விமான நிலையத்தில் நடைபெற்ற நிகழ்வில் ஊடகவியலாளர்கள் மத்தியில் உரையாற்றும்போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,



டிஜிட்டல் முறையை நடைமுறைப்படுத்துவதன் மூலம் விமான நிலையத்திற்கு வருகின்ற பயணிகளின் முகத்தோற்றத்தை டிஜிட்டல் முறையில் பதிவு செய்து அவரது விசா விஷயங்கள், வங்கி முறைகள், உள்ளூர் ஹோட்டல்கள், போக்குவரத்து மற்றும் இன்னோரன்ன விடயங்களை இலகுபடுத்த முடியும்.

உலகில் உள்ள நாடுகளில் துபாய், சிங்கப்பூர் நாடுகள் மட்டுமே டிஜிட்டல் முறையில் இயங்குகின்றன. அதேபோல், விமான சேவை நவீனமுறையில் விருத்தி செய்யப்படவுள்ளதோடு உலகளாவிய விமான சிவில் பாதுகாப்பு, ஒளி சமிக்ஞைகள் மற்றும் விமான தரை ஓட்ட அபிவிருத்திகளையும் எதிர்காலத்தில் நாம் அபிவிருத்தி செய்ய திட்டமிட்டுள்ளோம்.

எமது நாட்டில் கடந்த காலத்தில் ஏற்பட்ட பொருளாதார பிரச்சினை, கொவிட் 19 போன்ற விஷயங்களில் நமது விமான சேவைகள் பின்னடைவை பெற்றன. தற்பொழுது நாம் அதிலிருந்து விடுபட்டு மீள் வளர்ச்சியடைந்து வருகின்றோம்.

ஜப்பான் நாட்டின் ஜயிக்கா உதவியுடன் விமான நிலைய அபிவிருத்திகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அதேபோல், எவ்வித இடைஞ்சலும் இன்றி 50 வீத சம்பளத்தை விமான நிலைய ஊழியர்களுக்கு வழங்கினோம். ஆனால் கொவிட் காலத்தில் குவைத் நாடுகளில் கூட விமான ஊழியர்களை அகற்றினார்கள். நாம் அவ்வாறு செய்யவில்லை. நமது விமானங்கள் ஓடாவிட்டாலும் நாம் சம்பளம் வழங்கி வருகிறோம்.

இலங்கையில் 215 விமான ஓட்டுநர்கள் இருந்தனர். அதில் ஒரு சிலர் தமது கூடிய சம்பளத்திற்கு வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளார்கள். அதனை எங்களால் நிறுத்த முடியாது. 5 எயார் லங்கா விமானங்கள் பழுதடைந்து தரித்து நிறுத்தப்பட்டுள்ளன. அதனை திருத்தி அமைப்பதற்கு வெளிநாட்டுக் கம்பெனிகள் இலங்கைக்கு வரவுள்ளன என்றார்.



இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் மாதாந்தம் நடாத்தும் 'நான் மறுபடியும் வந்து விட்டேன்' எனும் இசை நிகழ்ச்சி புதன்கிழமை (19) மாலை ஆனந்த சமரகோன் கலையரங்கத்தில் நடைபெற்றது. இந் நிகழ்வுக்கு விசேட அதிதியாக கலந்து சிறப்பித்த சிரேஷ்ட பாடகர் T.M. ஜயரத்னவுக்கு பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்த ஊடகத் துறை அமைச்சின் மேலதிக செயலாளர் E.M.S.B. ஜயசுந்தர, நிலையத்தின் பணிப்பாளர் நாயகம் நளீன் நிஸ்ஸங்க நிலையத்தின் ஆலோசகர் புரவலர் ஹாசிம் உமர் ஆகியோர் இணைந்து விருது வழங்குவதையும் கலந்து கொண்டவர்களையும் படத்தில் காணலாம்.

## மத்ரஸதுல் பாரி மாணவன் மனனப்பிரிவில் 2ஆம் இடம்

**(வெலிகம தினகரன் நிருபர்)**

முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம் மற்றும் இலங்கையிலுள்ள சவூதி அரேபியா தூதுவராலயம் ஆகியவற்றின் அனுசரணையுடன் அரபுக் கல்லூரிகளுக்கிடையில் அகில இலங்கை ரீதியாக நடை பெற்ற அல் குர்ஆன் மனனப் போட்டியில் வெலிகம கல்பொக்கை மத்ரஸதுல் பாரி அரபுக்கல்லூரி மாணவன் அப்துர் ரஹ்மான் ஸஅத் இரண்டாம் இடத்தைச் சுவீகரித்து கல்லூரிக்கு பெருமை சேர்த்துள்ளார். இப்போட்டி கடந்த 15, 16 ம் திகதிகளில் கொழும்பில் இடம் பெற்றது. 30, 20, 10, 05 ஜுஸ்உ என்ற பிரிவுகளாக இடம் பெற்ற இப்போட்டியில் 10 ஜுஸ்உ மனனப் பிரிவில் போட்டியிட்டே இம் மாணவன் இரண்டாம் இடத்தை பெற்றுக் கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.




## வாகனவிபத்தில்; தந்தை, மகன் உயிரிழப்பு

**(கல்நேவ தினகரன் விசேட நிருபர்)**

மதவாச்சி பிரதேசத்தில் இடம் பெற்ற வாகன விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த தந்தையும், மகனும் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளனர்.

இந்த விபத்துச் சம்பவம் (19) இரவு 8 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் உயிரிழந்த இருவரும் திருகோணமலை பிரதேசத்தை சேர்ந்த தந்தையும் மகனுமாகும்.

இவர்கள் பயணித்த மோட்டார் சைக்கிள் வேக கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி மரமொன்றுடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது. இதில் மோட்டார் சைக்கிளை செலுத்திச் சென்ற 22 வயதுடைய ஏ. சில்வெஸ்டர் என்ற இளைஞர் சம்பவ இடத்திலும் 48 வயதுடைய வி. அன்ரனிதாஸ் என்ற தந்தை பலத்த காயங்களுக்குள்ளாகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளனர்.

## மூன்று இராணுவ வீரர்கள் கைது

**அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**

பொலிஸ் சார்ஜன்ட் ஒருவரை மோதி பலத்த காயத்திற்குள்ளாக்கிய மூன்று இராணுவ சிப்பாய்களை இராஜாங்கனை பொலிஸார் (18) கைது செய்துள்ளனர்.

அளவுக்கு அதிகமாக குடித்துவிட்டு போதையில் ஒரு மோட்டார் சைக்கிளில் அநாகரிகமான விதத்தில் வீதியில் பயணித்த சிப்பாய்கள் மூவரையும் கைது செய்யச்சென்ற போதே குறித்த விபத்தை ஏற்படுத்தியுள்ளனர்.

கைது செய்யப்பட்டுள்ள மூன்று இராணுவ சிப்பாய்களும் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில்;

## கடலுக்குச் செல்லும் மீனவர்களுக்கு மீன் கிடைக்காமையினால் சிரமம்

**ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர்**

ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் மீன்பிடியில் ஈடுபடும் மீனவர்களுக்கு கடலுக்குச் சென்றும் மீன் கிடைக்காமையினால் மீனவர்கள் பாரிய பொருளாதார நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்து வருவதோடு மீன்பிடித் துறைமுகங்களும் மீன் விற்பனை நிலையங்களும் வெறிச்சோடி காணப்படுகின்றன.

இதனால் மீன் வியாபாரத்தில் ஈடுபட்டுவரும் மீன் வியாபாரிகளினதும் நாளாந்த வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. மீனவர்கள் கடலுக்குச் சென்று மீன் இன்றி திரும்பி வருவதினால் பாரிய செலவு ஏற்பட்டு தற்பொழுது கடன்காரர்களாகவும் மாறி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனால் இவர்கள் தங்களது படகுகளை கரையொதுக்கி கடலுக்குச் செல்வதை தவிர்த்து வருகின்றனர். மீனிற்கு தட்டுப்பாடு நிலவி வருவதினால் ஒரு சில வியாபாரிகள் மீனை வெளியூர்களிலிருந்து கொண்டு வந்து கூடுதல் விலைக்கு விற்பனை செய்து வருவதினால் நுகர்வோரும் பாதிக்கப்பட்டுள்ளனர். மக்களது நாளாந்த மீன் நுகர்வு பாரியளவில் குறைவடைந்துள்ளது.

Replies to Classifieds

&

Casual Advertisements published C/o the Daily News should only be sent by ordinary post.

Replies sent under registered cover will not be accepted.

## வலப்பனை பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட 2024 ஆண்டுக்கான கள்ளுத்தவறணைகளுக்கான கேள்விமனு கோரல்

மேற்கூறிய கள்ளுத்தவறணைகள் விற்பனை செய்வதற்கான கேள்விமனு கோரல் 2024.08.18ம் திகதி மு.ப. 10.30 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும் இது தொடர்பான அறிவித்தல் இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் 2023.07.21ம் திகதி வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

**உப அட்டவணை**

| இலக்கம் மற்றும் தவறணையின் பெயர் | தவறனை அமைந்திருக்கும் இடம் | கேள்விமனு பெற்றுக் கொள்ளும் இறுதி திகதி | கேள்வி மனு பெற்றுக்கொள்ளும் இறுதி நேரம் | கேள்வி மனு பிணைவைப்புப் பணம் |
|---|---|---|---|---|
| இல 05 பதியபெலெல்ல | பதியபெலெல்ல கிராம அலுவலர் பிரிவு | 2023.08.18 | மு.ப. 10.30 | ரூ. 5000.00 |

02. மேலதிக தகவல்களுக்கு பிரதேச செயலகத்துடன் தொடர்கொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

தொலைபேசி இல - 052-2278157

**எஸ்.பீ. லிந்தகும்புர**
**பிரதேச செயலாளர்.**
**வலப்பனை**

---

இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசாங்கம்

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு

**சிறு ஏற்றுமதி பயிர்த் தோட்ட மேம்பாட்டு பிரிவு**

**வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனம்**

## விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

கரும்பு போன்குவரத்துக்காக கொள்கலனுடனான 05 எண்ணிக்கையிலான இழுவண்டிகளை வழங்குவதற்கான
தேசிய போட்டி முறையிலான விலைமனுக்கோரல்
(PR 7464)

கரும்பு போன்குவரத்துக்காக கொள்கலனுடனான 05 எண்ணிக்கையிலான இழுவண்டிகளை வழங்குவதற்கான வழங்களுக்கான ஆர்வம் காட்டும் விலைமனுதாரர்களிடமிருந்து வறையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனத்தின் திணைக்கள பெறுகைக் குழு (DPC) தலைவரினால் முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

1. மீளளிக்கப்படாத கட்டணமாக **LKR 8,000.00** பணமாக செலுத்தி 2023 ஆகஸ்ட் 09 ஆம் திகதி வரை வேலை நாட்களில் நேரப்படி 09.00 மணி முதல் 15.00 மணிவரை வறையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனம், இல 27, மெல்போர்ன் ஒழுங்கை, கொழும்பு 04 என்ற முகவரிக்கு எழுத்துமூல விண்ணப்பமொன்றினை சமர்ப்பித்து விலைமனு ஆவணத்தின் முழுமையான தொகுதியொன்றை விலைமனுததரினால் கொள்வனவு செய்ய முடியும்.
2. விலைமனுவுடன் மீளளிக்கப்படாத கட்டண வைப்பு பற்றுச்சீட்டு அல்லது வங்கி வரைவை சமர்ப்பித்தல் வேண்டும். இணைக்கப்படாத அத்தகைய விலைமனு நிராகரிக்கப்படும்.
3. விலைமனுக்களை 2023 ஆகஸ்ட் 10 ஆம் திகதி இலங்கை நிலையான நேரப்படி 14.00 மணி தாமதிக்காது தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனம், இல.27, மெல்போர்ன் ஒழுங்கை, கொழும்ப 04 என்ற முகவரிக்கு கிடைப்பதற்கு முத்திரை பொறிக்கப்பட்ட கடித உறையில் பதிவுத் தபால், விரைதூதர், நேரடியாக கையளிக்கப்பட வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "கரும்பு போன்குவரத்துக்காக கொள்கலனுடனான 05 எண்ணிக்கையிலான இழுவண்டிகளை வழங்குவதற்கான கேள்விமனு" எனத் தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும். அதன் பின்னர் விலைமனுக்கள் உடனடியாக திறக்கப்படும். விலைமனுக்கள் திறக்கப்படும் சந்தர்ப்பத்தில் விலைமனுதாரர் அல்லது அவர்தம் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் பங்கேற்கலாம். தாமதமாக கிடைக்கும் விலைமனுக்கள் ஏற்கப்படமாட்டாது. கேள்விமனுக் குழுவின் முடிவு இறுதியானதாகும்.
4. அனைத்து மனுக்களுக்கும் "மனுப் பாதுகாப்பு" ரூ.375,000.00 (முன்நூற்று எழுபத்தைந்து ஆயிரம் ரூபாய்) இணைத்திருத்தல் வேண்டும் மேலும் விலைமனுக்கள் திறக்கப்பட்ட திகதியிலிருந்து 119 நாட்களுக்கு செல்லுபடியாகும்.
5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் வறையக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவன - தலைமை அதிகாரி (பெறுகை) இருந்து மேலதிக விபரங்களை பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி : **+94 11 5184184**, கைத்தொலைபேசி : **+94 77 010 3359**, தொலைநகல் : **+94 11 2500674**, (மின்னஞ்சல்: **sapumal@lscl.lk**).

தலைவர் - திணைக்கள பெறுகைக் குழு,
வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனம்,
இல-27, மெல்போர்ன் ஒழுங்கை,
கொழும்பு 04.

---

இலங்கை சனநாயக சோசலிச குடியரசு

**பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு**

**குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம்**

## கொள்முதல் இரத்துச் செய்தமைக்கான அறிவித்தல்

அனைத்து வருங்கால மனுதாரர்களுக்கும் கீழ்க்குறிப்பிடப்பட்ட விலைமனுக்கோரல் இரத்துச் செய்யப்பட்டுள்ளதாக இதன்மூலம் தெரிவிக்கப்படுகின்றது.

**குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்திற்காக 5,000,000 இலத்திரனியல் கடவுச்சீட்டுகள் (e-Passports) மற்றும் 'N' தொடர் இயந்திரம் மூலம் படிக்கக்கூடிய வெற்று கடவுச்சீட்டுகள் 500,000 'N' series blank Machine Readable Passports (MRPs) கொள்வனவு செய்வதற்கான கொள்முதல்**

1. மேற்குறிப்பிடப்பட்ட கொள்முதல் தொடர்பான 2023-06-12 ஆம் திகதியன்று வெளியிடப்பட்ட பத்திரிகை விளம்பரம் மற்றும் 2023-07-06 அன்று வெளியிடப்பட்ட ஆர்வ வெளிப்பாட்டுக்கான விலைமனுக்கோரல் (EOI) சமர்ப்பிப்பதற்கான திகதி நீட்டிப்பு அறிவிப்பு ஆகியவற்றின் அடிப்படையில், மேலே குறிப்பிடப்பட்ட கொள்முதல் முழுவதுமாக இரத்துச் செய்யப்பட்டுள்ளது என்பதை இதன் மூலம் அனைத்து வருங்கால மனுதாரர்களுக்கும் தெரிவிக்கிறோம். முந்தைய பத்திரிகை விளம்பரத்தினை எமது அதிகாரப்பூர்வ இணையதளப் பக்கத்திலிருந்து **(www.pubsec.gov.lk)** பெற்றுக்கொள்ளலாம்.
2. இது தொடர்பில் அமைச்சரவையின் தீர்மானத்தின் பிரகாரம் மேற்படி கொள்முதலை இரத்துச் செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. அனைத்து வருங்கால மனுதாரர்களுக்கும் 2023-07-19 முதல் நடைமுறைக்கு வரும் வகையில் நடத்தப்படும் அனைத்து கொள்முதல் நடவடிக்கைகளும் இரத்துச் செய்யப்படுவதாகவும், நபர் அல்லது நிறுவனங்களால் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சிக்கு செலுத்தப்பட்ட மீள்ச்செலுத்தப்படாத ஐம்பதாயிரம் ரூபாய் **(LKR 50,000.00)** ஆர்வத்தை வெளிப்படுத்தும் ஆவணத்தை பெற்றுக்கொண்டவர்களுக்கு மீளச்செலுத்தப்படும்.
3. மேற்குறிப்பிடப்பட்ட நபர் அல்லது நிறுவனங்கள் மீள்பெறமுடியாத கட்டணமான **LKR 50,000.00** ரூபாயைத் மீளப் பெற்றுக்கொள்வதற்காக தங்கள் நிறுவனத்தின் முகத்தலைப்பிலான கோரிக்கை கடிதத்தினை **ca@pubsec.gov.lk** எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்ப வேண்டும்.
4. ஆர்வ வெறிப்பாட்டாளர்களுக்கு எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம் மேலும் இந்த கொள்முதல் இரத்துச் செய்யப்பட்டமையால் ஏற்படும் சிரமத்திற்கு வருந்துகிறோம்.
5. மேலதிக விபரங்களை அமைச்சினால் நியமிக்கப்பட்ட பெறுகை குழுவின் செயலாளரிடமிருந்து **+94112887697/ +94112887307** (நீடிப்பு : **307**) தொலைநகல் **+94112887784** மற்றும் **ca@pubsec.gov.lk** மின்னஞ்சல் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

தலைவர்,
அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட பெறுகை குழு (CAPC),
பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு,
14வது மாடி, "சுஹுருபாய",
ஸ்ரீ சுபூதிபுர வீதி, பத்தரமுல்ல,
இலங்கை.

---

The Housewives' companion
Classifieds on
Daily News

---

## விலைமனுக்கான அழைப்பு

**வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனி**

**விலைக்கேள்வி இலக்கம் 002/T/2023**

**கட்டுநாயக்க - பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் 18ஆம் மைல் கல் முதல் நைகந்த வரையான பிரதேசத்தின் நிலச்சீராக்க பராமரிப்பாளரைத் தெரிவு செய்வதற்காக தேசிய போட்டி ரீதியில் விலைமனுக்கோரல்**

**(NATIONAL COMPETITIVE BIDDING FOR THE SELECTION OF MAINTENANCE OF LANDSCAPED AREAS FROM 18TH MILE POST JUNCTION UP TO NAIKANDA OF BANDARANAIKE INTERNATIONAL AIRPORT - KATUNAYAKE)**

ஒரு (01) வருட காலத்திற்கு காணி முகாமைத்துவம் மற்றும் நிலச்சீராக்கத் துறையில் முன்னைய அனுபவம் மற்றும் நிரூபிக்கப்பட்ட அனுபத்தைக் கொண்ட கீர்த்தி வாய்ந்த இலங்கைக்கு வெளியே பதிவு செய்யப்பட்ட நிறுவனங்கள் அல்லது இலங்கையில் வியாபாரப் பதிவு ஒழுங்கு விதிச் சட்டம் அல்லது கம்பனிகள் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட நிறுவனங்களிடமிருந்து விலைமனுக்கள் அழைக்கப்படுகின்றன.

இதற்கான விதிமுறைகளும் வரையறைகளும் மற்றும் குறித்த ஏனைய தகவல்கள் விலைக்கோரல் ஆவணங்களுடன் வழங்கப்படும். அக்குறித்த விலைக்கோரல் ஆவணங்களை 2023-07-24ஆம் திகதி முதல் 2023-08-14ஆம் திகதி வரை எந்தவொரு வேலை நாளிலும் மு.ப 09.00 மணியிலிருந்து பி.ப 2.30 மணிக்கு இடைப்பட்ட காலப்பகுதிக்குள் கடிதத் தலைப்பில் எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றைச் சமர்ப்பித்து மற்றும் 4,500/= ரூபா மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்தி, கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் வழங்கீட்டுத்தொடர் முகாமைத்துவ பிரிவிலிருந்து கொள்வனவு செய்யலாம். விலைமனுக்களை வரையறுக்கப்பட்ட விமான நிலைய மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனத்தின் www.airport.lk என்ற இணையதளத்திலிருந்தும் மீளளிக்கப்படாத 4,500/= ரூபா கட்டணத்தை நிகழ்நிலை (online) மூலமாகச் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். விலைமனுக்களை கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம், வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனத்தின் வழங்கீட்டுத்தொடர் முகாமைத்துவப் பிரிவு அலுவலகத்தில் இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

நிறுவனத்தினால் வழங்கப்படும் விலைக்கோரல் மாதிரிப்படிவங்களில் மாத்திரம் விலைக்கோரல்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்பதுடன், விலைக்கோரல் ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 200,000.00 இல. ரூபா பெறுமதியான விலைக்கோரல் பிணை முறியைச் சமர்ப்பித்தல் வேண்டும். விலைக்கேள்வி பிணைமுறி விலைக்கேள்வி திறக்கப்பட்ட திகதியிலிருந்து 150 நாட்கள் செல்லுபடியான விதத்தில் இலங்கை மத்திய வங்கியால் அங்கீகரிக்கப்பட்ட வணிக வங்கியொன்றினால் அல்லது இலங்கை மத்திய வங்கியால் அங்கீகரிக்கப்பட்ட இலங்கையில் செயற்படும் உரிமம் பெற்ற விஷேட வங்கியொன்றின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட வங்கி வரைவாக அல்லது பிணை முறியாக அல்லது பணமாக முன்வைக்கலாம்.

விலைக்கோரல்களை முன்வைப்பது தொடர்பான முன்னோடிக் கூட்டம் 2023-08-02ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம், வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனத்தின் மனித வளங்கள் பிரிவு, மாநாட்டு அறையில் இடம்பெறும். முத்திரை குறியிடப்பட்ட விலைமனுக்களை கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனம், வழங்கீட்டுத்தொடர் முகாமைத்துவ பிரிவில் வைக்கப்பட்டுள்ள 02ஆம் இலக்க கேள்விப்பெட்டியில் உள்ளிடல் வேண்டும். விலைமனுக்கள் 2023-08-15ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முடிவுறுத்தப்படும் என்பதுடன் அதன் பின் வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனம், வழங்கீட்டுத்தொடர் முகாமைத்துவ பிரிவில் திறக்கப்பட்டு பகிரங்கமாக வாசிக்கப்படும். விலைமனுக்கள் முடிவுறுத்தப்பட்டதன் பின்னர் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும் என்பதுடன் அவை திறக்கப்படாமலேயே திருப்பியனுப்பப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களினால் முறையாக அங்கீகாரம் அளிக்கப்பட்ட பிரதிநிதிகள் விலைமனுக்கள் திறக்கப்படும் வேளையில் கலந்துகொள்ளலாம்.

விலைக்கோரல்கள் தொடர்பான அனைத்து விபரங்களையும் கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம், புதிய நிர்வாகக் கட்டிடம், கட்டிடக்கலை, நிலச்சீராக்கம் மற்றும் உள்ளக வடிவமைப்புப் பிரிவிலிருந்து 011-2264420 எனும் தொலைபேசி இலக்கத்தில் அல்லது head.alid@airport.lk எனும் மின்னஞ்சலினூடாக பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்,**
**வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனம்,**
**பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம்,**
**கட்டுநாயக்க.**

---

**துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சு**

**வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) தனியார் நிறுவனம்**

## விலைக்கோரலுக்கான அழைப்பு

**மத்தள ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்தில் விமான ஓடுபாதை பிரதேசத்திற்கான (Airside) பாதுகாப்பு ஏற்பாட்டை நிர்மாணித்தல்**

**விலைக்கேள்வி இலக்கம். 0061/T/2022**

**(CONSTRUCTION OF SECURITY ARRANGEMENTS FOR AIRSIDE ACCESS AT MRIA, MATTALA.)**

பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ள மத்தள ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்தில் விமான ஓடுபாதை பிரதேசத்திற்கான (Airside) பாதுகாப்பு ஏற்பாட்டை நிர்மாணிப்பதற்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை வ/ப விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனத்தின் தலைவரினால் இப்போது விலைமனுக்கள் கோரப்படுகின்றன என்பதுடன் 10% எதிர்பாராத செலவுகள் மற்றும் வெட் வரியின்றி 13 மில்லியன் ரூபாவாகும்.

விபரக் குறிப்புகள் மற்றும் அளவுப் பத்திரம் மற்றும் திட்டங்களுக்கு அமைவாக சகல பொருட்கள் மற்றும் மனித வலுவை வழங்கும் ஏனைய சார்ந்த வேலைகள் உட்பட தொடர் வேலி உட்பட (ஏறத்தாழ 450 மீற்றர் நீளம்) வீதித் தடை படலையை நிர்மாணித்தல் என்பன இந்த வேலையில் உள்ளடங்குகின்றன.

நிர்மாணக் காலம் 60 நாட்களாகும்.

செயற்றிட்ட அமைவிடம் - மத்தள ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையம், மத்தள.

விலைக்கோரல்கள் தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் மூலம் நடைமுறைப்படுத்தப்படும்.

ஒப்பந்தத்தைக் கையளிக்கப்பெறுவதற்கான தகுதியைப் பெறுவதற்கு சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியாளர் பட்டியலுக்கு உட்படாதவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் இதற்கு நிகரான வேலைகளில் அனுபவம் சகிதம் நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA) - முன்னைய ICTAD - C5 அல்லது C6 தரத்திற்கான (கட்டிட நிர்மாணம்) பதிவைப் பெற்றிருத்தல் வேண்டும்.

ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மீளளிக்கப்படாத நான்காயிரம் (4000.00 ரூபா) ரூபாவை ரொக்கப் பணமாக செலுத்தியதன் பின் 2023-07-24ஆம் திகதி முதல் 2023-08-14ஆம் திகதி மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின், வ/ப விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனத்தின் சங்கிலி முகாமைத்துவப் பிரிவு, பெறுகைக் குழு, இல. 02, தலைவருக்கு (தொலைபேசி: 0112264102) எழுத்துமூலமான வேண்டுகோள் ஒன்றைச் செய்வதன் பேரில் ஆங்கில மொழியிலான முழுமையான விலைக்கோரல் ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். மேற்கூறப்பட்ட முகவரியில் விலைக்கோரல் ஆவணங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

சகல விலைமனுக்களுடனும் ஒரு இலட்சத்து ஐம்பதினாயிரம் ரூபா (ரூபா 150,000.00) தொகைக்கான விலைக்கோரல் பிணை முறியாக ரொக்கப் பணம் அல்லது விலைக்கோரல் ஆவணத்தின் தரவில் 5ஆம் பிரிவின் 16.2ஆம் வாசகத்தில் பட்டியலிடப்பட்டுள்ள நிறுவனத்தினால் வழங்கப்பட்ட நிபந்தனையற்ற விலைக்கோரல் முறியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

விலைக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்று 2023-08-03ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு மத்தள, மத்தள ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையம், பொறியியலாளர் அலுவலகத்தில் இடம்பெறும் என்பதுடன் இதில் சகல விலைமனுதாரர்கள் மற்றும் அவர்களின் வடிவமைப்பாளர்கள் கலந்துகொள்ள அழைக்கப்படுகின்றனர்.

நகல் பிரதிகளுடனான விலைமனுக்களை 2023-08-15ஆம் திகதி பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன் ஒன்றில் நேரில் கையளித்தல் வேண்டும் அல்லது தலைவர், பெறுகைக் குழு. இல. 02, சங்கிலி முகாமைத்துவப் பிரிவு, வ/ப விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனம், கட்டுநாயக்க எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். பிந்திக் கிடைக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் முன்னிலையில் விலைமனுக்கள் முடிவுறுத்தப்பட்டு உடன் திறக்கப்படும்.

மேலதிக தகவல்களுக்கு கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின், வ/ப விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனத்தின் சிவில் பொறியியல் (P&D) தலைவரை 011-2263502 / 011-2263507 எனும் தொலைபேசி இலக்கத்தில் அல்லது 011-2251356 தொலைநகல் இலக்கத்தில் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்,**
**வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனம்,**
**பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம்,**
**கட்டுநாயக்க.**

# இலங்கைக்கு எதிரான முதல் டெஸ்டில் பாகிஸ்தான் 4 விக்கெட்டுகளால் வெற்றி

## டெஸ்ட் சம்பியன்சிப்பில் இந்தியாவுடன் முதலிடம்



ஆரம்ப துடுப்பாட்ட வீரர் இமாமுல் ஹக் ஆட்டமிழக்காது பெற்ற 50 ஓட்டத்தின் உதவியோடு இலங்கைக்கு எதிரான முதலாவது டெஸ்ட் போட்டியில் பாகிஸ்தான் அணி 4 விக்கெட்டுகளால் வெற்றியீட்டி இரண்டு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரில் 1–0 என முன்னிலை பெற்றது.

காலி சர்வதேச அரங்கில் நடைபெற்ற இந்த டெஸ்ட் போட்டியில் பாகிஸ்தான் அணிக்கு 131 ஓட்டங்களே வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்டது. இந்நிலையில் 48 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளை இழந்த நிலையில் நேற்று கடைசி நாள் ஆட்டத்தை ஆரம்பித்த பாகிஸ்தான் அணி மேலும் மூன்று விக்கெட்டுகளை பறிகொடுத்தது.

அணித்தலைவர் பாபர் அஸாம் 24 ஓட்டங்களுடன் சுழற்பந்து வீச்சாளர் பிரபாத் ஜயசூரியவின் பந்துக்கு விக்கெட்டை பறிகொடுத்ததோடு முதல் இன்னிங்ஸில் இரட்டைச் சதம் பெற்ற சவுத் ஷகீல் 30 ஓட்டங்களுடன் வெளியேறினார். சப்ராஸ் அஹமட் வந்த வேகத்தில் 1 ஓட்டத்துடன் ஆட்டமிழந்ததால் பாக். குறுகிய வெற்றி இலக்கை எட்டுவதில் போராட வேண்டி ஏற்பட்டது.

எனினும் 25 ஓட்டங்களுடன் நேற்றைய நாள் ஆட்டத்தை தொடர்ந்த இமாமுல் ஹக் ஒருமுனையில் நிதானமாக ஆடி பாகிஸ்தான் அணியின் வெற்றியை உறுதி செய்தார். 84 பந்துகளுக்கு முகம்கொடுத்த அவர் 4 பௌண்டரிகள் மற்றும் ஒரு சிக்ஸருடன் ஆட்டமிழக்காது 50 ஓட்டங்களை பெற்றார்.

எனினும் அந்த அணி பகல்போசண இடைவேளைக்கு முன்னரே 32.5 ஓவர்களில் 6 விக்கெட்டுகளை இழந்த நிலையில் 133 ஓட்டங்களை பெற்று வெற்றியீட்டியது.

இதன்போது பாகிஸ்தான் அணிக்கு நெருக்கடி கொடுத்த பிரபாத் ஜனசூரிய 14.5 ஓவர்களில் 56 ஓட்டங்களை விட்டுக்கொடுத்து 4 விக்கெட்டுகளை பதம்பார்த்தார். முதல் இன்னிங்ஸில் 5 விக்கெட்டுகளை வீழ்த்திய ரமேஷ் மெண்டில் ஒரு விக்கெட்டை சாய்த்தார்.

அடிக்கடி மழை குறுக்கிட்ட இந்த டெஸ்ட் போட்டியில் நாணய சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி முதல் இன்னிங்ஸில் 312 ஓட்டங்களை பெற்றதோடு தொடர்ந்து ஆடிய பாகிஸ்தான் அணி முதல் இன்னிங்ஸுக்காக 461 ஓட்டங்களை பெற்றது.

இந்நிலையில் முதல் இன்னிங்ஸில் 149 ஓட்டங்களால் பின்தங்கிய இலங்கை அணி இரண்டாவது இன்னிங்ஸில் 279 ஓட்டங்களையே பெற்றது. இதில் பாகிஸ்தான் அணியின் வெற்றிக்கு முக்கிய காரணமாக இருந்த இரட்டை சதம் பெற்ற சவூத் ஷகீல் ஆட்ட நாயகன் விருதை வென்றார்.

பாகிஸ்தான் அணி சரியாக ஓர் ஆண்டுக்கு பின்னரே டெஸ்ட் போட்டி ஒன்றில் வெற்றியீட்டியுள்ளது. இதற்கு முன்னர் இதே காலி மைதானத்தில் சரியாக 2022 ஜூலை 20 ஆம் திகதி இலங்கைக்கு எதிராக சரியாக 4 விக்கெட்டுகளால் வெற்றி பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இந்த வெற்றியுடன் பாகிஸ்தான் அணி ஐ.சி.சி டெஸ்ட் சம்பியன்சிப் புள்ளிப் பட்டியலில் 100 வெற்றி வீதத்தை பெற்று இந்தியாவுடன் முதலிடத்தை பகிர்ந்து கொண்டுள்ளது.

இலங்கை மற்றும் பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டி எதிர்வரும் ஜூலை 24 ஆம் திகதி கொழும்பு, எஸ்.எஸ்.சி மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது.

# பாகிஸ்தான்–ஆப்கான் தொடர் இலங்கையில்



பாகிஸ்தானுக்கு எதிராக அடுத்த மாதம் நடத்த ஏற்பாடாகியுள்ள ஆப்கானிஸ்தானின் இரு தரப்பு ஒருநாள் தொடரை இலங்கையில் நடத்த திட்டமிடப்பட்டிருப்பதாக செய்தி வெளியாகியுள்ளது.

இலங்கையில் ஒரு மைதானத்தில் பாகிஸ்தானுக்கு எதிரான போட்டிகளை நடத்துவதற்கு இலங்கை கிரிக்கெட் சபையை காபுலை தளமாகக் கொண்ட ஆப்கான் கிரிக்கெட் சபை அணுகி இருப்பதாக தெரியவருகிறது. இதற்கான மைதானம் மற்றும் அரங்கை வாடகைக்கு பெற இலங்கை கிரிக்கெட் சபையுடன் இணக்கம் எட்டப்பட்டிருப்பதாகவும் கூறப்படுகிறது.

ஆப்கான் கிரிக்கெட் போட்டிகள் எமிரேட்ஸ் கிரிக்கெட் சபை மற்றும் இந்திய கிரிக்கெட் சபையினாலேயே கடந்த காலங்களில் நடத்தப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் இந்த மூன்று போட்டிகளுக்கான திகதி மற்றும் இடம் விரைவில் தீர்மானிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

"ஆப்கானில் எந்த மைதானமும் இல்லை. இலங்கையில் ஆடுவது ஆசிய கிண்ணம் மற்றும் உலகக் கிண்ணத்திற்கு சிறந்த ஏற்பாடாக இருக்கும்" என்று பாக். கிரிக்கெட் சபை வட்டாரம் தெரிவித்துள்ளது.

# தென்கிழக்கு பல்கலைக்கழக கராட்டே சம்பியன்சிப் போட்டி

மாளிகைக் காடு குறூப்



தென்கிழக்கு பல்கலைக்கழக பீடங்களுக்கிடையிலான கராட்டே சம்பியன்சிப் போட்டியில் ஆண்கள் மற்றும் பெண்கள் ஆகிய இரு பிரிவுகளிலும் வர்த்தக முகாமைத்துவ பீடம் வெற்றிபெற்றது.

உடற்கல்வித்துறை திணைக்கள பொறுப்பதிகாரி முஹம்மது இக்பால் மேற்பார்வையில் இடம்பெற்ற இந்த போட்டியில் பெண்கள் பிரிவில் பொறியியல் பீடம் இரண்டாம் இடத்தையும், ஆண்கள் பிரிவில் இஸ்லாமிய கலாசார, அரபு மொழியியல் பீடம் இரண்டாம் இடத்தையும் பெற்றுக் கொண்டன.

# சம்மாந்துறை நீதவான் நீதிமன்ற அணி வெற்றி

சவளக்கடை குறூப் நிருபர்



சம்மாந்துறை சட்டத்தரணிகள் சங்கம் ஏற்பாடு செய்த சினேகபூர்வ மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் சம்மாந்துறை நீதவான் நீதிமன்ற ஊழியர்கள் அணி வெற்றிபெற்றது.

சம்மாந்துறை மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற இந்தப் போட்டியில் சம்மாந்துறை சட்டத்தரணிகள் சங்க கிரிக்கெட் அணி நிர்ணயித்த 116 ஓட்ட வெற்றி இலக்கை நீதவான் நீதிமன்ற ஊழியர்கள் அணி இலகுவாக எட்டியது.

இந்நிகழ்வில் கல்முனை மேல் நீதிமன்ற நீதிபதி ஜே. ரொட்ஸ்கி, கல்முனை மாவட்ட நீதிபதி ஏ.எம்.எம். ரியால், கல்முனை நீதவான் நீதிமன்ற நீதிபதி எம்.எஸ்.எம். சம்சுதீன் ஆகியோர்கள் கலந்துகொண்டனர்.

### பிஃபா மகளிர் உலகக் கிண்ணம்:

# முதல் போட்டியில் அயர்லாந்துக்கு அதிர்ச்சி கொடுத்தது நியூசிலாந்து



அவுஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்தில் நேற்று ஆரம்பமான மகளிர் உலகக் கிண்ண கால்பந்து போட்டியில் முதல் ஆட்டத்தில் நோர்வே அணியை 1–0 என வீழ்த்தி நியூசிலாந்து அதிர்ச்சி கொடுத்தது.

உலகக் கிண்ணத்தில் நியூசிலாந்து மகளிர் அணி பெற்ற முதல் வெற்றியாகவும் இது பதிவானது.

ஒக்லாந்தின் ஈடன் பார்க் அரங்கில் நடைபெற்ற இந்தப் போட்டியின் முதல் பாதியில் ஈடுகொடுத்து ஆடிய நியூசிலாந்து அணி நோர்வே வீராங்கனைகளுக்கு பெரும் சவாலாக செயற்பட்டனர்.

இந்நிலையில் 48 ஆவது நிமிடத்தில் ஹன்னா வில்கின்ஸன் கோல் புகுத்த அது நியூசிலாந்தின் வெற்றி கோலாக மாறியது. எனினும் டுவா ஹான்செனின் கையில் பந்து பட்டதால் கிடைத்த பெனால்டி வாய்ப்பை நியூசிலாந்து வீராங்கனை எவென் ரியா பெர்சிவன் தவறவிட்டார்.

நியூசிலாந்து இதற்கு முன்னர் 15 மகளிர் உலகக் கிண்ண போட்டிகளில் ஆடி இருந்தபோதும் அது ஒரு போட்டியில் கூட வெற்றி பெற்றதில்லை.

மறுபுறம் 1995 உலக சம்பியனான நோர்வே மகளிர் அணி இந்தப் போட்டியில் தோல்வியை தவிர்க்க போராடிய போதும் 42 ஆயிரத்துக்கும் அதிகமான ரசிகர்கள் அரங்கில் ஆரவாரம் செய்ய அந்த அணியால் ஆதிக்கம் செலுத்த முடியாமல் போனது.

நடப்புச் சம்பியன் அமெரிக்கா உட்பட இம்முறை பிஃபா மகளிர் உலகக் கிண்ண போட்டியில் மொத்தம் 32 அணிகள் பங்கேற்றுள்ளன. எட்டு குழுக்களாக நடைபெறும் ஆரம்ப சுற்று போட்டிக்கு பின்னர் நொக் அவுட் சுற்று நடைபெறவுள்ளது. தொடரின் இறுதிப் போட்டி எதிர்வரும் ஒகஸ்ட் 20 ஆம் திகதி சிட்னியில் நடைபெறவுள்ளது.

# சம்பியனானது ஜொலிபோய்ஸ்



அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்

கோட்டைக்கல்லாறு சுவாட்டி விளையாட்டு கழகத்தின் ஏற்பாட்டில் அமரர். இராமச்சந்திரன் தனேஸ் ஞாபகார்த்த வெற்றி கிண்ண கிரிக்கெட் சுற்றுத்தொடரில் அக்கரைப்பற்று ஜொலிபோய்ஸ் விளையாட்டுக் கழகம் சம்பியனானது. கோட்டை கல்லாறு பொது விளையாட்டு மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற இந்தத் தொடரின் இறுதிப்போட்டியில் அக்கரைப்பற்று சம்பியன் விளையாட்டு கழகத்தை ஜொலிபோய்ஸ் தோற்கடித்தது. ஜொலிபோய்ஸ் அணித்தலைவர் சுஜிதன் தொடர் நாயகன் விருதை வென்றார்.

## சர்வதேச செய்திகள்

### குர்ஆன் எரிப்புக்கு திட்டம்:

# ஈராக்கில் சுவீடன் தூதரகத்திற்கு ஆர்ப்பாட்டக்காரர்கள் தீ வைப்பு



சுவீடனில் குர்ஆனை எரிக்கும் ஆர்ப்பாட்டத்திற்கு திட்டமிட்ட நிலையில் ஈராக் தலைநகர் பக்தாதில் உள்ள சுவீடன் தூதரகத்தை நேற்று (20) முற்றுகையிட்ட ஆர்ப்பாட்டக்காரர்கள் அதற்கு தீ வைத்துள்ளனர்.

ஸ்டொக்ஹோமில் உள்ள ஈராக் தூதரகத்திற்கு வெளியில் ஒன்றுகூட ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு ஸ்வீடன் நிர்வாகம் அனுமதி அளித்துள்ளது. இதன்போது புனித குர்ஆன் பிரதி மற்றும் ஈராக்கிய தேசிய கொடிக்கு தீ வைக்கவும் ஏற்பாட்டாளர்கள் திட்டமிட்டிருந்தனர்.

இதற்கு எதிராகவே செல்வாக்கு மிக்க மதத் தலைவரான மொக்ததா சதிரின் ஆதரவாளர்கள் நேற்று காலை பக்தாதில் ஆர்ப்பாட்டம் நடத்தியுள்ளனர். இதன்போது சுவீடன் தூதரக மதில் சுவரில் ஏறிக் குதித்த ஆர்ப்பாட்டக்காரர்கள் அங்கு தீவைத்து சேதம் ஏற்படுத்தியுள்ளனர்.

அனைத்து தூதரக பணியாளர்களும் பாதுகாப்பாக இருப்பதாக சுவீடன் வெளியுறவு அமைச்சு தெரிவித்துள்ளது. தூதரகம் மீதான தாக்குதலுக்கு ஈராக் வெளியுறவு அமைச்சு கடும் கண்டனத்தை வெளியிட்டுள்ளது.

கடந்த ஜூன் மாதம் ஸ்டொக்ஹோமில் உள்ள பள்ளிவாசலுக்கு வெளியில் குர்ஆன் பிரதியை எரித்து கடும் எதிர்ப்பை ஏற்படுத்திய சல்வான் மொமிகா என்பவரே மீண்டும் குர்ஆனை எரிப்பதற்கு திட்டமிட்டிருந்ததாக சுவீடன் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. இவர் சுவீடனில் வாழும் ஈராக்கைச் சேர்ந்த அகதியாவார்.

# உக்ரைன் செல்லும் கப்பல்களுக்கு ரஷ்யா எச்சரிக்கை: கோதுமை விலை அதிகரிப்பு





உக்ரைன் துறைமுகங்களை நோக்கி செல்லும் கப்பல்கள் இராணுவ இலக்குகளாக கருதப்படும் என்று ரஷ்யா எச்சரித்த நிலையில் உலக சந்தையில் கோதுமை விலை வேகமாக அதிகரித்துள்ளது.

உக்ரைனிய தானியங்கள் கருங்கடல் வழியாக பாதுகாப்பாக பயணிப்பதை உறுதி செய்யும் ஒப்பந்தத்தில் இருந்து ரஷ்யா இந்த வாரம் வெளியேறியது.

இந்நிலையில் பொதுமக்கள் கப்பல்கள் மீதான தாக்குதல்களுக்கு உக்ரைன் மீது குற்றம் சுமத்த ரஷ்யா திட்டமிட்டுள்ளதாக வெள்ளை மாளிகை செய்தித் தொடர்பாளர் குற்றம் சாட்டினார்.

எனினும் தமது கோரிக்கைகள் நிறைவேற்றப்படும் பட்சத்தில் இந்தத் தானிய உடன்படிக்கைக்கு திரும்ப முடியும் என்று ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் தெரிவித்துள்ளார். இதில் ரஷ்யாவின் விவசாய வங்கியை உலகளாவிய கொடுப்பனவு அமைப்பு ஒன்றில் இணைக்கும் கோரிக்கையும் உள்ளடங்கும்.

இந்நிலையில் உக்ரைனின் துறைமுக நகரான மைகொலைவ் மீது ரஷ்யா கடந்த புதன் (19) இரவு நடத்திய வான் தாக்குதல் ஒன்றில் 18 பேர் காயமடைந்துள்ளனர். மற்றொரு துறைமுக நகரான ஒடெசாவிலும் தாக்குதல் இடம்பெற்றிருப்பதாக செய்தி வெளியாகியுள்ளது.

இதேவேளை ஐரோப்பிய பங்குச் சந்தையில் கோதுமை விலை முந்தைய நாளிலிருந்து புதன்கிழமை 8.2 வீதம் உயர்ந்து, ஒரு தொன்னுக்கு 253.75 யூரோ ஆக இருந்ததோடு சோளத்தின் விலை 5.4 வீதம் அதிகரித்துள்ளது.

அமெரிக்காவில் கோதுமை விலை புதனன்று 8.5 வீதமாக உயர்ந்ததோடு உக்ரைன் மீதான ரஷ்யாவின் படையெடுப்பைத் தொடர்ந்து அதிக உச்ச தினசரி அதிகரிப்பாக இது இருந்தது.

ரஷ்ய தாக்குதல்களில் 60,000 தொன் தானியங்கள் அழிந்து தானிய ஏற்றுமதி உட்கட்டமைப்புகளில் கணிசமான சேதம் ஏற்பட்டிருப்பதாக உக்ரைன் விவசாயத்துறை அமைச்சர் மைகோலா சொல்ஸ்கி தெரிவித்துள்ளார்.

ரஷ்யா கடந்த செவ்வாய்க்கிழமை தானிய உடன்படிக்கையில் இருந்து வாபஸ் பெற்று சில மணி நேரங்களின் பின் உக்ரைனிய துறைமுகங்களை இலக்கு வைத்து தாக்குதல் நடத்தியமை குறிப்பிடத்தக்கது.

# நியூசிலாந்தில் துப்பாக்கி சூடு: இருவர் உயிரிழப்பு





பிஃபா மகளிர் உலகக் கிண்ண கால்பந்து போட்டி ஆரம்பிப்பதற்கு சில மணி நேரத்திற்கு முன்னர் நியூசிலாந்தின் ஒக்லாந்து நகரில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூடு ஒன்றில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

கட்டுமானத் தளம் ஒன்றில் நேற்று (20) காலை இடம்பெற்ற இந்த சம்பவத்தில் பொலிஸ் அதிகாரிகள் உட்பட ஆறு பேர் காயமடைந்திருப்பதோடு துப்பாக்கிதாரியும் உயிரிழந்துள்ளார்.

எனினும் இது பயங்கரவாத செயல் இல்லை என்று பிரதமர் கிறிஸ் ஹிப்கின்ஸ் தெரிவித்துள்ளார். உலகக் கிண்ணம் திட்டமிட்டபடி நடைபெறும் என்றும் அவர் தெரிவித்தார்.

அந்த கட்டுமானத் தளத்தில் இருப்பவர்கள் மீது துப்பாக்கிதாரி சுட ஆரம்பித்த நிலையில் அங்கு விரைந்த பொலிஸார் நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்ததாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். நேற்று ஆரம்பமான மகளிர் உலகக் கிண்ணத்தின் முதல் போட்டி ஒக்லாந்தின் ஈடன் பார்க்கில் நியூசிலாந்து மற்றும் நோர்வே அணிகளுக்கு இடையில் நடைபெற்றது.

# இஸ்ரேலிய படையினரால் பலஸ்தீனர் சுட்டுக்கொலை



ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரை நகரான நப்லூஸில் இஸ்ரேலிய படையினரின் துப்பாக்கிச் சூட்டில் பலஸ்தீனர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டதாகவும் மேலும் நால்வர் காயமடைந்ததாகவும் பலஸ்தீன சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

நப்லூஸ் பகுதியில் இஸ்ரேலிய படையினர் மற்றும் குடியேறிகளுடன் மோதல் ஏற்பட்டதாக பலஸ்தீன போராளிகள் குறிப்பிட்டிருக்கும் நிலையிலேயே நேற்று அதிகாலை பலஸ்தீனர் கொல்லப்பட்டுள்ளார்.

இதில் நான்கு பலஸ்தீனர்கள் துப்பாக்கி காயத்திற்கு உள்ளாகி இருக்கும் நிலையில் இருவரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாக பலஸ்தீன செம்பிறை சங்கம் தெரிவித்துள்ளது.

நப்லூஸ் நகர் இஸ்ரேலின் சட்டவிரோத குடியேறிகள் அதிகம் வசிக்கும் பகுதியாகும். நப்லூஸில் கடந்த பெப்ரவரியில் இஸ்ரேலிய படை நடத்திய சுற்றிவளைப்பில் 11 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டு மேலும் 80க்கும் அதிகமானோர் காயமடைந்தமை குறிப்பிடத்தக்கது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 ஜூலை மாதம் 21ம் திகதி வெள்ளிக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

# இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு

## பாதுகாப்பு சேவை வழங்குவதற்கான விலைமனுக்கோரல்

**2023/2024 ஆம் ஆண்டுக்கான இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குப்படுத்தும் ஆணைக்குழுவின் தலைமை அலுவலகம் மற்றும் 2023/2024 ஆம் ஆண்டுக்கான கதிரானை மற்றும் ஹந்தானையில் அமைந்துள்ள இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குப்படுத்தும் ஆணைக்குழுவின் வானொலி அலைவரிசை கண்காணிப்பு நிலையம் அம்பாந்தோட்டை தகவல் தொழில்நுட்ப பூங்கா, மடுகந்த கோபுர நிலையம்.**

1. கொழும்பு 8, எல்விட்டிகல மாவத்தை, இல-276 இல் அமைந்துள்ள இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் திணைக்கள வழங்கல் குழு (தலைமை) தலைவரினால் 2023.10.01 ஆம் திகதி முதல் ஒருவருடகாலத்திற்கு உபகரணங்கள், கட்டிடம் மற்றும் வளாகங்களுக்கு பாதுகாப்பு சேவையினை வழங்குவதற்காக அங்கீகரிக்கப்பட்ட ஆர்வமுள்ள தரப்பினர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

   (அ) இலக்கம் 276, எல்விட்டிகல மாவத்தை, கொழும்பு - 08 இல் அமைந்துள்ள தலைமை அலுவலகம்.

   (ஆ) கதிரானை மற்றும் ஹந்தானையில் அமைந்துள்ள TRCSL வானொலி அலைவரிசை கண்காணிப்பு நிலையத்தில் ஹந்தானையில் அமைந்துள்ள TRCSL வானொலி அலைவரிசை கண்காணிப்பு நிலையம், அம்பாந்தோட்டை தகவல் தொழில்நுட்ப பூங்கா, மடுகந்த கோபுர நிலையம்.

2. இதற்காக ஆர்வமுள்ள மனுதாரர்கள் மீள்செலுத்தப்படும் கட்டணம் **ரூ.3,000/-** னை **2023.08.10** ஆம் திகதி வார நாட்களில் **மு.ப.9.00 மணி முதல் பி.ப.03.00** மணி வரை இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் பணிப்பாளர் (நிர்வாகம் மற்றும் மனிதவளப்பிரிவில்) எழுத்துப்பூர்வ விண்ணப்பத்தை சமர்ப்பிப்பதன் மூலம் மனு ஆவணங்களைப் பெற்றுக்கொள்ள முடியும். (அ) மற்றும் (ஆ) க்கு தனி விண்ணப்பத்தை சமர்ப்பிக்க வேண்டும்.

3. மனுதாரர்கள், இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் நிர்வாகம் மற்றும் மனித வளப் பிரிவிலிருந்து 2023.07.21 முதல் 2023.08.04 ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் இறுதித் திகதிக்கு ஒரு வாரத்திற்கு முன்னர் மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

   **(தொ.பே.: 011-2673486 Fax: 011-2689355)**

4. (அ) பிரிவிற்காக **"2023/2024 ஆம் ஆண்டுக்கான இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குப்படுத்தும் ஆணைக்குழுவின் தலைமை அலுவலகத்திற்கு பாதுகாப்பு சேவை வழங்குவதற்கான விலைமனுக்கோரல்" கதிரானை** மற்றும் (ஆ) பிரிவிற்காக **ஹந்தானையில் அமைந்துள்ள இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குப்படுத்தும் ஆணைக்குழுவின் வானொலி அலைவரிசை கண்காணிப்பு நிலையம் அம்பாந்தோட்டை தகவல் தொழில்நுட்ப பூங்கா, மடுகந்த கோபுர நிலையத்திற்கான விலைமனுக்கோரல்"** எனக் குறிப்பிட்டு கடித உறையின் மேல் இடது பக்க மூலையில் தனித் தனியாக முத்திரையிடப்பட்ட மனு ஆவணத்தினை **2023.08.11** ஆம் திகதி **பி.ப.02.00** மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்குமாறு **"தலைவர், திணைக்கள கொள்முதல் குழு (தலைமை), இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு, 276, எல்விட்டிகல மாவத்தை, கொழும்பு 8"** எனும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பிவைப்பதன் மூலமாகவோ அல்லது இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவில் வைக்கப்பட்டுள்ள மனுப் பெட்டியில் இடுதல் வேண்டும். மனு கோரல் முடிந்தவுடன் மனுதாரர்கள் முன்னிலையில் உடனடியாக மனுக்கள் திறக்கப்படும்.

**தலைவர்,**
**திணைக்கள வழங்கல் குழு (தலைமை),**
**இலங்கை தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு**
**இல-276, எல்விட்டிகல மாவத்தை,**
**கொழும்பு 8.**

# இலங்கை துறைமுக அதிகார சபை

## விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

1. பின்வரும் பொருட்களுக்காக தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை இலங்கை துறைமுக அதிகார சபையின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழுவின் தவிசாளர் கோருகிறார்.

| கேள்வி இல. | கேள்வியின் பெயர் | கேள்விப் பிணைத் தொகை (ரூபா) | ஆவணக் கட்டணம் (VAT உள்ளடக் கப்பட்டுள்ளது) | முடிவுறுத்தல் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| CES/FP/06/PT/6483(MP) | Spare Parts for Terberg Yard Tractors | 50,000.00 | 1,000.00 | 17-08-2023 மு.ப. 10.00 மணி |
| CES/FP/02/PT/6444(MAR) | Spares for Propeller Shaft arrangement of the Pilot Launches Pilot 17 & 18 | 28,000.00 | 1,000.00 | 17-08-2023 மு.ப. 10.00 மணி |
| CMS/LP/22/PT/04/059 | Trouser Blue Drill ( Track Bottom ) – 8000 Nos – 2023 | 75,000.00 | 1,000.00 | 10-08-2023 பி.ப. 1.30 மணி |
| CES/LP/23/PT/04/058 | Engine Spares for Terberg Terminal Tractors | 25,000.00 | 1,000.00 | 10-08-2023 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/23/PT/17/060 | 40 Nos. 12V 65AH UPS Batteries | 30,000.00 | 1,000.00 | 10-08-2023 பி.ப. 1.30 மணி |

2. 5 மில்லியன் ரூபாவிற்கு மேற்படும் கேள்விகளுக்கு 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் ஏற்பாடுகள் பிரயோகிக்கப்படும் என விலைமனுதாரர்கள் இத்தால் அறிவுறுத்தப்படுகிறார்கள். இதற்கமைய சகல தரப்பினரும் மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு கேள்வியின் பொருட்டும் ஒப்பந்தக் காலப்பகுதியில் கூறப்பட்ட சட்டத்தை கண்டிப்பாக பின்பற்றுதல் வேண்டும். மேலும் யாராவது விலைமனுதாரர் ஒரு முகவராகவோ, உப முகவராகவோ, ஒரு பிரதிநிதியாகவோ அல்லது யாராவது வெளிநாட்டு உற்பத்தியாளரின் சார்பில் பெயர் குறிப்பிடப்பட்டவராகவோ அல்லது வழங்குநரோ தம்மை பொது ஒப்பந்தங்கள் பதிவாளரிடம் பதிவு செய்து கொள்ளும்படி வேண்டப்படுவதோடு முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட பதிவுச் சான்றிதழை கேள்வி ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
3. விலைமனுதாரர்கள் மேற்குறிப்பிட்டவைகளுக்கு நிகரான பொருட்களை வழங்கும் வியாபாரத்தில் ஆகக் குறைந்தது ஐந்து (5) வருடங்கள் ஈடுபட்டிருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிகத் தகவல்களை பிரதான முகாமையாளர் (வழங்கல்) அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் விலைமனு ஆவணங்களை பின்வரும் முகவரியில் அலுவலக நேரங்களில் பரீட்சித்துப் பார்க்கலாம்.
5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 4ம் நிரலில் குறித்துரைக்கப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்தியதன் பின் 2023 ஜுலை 21ஆம் திகதி தொடக்கம் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான நேரத்தில் முடிவுறுத்தப்படும் திகதிக்கு முதல் நாள் வரை பின்வரும் முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவுகள் காசாகச் செலுத்தப்படல் வேண்டும்.
6. விலைமனுக்கள் பின்வரும் முகவரிக்கு இறுதி நேரம் அல்லது அதற்கு முன்னர் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. விலைமனுக்கள் பின்வரும் முகவரியில் முடிவுறுத்தப்படும் வேளையில் நேரடியாகச் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களுடனும் மேற்குறிப்பிடப்பட்ட விலைமனுப் பிணையொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

**பிரதான முகாமையாளர் (வழங்கல்கள் மற்றும் பொருள்வள முகாமைத்துவம்),**
**வழங்கல்கள் பிரிவு,**
**இலங்கை துறைமுக அதிகார சபை,**
**இல. 45, லேடன் பஸ்தியன் வீதி, கொழும்பு-01.**
**தொலைபேசி எண்கள் : 2482231, 2483338, 2482499, 2482832, 2482409, 2482652, 2483024, 2482638**
**தொலைநகல் எண் : 2381652, 2470443**

# கேள்வி அறிவித்தல்

## கட்டடங்கள் திணைக்களம்

## கிழக்கு மாகாணம்

01 நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA) கட்டடங்கள் நிர்மாணத்திற்கு பதிவு செய்யப்பட்டுள்ள கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தரத்தையுடைய கேள்விதாரரிடமிருந்து திணைக்கள பெறுகைக்குழுத் தலைவரினால் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வேலைகளுக்கு மூடிய கேள்விகள் கோரப்படுகின்றன.

02 இது தேசிய போட்டி விலைக்கேள்வி முறையாக மற்றும் ஒருகட்ட ஒருகடிதவுறை முறைமையாக இருந்தாலும் "விலை மனுக் கோரலானது தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் மூலம் நடாத்தப்படும். இந்த பெறுகையின் கீழ் செயற்படுத்தப்படவுள்ள வேலையின் மதீப்பீடு செய்யப்பட்ட பெறுமதியானது (VAT மற்றும் ஏனைய வரிகள் நீங்கலானவை) 50மில்லியன் ரூபாவிற்கு குறைவானதினால் பிராந்திய முன்னுரிமை மற்றும் CIDA தர முன்னுரிமை ஆகியன 09.02.2023ம் திகதிய 04/2016(iv) என்ற அரச நிதிச் சுற்றறிக்கையில் நிர்ணயிக்கப்பட்டவாறு பிரயோகிக்கப்படும்"

03 நிர்மாண ஒப்பந்தத்திற்கு தகுதியுடைய ஒப்பந்தக்காரர், நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA) கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டட நிர்மாணத்தரத்தில் பதிவு செய்யப்பட்டிருப்பதுடன், மோசடியில் ஈடுபட்ட ஒப்பந்தக்காரர்களின் கறுப்புப் பட்டியலில் இடம்பெறாதவராக இருத்தல் வேண்டும்.

04 மீளளிக்கப்படாத கட்டணமாகிய அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையினை கல்முனை கட்டடங்கள் திணைக்கள, பிரதம எந்திரி அலுவலகத்தில் செலுத்தி, பெற்றுக் கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டை கல்முனை கட்டடங்கள் திணைக்கள, நிறைவேற்று எந்திரி அலுவலகத்தில் சமர்ப்பிக்குமிடத்து 10.08.2023 பிற்பகல் 03.00 மணிவரை அலுவலக நேரங்களில் கேள்விப் பத்திரங்களை பெற்றுக் கொள்ளலாம்.

05 கேள்வி கோருபவர் தமது CIDA பதிவுப் புத்தகத்தின் உண்மை பிரதியினை சமர்ப்பித்து கேள்விப் பத்திரங்களை பெற்றுக்கொள்ளலாம். கேள்வி கோருபவர் ஒருவருக்கு ஆவணங்கள் இரு பிரதிகளில் மட்டுமே விநியோகிக்கப்படும். தகுதியான கேள்விதாரர்கள் கேள்வி பத்திரங்களை இலவசமாக பார்வையிடுவதோடு மேலதிக விபரங்களை கல்முனை கட்டடங்கள் திணைக்கள நிறைவேற்று எந்திரி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி இல: 067-2229153)

06 கீழே தரப்பட்டுள்ள கேள்வித் தொகைக்கான கேள்விப் பிணை கேள்விகளுடன் இணைக்கப்பட்டு தலைவர், திணைக்களப் பெறுகைக்குழு, மாகாணப் பணிப்பாளர் அலுவலகம், கட்டடங்கள் திணைக்களம், கி.மா, உட்துறைமுகவீதி, திருகோணமலை என்ற முகவரிக்கு 11.08.2023, பிற்பகல் 02.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னதாக ஒப்படைக்கப்படல் வேண்டும். கேள்விகள், சமுகமளிக்கும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் மாகாணப் பணிப்பாளர் அலுவலகம், கட்டடங்கள் திணைக்களம், கி.மா, உட்துறைமுகவீதி, திருகோணமலையில் உடனடியாகத் திறக்கப்படும். தாமதமாகக் கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படும்.

07 முன்கேள்விக் கூட்டம் 26.07.2023 மு.ப 10.00 மணிக்கு கல்முனை, கட்டடங்கள் திணைக்கள, பிரதம எந்திரி அலுவலகத்தில் இடம் பெறும்.

08 பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதி முடிவாக அமையும்.

**அட்டவணை**

| வேலைகளின்விபரம் | CIDA தரம் | மதீப்பீட்டுத் தொகை (ரூபா) | ஒப்பந்தக் காலம் | மீளளிக்கப் படாத கட்டணம் (ரூபா) | கேள்வி செல்லுபடி யாகும் காலம் | கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | தொகை (ரூபா) | காலம் |
| அம்பாறை மாவட்டம், தெகியத்தகண்டி மாவட்ட ஆயுர்வேத வைத்தியசாலையில் 24 படுக்கை கொண்ட வாட்தொகுதி நிர்மாணித்தல் (மிகுதி வேலைகள்) | C7,C6 மற்றும் C 5 | 20.128 மில்லியன் | 06 மாதங்கள் | 12,000.00 | 91 நாட்கள் (09.11.2023 வரை) | 201,500.00 | 119 நாட்கள் (07.12.2023 வரை) |

**மாகாணப் பணிப்பாளர்,**
**கட்டடங்கள் திணைக்களம்,**
**கிழக்கு மாகாணம்,**
**உட்துறைமுக வீதி,**
**திருகோணமலை.**

**எந்திரி.க. சந்திரமோகன்**
**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக்குழு.**

**தொலைபேசி இல: 026-2222630**
**திகதி: 2023.07.21**

# கேள்விக்கோரல் தொடர்பான அறிவித்தல்

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு

## இலங்கை பொலிஸ்

இலங்கை பொலிஸின் வழங்கல் சபைத் தலைவர் சார்பாக பொலிஸ் தலைமையக கட்டிட பிரிவின் பணிப்பாளரால் கீழ்வரும் செயற்றிட்டங்களை செயற்படுத்துவதற்குரிய திறன்களும் தகைமைகளையும் உடைய கேள்விதாரர்களிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன.

| விடய இலக்-கம் | செயற்றிட்டம் | செயற்றிட்ட கால வரையறை (நாட்கள்) | உத்தேசிக்கப்படும் பணி பெறுமதி (மில்லியன் ரூபா) | பிணை பாதுகாப்பு பெறுமதி (ரூபா) | CIDA நிறுவனத்தின் பதிவு தரம்/ சிறப்பியல்பு | மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணம் (ரூபா) |
|---|---|---|---|---|---|---|
| 01 | மருதானை கெட்டவலமுல்ல பொலிஸ் உத்தியோகப்பூர்வ இல்ல கட்டிடத்தின் வாகன தரிப்பிடத்தை நவீனமயப்படுத்தல். **LA/B1(B)/64/21** | 120 | 7.53 | 80,000.00 | C8 ,C7 அல்லது C6 மாத்திரம். (Buildings) | 2,750.00 |
| 02 | மருதானை கெட்டவலமுல்ல பொலிஸ் உத்தியோகப்பூர்வ இல்ல கட்டிட 126/1,2/1 இலக்கமுடைய உத்தியோகப்பூர்வ வீட்டை புனரமைத்தல். **LA/B1(B)/111/20** | 120 | 7.80 | 90,000.00 | C8 ,C7 அல்லது C6 மாத்திரம். (Buildings) | 2,800.00 |
| 03 | கொழும்பு 05 இலுள்ள பொலிஸ் துறை தலைமையக முகாமின் நீர்த்தாங்கியினை புதுப்பித்தல். **LA/B7/08/21** | 120 | 7.43 | 80,000.00 | C8 ,C7 அல்லது C6 மாத்திரம். (Buildings) | 2,700.00 |
| 04 | களுத்துறை பொலிஸ் பாடசாலையின் மகுல் மடுவ விரிவுரை மண்டபத்தை புதுப்பித்தல். **LA/B1(B)/72/15** | 300 | 56.12 | 850,000.00 | C4 மற்றும் C3 மாத்திரம். (Buildings) | 9,500.00 |
| 05 | நாரஹேன்பிட்டிய பொலிஸ் வைத்தியசாலை வார்ட் இலக்கம் 06 இனை புதுப்பித்தல். **LA/B7/77/20** | 120 | 12.20 | 180,000.00 | C7, C6 மற்றும் C5 மாத்திரம். (Buildings) | 4,000.00 |
| 06 | கொழும்பு 02 கியு வீதியிலுள்ள பொலிஸ் உத்தியோகப்பூர்வ இல்ல கட்டிட நுழைவுப்பாதைக்கு காப்பட் இடல். **LA/B1(B)/09/19** | 120 | 7.98 | 100,000.00 | C8 ,C7 அல்லது C6 மாத்திரம். (Buildings) | 2,850.00 |

1. தேசிய போட்டி நடைமுறைக்கேற்ப கேள்விக்கோரல் நடாத்தப்படும். விடய இலக்கம் 01,02,03,05 மற்றும் 06 இன் கீழ் குறிப்பிடப்படும் செயற்றிட்டங்களுக்கு அரச நிதிசார் சுற்றறிக்கை இலக்கம் 04/2016(II) இற்கு விதிமுறைகள் உரித்தாவதோடு மாகாண எல்லையினுள் பதிவு செய்துள்ள கேள்விதாரர்களுக்கு அச்சுற்றறிக்கையில் குறிப்பிடப்படுள்ள விதிமுறைகளுக்கேற்ப மாகாணத்துக்கான முன்னுரிமையளிக்கப்படும்.

2. மேற்குறிப்பிட்ட அனைத்து செயற்றிட்டங்களும் 1987ஆம் ஆண்டு 03ஆம் இலக்கமுடைய பொது ஒப்பந்த சட்டத்தின் விதிமுறைகளுக்கு கீழ்ப்படும். ஆகையால் இச்செயற்றிட்டங்களுக்கான கேள்விகள் திறக்கப்படும் போது இச்சட்டத்தில் பதிவு செய்து PCA/03 சான்றிதழை கேள்விப்பத்திரங்களுடன் இணைத்து சமர்ப்பிக்க வேண்டும்.

3. கொழும்பு 01 இலுள்ள பொலிஸ் தலைமையகத்திலுள்ள பணிப்பாளர் (கட்டிடம்) காரியாலய தொலைபேசி இலக்கம் 0112013184 ஊடாக மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ள முடிவதோடு கேள்விப்பத்திரங்களை வார நாட்களில் **2023.07.21 மற்றும் 2023.08.11 வரை 09.00 முதல் 1500** வரை இலவசமாக பரிசீலனை செய்யலாம். ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் இக்குறிப்பிட்ட காலத்தினுள் மீளளிக்கப்படாத கட்டணத்தை பணமாக பணிப்பாளர் (கட்டிடம்) க்கு செலுத்தி கேள்விப்பத்திரங்களை கொள்வனவு செய்யலாம்.

4. சமர்ப்பிக்கப்படும் கேள்விகள் 91 நாட்கள் வரை செல்லுபடியாக வேண்டும்.

5. மேற்குறிப்பிட்ட பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதிகளுக்கான செல்லுபடியாகும் பிணைப் பாதுகாப்பினை கேள்விப்பத்திரங்களில் குறிப்பிட்டுள்ள நிறுவனங்களிடமிருந்து மாத்திரம் பெற்றுக்கொண்டு "பொலிஸ் மாஅதிபர்" என்ற பெயரில் முன்வைக்க வேண்டியதோடு **2023.12.10** ஆம் திகதி வரை செல்லுபடியாக வேண்டும். (கேள்விகளை ஏற்றுக்கொள்ளும் இறுதித்திகதியிலிருந்து 119 நாட்கள்)

6. **2023.08.14 ஆம் திகதி 1000** க்கு முன்னர் முத்திரையிடப்பட்ட கேள்விகள் இரண்டு பிரதிகளாக கொழும்பு 01, பொலிஸ் தலைமையகத்தின் ஐந்தாம் மாடியிலுள்ள கணக்காளர் (கட்டிடம்) காரியாலயத்திலுள்ள கேள்விப்பெட்டியிலிடவும். பிந்திக்கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விகளை ஏற்றுக்கொள்தல் முடிவடைந்தவுடன் கேள்விதாரர்கள் மற்றும் அவர்களால் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் அவை திறக்கப்படும்.

**இலங்கை பொலிஸ் வழங்கல் சபை சார்பாக,**
**பணிப்பாளர் (கட்டிடம்),**
**பொலிஸ் தலைமையகம்,**
**கொழும்பு 01.**

# இலங்கை புகையிரத திணைக்களம்

## 2024/2025 ஆண்டிற்கான தேசிய வழங்குநர்களைப் பதிவு செய்து கொள்ளல

இலங்கை புகையிரத திணைக்களத்திற்கு 2024/2025 ஆண்டிற்காக பின்வரும் வகுதிகளின் பண்டங்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்காக அரச திணைக்களங்கள், அரச அங்கீகாரம் பெற்றுள்ள வியாபார நிறுவனங்கள், அரசாங்க கூட்டுத்தாபனங்கள், அங்கிகாரம் பெற்றுள்ள வழங்குநர்கள், தேசிய முகவர்கள், வர்த்தக நிறுவனங்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

02. வழங்குநரொருவராகப் பதிவு செய்து கொள்வதற்கான கட்டணமாக மீளளிக்கப்படாத ரூபா 2000/- மற்றும் ஒவ்வொரு வகுதிக்குமாக தனித்தனியாக இன்னும் ரூபா 1000/- வீதமாக தொகையையும் இலங்கை புகையிரத திணைக்களத்தின் புகையிரத பொது முகாமையாளரின் மக்கள் வங்கியின் நகர மத்திய (மிட்சிட்டி) கிளையின் இலக்கம் 176 - 1001 - 990 - 27357 என்ற கணக்குக்கு 2023.08.21 அன்று பி.ப. 2.30 இற்கு முன்னர் காசாக வைப்புச் செய்து பெற்றுக் கொள்ளும் பற்றுச்சீட்டு விண்ணப்பங்கள் மற்றும் ஏனைய ஆவணங்களுடன் பதிவுத்தபாலில் அனுப்புவதற்கு அல்லது நேரில் கொண்டுவந்து ஒப்படைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளவும் அனைத்து விபரங்கள், நிபந்தனைகள் மற்றும் விண்ணப்பப்படிவங்களை www.railway.gov.lk என்ற இணையத்தில் தரவிறக்கம் செய்து கொள்ளலாம்.

03. ஏற்கனவே வழங்குநர்களாக இத்திணைக்களத்தில் பதிவு செய்து கொண்டுள்ள விண்ணப்பதாரர்களும் மீண்டும் 2024/2025 ஆண்டிற்காகப் பதிவு செய்து கொள்ளல் கட்டாயமாகும்.

04. வழங்குநர், 2023 ஆண்டிற்காக பெசேவ (VAT) இற்காக செல்லுபடியாகும் தன்மையில் பதிவு செய்யப் பெற்றுள்ளமையை உறுதிப் படுத்தும் வகையில் தேசிய வருமான வரித் திணைக்களத்தில் பெற்றுக் கொள்ளப்படும் சான்றிதழின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதியொன்று சமர்ப்பிக்கப்படல் வேண்டும். அவ்வாறு சமர்ப்பிக்காத வழங்குநர்கள் VAT இற்காகப் பதிவு செய்து கொள்ளாதவர்களாக கருதப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

05. விலைமனுக் கோரல் மின்னஞ்சல் மூலம் மாத்திரம் மேற்கொள்ளப்படுவதுடன் எனினும் உரிய தினம் உரிய நேரத்திற்கு முன்னர் விலைமனுக்கள் பதிவுத் தபாலில் அல்லது நேரில் கொண்டுவந்து ஒப்படைத்தல் வேண்டும்.

06. பதிவு செய்யப்படும் வழங்குநர்கள் குறித்த நிபந்தனைகளிற்கமைவாக வழங்கல்களை மேற்கொள்ளல் வேண்டுமென்பதுடன் குறித்த மாதிரிகள் மற்றும் விபரக்குறிப்புக்களிற்கமைவாக பண்டங்களை வழங்குதல் வேண்டும். மூன்று முறை விலைமனுக் கோரப்பட்டு விலை மனுக்களைச் சமர்ப்பிக்கத்தவறும் அல்லது உரிய நேரத்தில் பண்டங்களை வழங்குவதற்கு தவறும் அல்லது ஒத்துக் கொள்ளப்பட்டவாறு கடனுக்கு பண்டங்களை வழங்கத்தவறும் அல்லது ஏற்றுக் கொள்ளப்படக் கூடிய காரணங்களின்றி மாதிரிகளைச் சமர்ப்பிக்கத்தவறும் வழங்குநர்களிடமிருந்து மீண்டும் விலைமனுக் கோருவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட மாட்டாது. எந்தவொரு விண்ணப்பத்தையும் ஏற்றுக் கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமை இலங்கை புகையிரத திணைக்களத்திற்கு உரித்தாகும் பண்டங்கள் மற்றும் சேவைகளிற்காக விலைமனுக் கோரல் பொதுவாக பதிவு செய்யப் பெற்றுள்ள வழங்குநர்களிடமிருந்து மேற்கொள்ளப்படுவதுடன் போட்டி ரீதியிலான விலைகள் பெற்றுக் கொள்ளத் தேவையான பொழுது விலைமனுக்கள் ஏனைய வழங்குநர்களிடமிருந்தும் பெற்றுக் கொள்ளும் உரிமை புகையிரத திணைக்களத்திற்கு உரித்தாகும்.

07. பதிவு செய்து கொள்வதற்காக சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பப்படிவங்களில் பின்வரும் விடயங்கள் உள்ளடக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

1. பிழைகளின்றிப் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள்
2. வியாபார நிறுவனத்தின் பெயர் மற்றும் தன்மை
3. உற்பத்தியாளரொருவரா அல்லது பண்டங்களை விநியோகிப்போரா என்ற விபரம்
4. வியாபார முகவரி, தொலைபேசி இலக்கம், தொலை நகல் இலக்கம் மற்றும் மின்னஞ்சல் முகவரி
5. ஏற்கனவே அரச நிறுவனங்களிற்கு சேவைகளை வழங்குவதாயின் அவற்றின் ஆவணங்களின் பிரதிகள்
6. வியாபாரப் பதிவுச் சான்றிதழின் போட்டோ பிரதியொன்று
7. கடன் வசதிகளை வழங்கக் கூடிய கால எல்லை (ஆகக் குறைந்தது ஒரு மாத காலத்திற்கு)
8. கடந்த 06 மாத காலத்திற்கான வங்கிக் கூற்று
9. விலை மனுக் கோரல் மேற்கொள்ளப்படும் வேளையில் VAT செலுத்தி முடிவுற்றவராக தேசிய வருமான வரித் திணைக்களத்தினால் பெற்றுக் கொள்ளப்படும் சான்றிதழின் பிரதியொன்று
10. பதிவு செய்து கொள்ளும் விடயங்களின் வகுதிகள்

08. விண்ணப்பங்களை அடக்கும் உறைகளின் இடது பக்க மேல் மூலையில் 'வழங்குநர்களைப் பதிவு செய்தல் 2024/2025' எனக் குறிப்பிட்டு 2023.08.21 அன்று அல்லது அதற்கு முன்னர் பிரதிப் பொது முகாமையாளர் (பெறுகை) பெறுகை உப திணைக்களம், த.பெ. 1347, கொழும்பு -10 என்ற முகவரிக்குப் பதிவுத் தபாலில் அனுப்புவதற்கு அல்லது நேரில் கொண்டுவந்து ஒப்படைப்பதற்கு முடியும்.

மேற்படி 07ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு சரியான விபரங்கள் இன்றி அல்லது ஆவணங்களின்றி அனுப்பப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**பண்டங்களின் பெறுகை,**
**தேசிய வழங்குநர்களைப் பதிவு செய்து கொள்ளல் 2024/2025**
**பண்டங்கள் மற்றும் சேவைகள் தொடர்பான அட்டவணை.**

1) Rubber goods.
